# தமிழரசு

# Tamilarasu

(Monthly)

அக்டோபர் 2022 (October 2022)
விலை ரூ. 20/– (Price Rs. 20/-)

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 53
இதழ் (Issue) : 4



உத்தமர் காந்தியடிகள் அவர்களின் பிறந்தநாள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 29.09.2022 அன்று சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை சார்பில், சென்னையில் உள்ள அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியில் தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்திற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள 30 இளம் வல்லுநர்களுக்கு 30 நாட்கள் வகுப்பறை பயிற்சியுடன்கூடிய இரண்டாண்டு புத்தாய்வுத் திட்டத்தினைத் தொடங்கிவைத்து, இளம் வல்லுநர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

# மகிழ்வுடன் இரத்த தானம் செய்திடுவோம்!
# மனித உயிர்களைக் காத்திடுவோம்!



மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
தேசிய தன்னார்வ இரத்த தான நாள்
செய்தி (30.09.2022)

இரத்த தானம் மூலம் மதிக்கத்தக்க மனித உயிரைக் காப்பாற்றுவது புனிதமான செயலாகும். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இரத்த தானம் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் திங்கள் முதல் நாள் தேசிய தன்னார்வ இரத்த தான தினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டிற்கான தேசிய தன்னார்வ இரத்த தான தினத்தின் கருப்பொருள் "ஒற்றுமையுடன் இரத்த தானம் செய்வோம். ஒருங்கிணைந்த முயற்சியுடன் உயிர்களைக் காப்போம்" என்பதாகும்.

தன்னார்வ இரத்த தானத்தின் முக்கியத்துவத்தை மக்கள் அனைவரும் அறிந்திடும் வகையில் விழிப்புணர்வைத் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தி வருகிறது. அறிவியலில் ஏராளமான கண்டுபிடிப்புகள் நிகழ்த்தி இருந்தாலும் இரத்தம் என்ற அரிய திரவத்தை இன்னும் செயற்கையாக உருவாக்க இயலவில்லை. ஒவ்வொருவரின் உடலிலும் சுமார் 5 லிட்டர் இரத்தம் உள்ளது. இரத்த தானத்தின்போது 350 மி.லி இரத்தம் மட்டுமே எடுக்கப்படுகிறது. இரத்த தானம் செய்ய 20 நிமிடங்களே ஆகும். இரத்த தானம் செய்தவுடன் வழக்கம்போல் அன்றாட வேலைகளை மேற்கொள்ளலாம். 18 வயது முதல் 65 வயது வரை உள்ள ஆரோக்கியமான அனைவரும் 3 மாதத்திற்கு ஒரு முறை இரத்த தானம் செய்யலாம். தானமாகப் பெறப்படும் ஒரு அலகு இரத்தம் 3 உயிர்களைக் காப்பாற்றும். உரியக் கால இடைவெளியில் இரத்த தானம் செய்வதால் உடலில் புதிய செல்கள் உருவாகி அவர்களின் உடல் நலன் காக்கப்படுகிறது. அரசு இரத்த மையங்கள் மற்றும் தன்னார்வ இரத்த தான முகாம்களில் இரத்த தானம் செய்யலாம்.

இரத்த மையங்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்காக e-RaktKosh என்ற வலைத்தளம் செயல்பாட்டில் உள்ளது. இத்தளத்தில் இரத்த தான முகாம் மற்றும் இரத்தக் கொடையாளர்களைப் பதிவு செய்து கொள்ளலாம், இரத்த வகைகளின் இருப்பைத் தெரிந்துகொள்ளும் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் இத்தளத்தைப் பயன்படுத்தித் தங்களுக்குத் தேவைப்படும் நேரங்களில் எளிதில் இரத்தம் பெற்றுக்கொள்ளலாம்.

ஆண்டுதோறும் இரத்தக் கொடையாளர்கள் மற்றும் இரத்த தான முகாம் அமைப்பாளர்களைத் தமிழ்நாடு அரசு பாராட்டிச் சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கிக் கௌரவித்து வருகிறது.

இரத்தம் தேவைப்படும் நோயாளிகளுக்கு எளிதில் இரத்தம் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டுத் தொடர் தன்னார்வ இரத்தக் கொடையாளர்களின் விவரங்களைப் பதிவுசெய்ய கணினிமயமாக்கப்பட்ட பதிவேடும் மற்றும் செயலியும் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

கடந்த ஆண்டு அரசு மற்றும் தனியார் இரத்த மையங்கள் மூலம் 90 விழுக்காடு இரத்தம் சேகரிக்கப்பட்டுத் தன்னார்வ இரத்த தானத்தில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. நடப்பாண்டில் தன்னார்வ இரத்த தானத்தில் தமிழ்நாடு 100 விழுக்காடு இலக்கை எய்திடவும், விலைமதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்றிடப் பொதுமக்கள் அனைவரும் பெருமளவில் தன்னார்வ இரத்த தானம் செய்திடவும் முன்வர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மகிழ்வுடன் இரத்த தானம் செய்திடுவோம்!
மனித உயிர்களைக் காத்திடுவோம்!!

# தமிழரசு

**தமிழ்நாடு அரசு**

**செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு**

திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது வருடம் : புரட்டாசி - ஐப்பசி

**அக்டோபர் 2022**

மலர் : 53 விலை ரூ.20 இதழ் : 4



ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **வீ.ப. ஜெயசீலன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
**இரா. அண்ணா**
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
**அ. மகேஸ்வரி**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
**சு. தீபா**
**எஸ். உதயா கதிரவன்**
**ச. மஞ்சுளா**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
**அ. சுகுமார்**
**மு. மணிமேகலை**
**கு. சுபாஷ்**

கணினி வடிவமைப்பு
**தி. ஜெய்சங்கர்**
**க.இரா. உமாமகேஸ்வரி**

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
**கோ. சந்திரசேகர்**



தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.




துணைநலம் ஆக்கந் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாந் தரும். குறள்: 651

ஒருவருக்குக் கிடைக்கும் துணைவர்களால் வலிமை பெருகும்; அவர்களுடன் கூடி ஆற்றிடும் நற்செயல்களால் எல்லா நலன்களும் கிட்டும்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

## இந்த இதழில்...


★ பசிப்பிணிப் போக்குதலும், அறிவுப் பசிக்குத் தீனி போடுதலும் அரசினுடைய முதன்மைக் கொள்கைகள் ....5

★ தடைகளைத் தகர்த்து, சாதனைகளைப் படைத்திடுங்கள் ....10

★ கொளத்தூரில் ரூ.111.80 கோடியில் 840 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ....15

★ "தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் தொடக்கம்" ....22

★ சிறந்த மாணவர்களாக அனைவரையும் உருவாக்குவதே "சிற்பி" திட்டத்தின் நோக்கம் ....25

★ ரூ.17.84 கோடியில் திண்டுக்கல்லில் ஒருங்கிணைந்த இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் ....29

★ பாண்டியர் காலத்தில் தமிழ் வளர்த்த மதுரை, தொழில் வளர்ப்பதிலும் முன்னணியில் விளங்குகிறது ....34

★ வனச்சூழலைப் பாதுகாத்திட தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது ....44

★ தமிழைத் தமிழே என்று அழைக்கக் கூடிய சுகம் வேறு எதிலும் இருக்காது ....49

★ ரூ.174.48 கோடியில் நடைபெற்றுவரும் வெள்ளத் தடுப்புப் பணிகள் ஆய்வு ....56

★ வலவன் ஏவா வான ஊர்தி ....69


## முதலாம் பக்க அட்டை

உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 154ஆவது பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் 02.10.2022 அன்று, சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச்சிலைக்கு அருகே வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **ஆர்.என்.ரவி** அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களும் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

# பசிப்பிணிப் போக்குதலும், அறிவுப் பசிக்குத் தீனி போடுதலும் அரசினுடைய முதன்மைக் கொள்கைகள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 05.10.2022 அன்று சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற வள்ளலார் முப்பெரும் விழாவில் ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தந்தைப் பெரியார் அவர்களுடைய பிறந்தநாளைச் சமூகநீதி நாளாகவும், அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்தநாளைச் சமத்துவ நாளாகவும் அறிவித்த நமது திராவிட மாடல் அரசு, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற திருவருட்பிரகாச வள்ளலாரின் பிறந்தநாளை, தனிப்பெரும் கருணை நாளாக அறிவித்து இருக்கிறது.

வள்ளலாரின் முப்பெரும் விழா நிகழ்ச்சியை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. சேகர்பாபு அவர்கள் வெகுசிறப்பாக, அனைவரும் பாராட்டக்கூடிய வகையிலே இதை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

- வள்ளலார் பிறந்து 200 ஆண்டுகள்
- அவர் தொடங்கிய தரும சாலைக்கு 156 ஆண்டுகள்
- அவர் ஏற்றிய தீபத்திற்கு 152 ஆண்டுகள் ஆகியவற்றை இணைத்து முப்பெரும் விழாவாக இந்த நிகழ்ச்சியை நாம் நடத்திக் கொண்டு இருக்கிறோம்.

இந்த நிகழ்ச்சி நடப்பதைப் பார்த்து சிலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஏன், அதிர்ச்சியாகக்கூட இருக்கலாம். என்னைப் பொறுத்தவரையில், சிலர் சொல்லி வரும் அவதூறுகளுக்குப் பதில் சொல்லக்கூடிய விழாதான் இந்த விழா.

திராவிட மாடல் ஆட்சி என்பது ஆன்மீகத்திற்கு எதிரானது, திராவிட மாடல் ஆட்சியானது மக்களின் நம்பிக்கைகளுக்கு எதிரானது என்று மதத்தை வைத்துப் பிழைக்கக்கூடிய சிலர் நாட்டிலே பேசி வருகிறார்கள். மீண்டும் இதை நான் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஏனென்றால், முன்னால் சொன்னதை மட்டும் எடுத்துக்கொண்டு, பின்னால் சொன்னதை வெட்டிவிட்டுச் சில சமூக ஊடகங்கள் வெளியிடும். அதனால் முன்கூட்டியே நான் அதை உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட மாடல் ஆட்சியானது ஆன்மீகத்திற்கு எதிரானது, மக்களின் நம்பிக்கைகளுக்கு எதிரானது, இதை மட்டும் போட்டு, முதலமைச்சர் ஸ்டாலின் இப்படிப் பேசினார் என்று வெட்டி, ஒட்டி, பின்னால் பேசியதை வெட்டி விடுவார்கள். மதத்தை வைத்துப் பிழைக்கக்கூடிய சிலர் நாட்டிலே பேசி வருகிறார்கள் என்பதை வெட்டிவிட்டு, முன்னால் இருப்பதைப்போட்டுக் காட்டுவதற்கென அதற்கெனச் சில சமூக ஊடகங்கள் இருக்கின்றன. ஆக, நான் தெளிவோடு சொல்ல விரும்புவது, ஆன்மீகத்திற்கு எதிரானது அல்ல, தி.மு.க. ஆன்மீகத்தை அரசியலுக்கும், தங்களது சொந்த சுயநலத்திற்கும் உயர்வு, தாழ்வு கற்பிப்பதற்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்பவர்களுக்கு எதிரானதுதான் இந்தத் திராவிட மாடல் தி.மு.க. ஆட்சி.

தமிழ் மண்ணின் சமயப் பண்பாட்டை அறிந்தவர்கள், இதை நன்கு உணர்வார்கள்!

பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை என்று, பிற்போக்குக் கயமைத்தனங்களை எதிர்க்கக்கூடிய வள்ளுவரின் மண்தான், இந்தத் தமிழ் மண்!

"நட்ட கல்லும் பேசுமோ, நாதன் உள்ளிருக்கையிலே" என்றும் முழங்கிய சித்தர்கள் உலவிய மண், நம்முடைய தமிழ் மண்!

"இறைவன் ஒருவன்தான், அவன் ஜோதி வடிவானவன்" என்று எடுத்துச் சொல்லிய வள்ளலாரின் மண், இந்தத் தமிழ் மண்!

"ஒன்றே குலம்: ஒருவனே தேவன்" என்ற திருமூலரின் கருத்தைத்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு எடுத்துரைத்தவர் நம்முடைய தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள்!

அந்த அடிப்படையில்தான், வள்ளலாரின் பிறந்தநாளினைத் தனிப்பெரும் கருணை நாளாக நாம் அறிவித்திருக்கிறோம்!

கோட்டைக்கு வருவதைவிடக் கோவிலுக்கு அதிகம் போகக்கூடியவர்தான் நம்முடைய திரு. சேகர்பாபு அவர்கள். காரணம், அறப்பணிகள் முறையாக நடைபெறுகிறதா என்பதைப் பார்ப்பதைத்தான் அமைச்சர் திரு. சேகர்பாபு அதிகம் செய்துகொண்டு இருக்கிறார்.

ஆன்மீகச் சொற்பொழிவாளர்கள், நாள்தோறும் தாங்கள் எந்தக் கோயிலுக்குச் சென்று சொற்பொழிவு ஆற்ற வேண்டும் என்று பட்டியல் போட்டு வைத்திருப்பார்கள். அதைப்போல, தினமும் ஒரு கோயிலுக்கு அல்ல, ஒரு நாளைக்கு மூன்று ஊர்களில் இருக்கக்கூடிய கோயிலைச் சுற்றி வரக்கூடியவர்தான் நம்முடைய அமைச்சர் சேகர்பாபு அவர்கள். என்னால் 'செயல்பாபு' என்று அழைக்கப்படுகின்ற மாண்புமிகு அமைச்சர் திரு. சேகர்பாபு அவர்கள் இன்றைக்கு அவர் ஏற்றுக்கொண்டிருக்கக் கூடிய பொறுப்பை நான் பாராட்டுவதைவிட, எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள், எங்கள் அமைச்சர்கள் பாராட்டுவதைவிட, நீங்கள் பாராட்டுவதுதான் எங்களுக்குச் சிறப்பு.

நீங்களெல்லாம் ஆன்மீகச் சொற்பொழிவாளர்கள் என்று சொன்னால், இவர் ஆன்மீகச் செயற்பாட்டாளர். அதுதான் வித்தியாசம். இதுதான் திராவிட மாடல் ஆட்சியின் புகழுக்கும், சிறப்புக்கும் காரணமாக அமைந்திருக்கிறது.

❖ பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற திராவிடத்தின் மூலக் கருத்தியலை முதலில் சொன்னவர் அய்யன் வள்ளுவர் பெருமான் அவர்கள்.

❖ சாதியும் மதமும் சமயமும் பொய்யென ஆதியில் உணர்த்தியவர் அருட்பெருஞ்ஜோதி இராமலிங்க அடிகளார் அவர்கள்.

❖ "சாதி மதம் சமயமெனும் சங்கடம்விட்டு அறியேன், சாத்திரச் சோறாடுகின்ற சஞ்சலம்விட்டு அறியேன்", எனப் பாடியவர் அவர்.

❖ கண்மூடி வழக்கம் எல்லாம் மண்மூடிப் போகக் கடைசி வரை பாடியவர் அவர்.

❖ சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தேன், சாத்திரக் குப்பையும் தணந்தேன் என்று முடிவுக்கு வந்தவர் அவர்.

❖ சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே, சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே ஆதியிலே அபிமானத்து அலைகின்ற உலகீர்!



அலைந்து அலைந்து வீணே நீர் அழிதல் அழகல்லவே, என்று பாடியவர் வள்ளலார் பெருமான் அவர்கள்.

இத்தகைய வள்ளலார் பெருமான் அவர்களைப் போற்றுவது என்பது, திராவிட ஆட்சியின் கடமை என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

ஆறாம் திருமுறைப் பாடல்களைத் தொகுத்து, 'இராமலிங்கர் பாடல் திரட்டு' என்ற நூலை 1940ஆம் ஆண்டுகளிலேயே வெளியிட்டவர் தந்தைப் பெரியார் அவர்கள்.

வள்ளலார் நகரை உருவாக்கியவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

ஆட்சிப் பொறுப்பேற்றதும் வள்ளலார் பிறந்தநாளினைத் தனிப்பெரும் கருணை நாளாக அறிவித்து நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் 419ஆவது வாக்குறுதியாக 'வடலூரில் வள்ளலார் சர்வதேச மையம்' அமைக்கப்படும் என்று சொல்லி இருக்கிறோம். "சாதி சமய நல்லிணக்கத்தைப் பேணும் வகையில், திருவருட்பிரகாச வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கப் போதனைகளைப் போற்றக்கூடிய வகையில் இது அமையும்" என்று அந்த வாக்குறுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதனை எப்படி அமைப்பது என்பது குறித்து ஒரு சிறப்பான வல்லுநர்குழு ஆலோசனை பெறப்பட்டுள்ளது. பலமுறை நம்முடைய அமைச்சர் திரு. சேகர்பாபு அவர்கள் அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு, ரூ.100 கோடி மதிப்பீட்டில் இதனை அமைப்பதற்கான பெருந்திட்ட வரைவுத் திட்டம் தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் கட்டுமானப் பணிகள் தொடங்கும். அந்த வரிசையில்தான், நாம் இன்று இந்த முப்பெரும் விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவினருடன் நானும் பல ஆலோசனைகளைச் செய்திருக்கிறேன். விழா ஏற்பாடுகளெல்லாம் சிறப்பாகச் செய்யப்பட்டிருக்கிறது. 52 வாரங்களுக்கு முப்பெரும் விழா பல்வேறு நகரங்களில் நடக்க இருக்கிறது.

இந்த நேரத்தில் நான் ஒரு மகிழ்ச்சியான செய்தியை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புவது, ஓராண்டிற்குத் தொடர் அன்னதானம், பேச்சாளர்களுக்குச் சன்மானம் உள்ளிட்ட இந்த விழாவிற்கு ரூ.3.25 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

❖ நூலாசிரியர்

❖ உரையாசிரியர்

❖ பதிப்பாசிரியர்

❖ பத்திரிக்கையாசிரியர்

❖ போதகாசிரியர்

❖ ஞானாசிரியர்

❖ வியாக்கியான கர்த்தர்

❖ சித்தமருத்துவர்

❖ சீர்திருத்தவாதி

❖ கவிஞர்

❖ ஞானி

இப்படி எல்லாமுமாக இருந்தவர் வள்ளலார் அவர்கள். தனது கொள்கையைச் சமரச சன்மார்க்கமாக வடிவமைத்தார். அந்தக் கொள்கையைச் செயல்படுத்தச் சமரச சன்மார்க்கச் சங்கம் தொடங்கினார். அந்தச் சங்கத்துக்காகச் சன்மார்க்கக் கொடி உருவாக்கினார். அந்தச் சங்கத்துக்காக 'அருட்பெருஞ்ஜோதி தனிப்பெரும் கருணை' என்ற ஆன்ம நெறியை உருவாக்கினார். அதற்காகச் சத்திய ஞானசபையை உருவாக்கினார்.

ஒரு கொள்கையை உருவாக்கிச் சொல்லிவிட்டு, அதை விட்டுவிட்டுப் போகாமல், அதனை எப்படிச் செயல்படுத்த வேண்டும் என்று எடுத்துக்காட்டாக விளங்கக்கூடியவர் நம்முடைய வள்ளலார் அவர்கள்.

கருணையைக் கடவுள் என்றவர் அவர். அதனால் பசிப்பிணியைப் போக்குவதே இறைப்பணி என நினைத்தார். அணையாத அடுப்பை மூட்டினார்! பசிப்பிணி தடுத்தார்!

அவர் வழியில் நடக்கக்கூடிய இந்த அரசானது, காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி இருக்கிறது. பசியுடன் பள்ளிக்கு வரும் பிள்ளைகளுக்கு உணவளிக்கும் திட்டமானது மணிமேகலையில் அமுதசுரபியின் தொடர்ச்சியாக, வள்ளலார் மூட்டிய அணையா அடுப்பின் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டிருக்கிறது.

பசிப்பிணி போக்குதலும், அறிவுப்பசிக்குத் தீனி போடுதலும் இந்த அரசினுடைய முதன்மைக் கொள்கைகள்!

பேரறிஞர் அண்ணா சொன்னபடி "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!"

சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது!

மனிதர்களிடையே வேறுபாடு இருக்கக்கூடாது! நல்லிணக்கம் வேண்டும்!

அன்பும், கருணையும் ஒவ்வொருவர் வாழ்வையும் வழிநடத்த வேண்டும்!

இரக்கக் குணமும், உதவும் மனமும் வேண்டும்! என்பதைத் திரும்பத் திரும்பச் சொன்னவர் வள்ளலார் அவர்கள்.

சோறு போடுவது, அன்னதானம் வழங்குவது மட்டுமே அவரது அறநெறி அல்ல. சாதி, மத வேறுபாடுகளற்ற சமநிலைச் சமூகம் அமைக்கப் பாடுபடுவதுதான் வள்ளலாருடைய வழியில் நடப்பது!

❖ ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமை உளராகி உலகியல் நடத்த வேண்டும் என்பதே அவரது அறநெறி!

அத்தகைய அறநெறி உலகத்தைப் படைக்க உறுதியேற்போம். அதற்காக உழைப்போம்!

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வள்ளலாரின் இலச்சினை, தபால் உறை மற்றும் சிறப்பு மலரை வெளியிட்டு, ஆண்டு முழுவதும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியினைத் தொடங்கிவைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வள்ளலார் முப்பெரும் விழாவினைக் கொண்டாடுகின்ற வகையில், "வள்ளலார் – 200" இலச்சினை, தபால் உறை, சிறப்பு மலர் ஆகியவற்றை வெளியிட்டு, 52 வாரங்களுக்கான விழாக்களில் முதல் வார நிகழ்ச்சிகளையும், ஆண்டு முழுவதும் அன்னதானம் வழங்கும் நிகழ்வையும் தொடங்கிவைத்தார்.

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று பாடிய திருவருட் பிரகாச வள்ளலார் என்று அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் 05.10.1823 அன்று சிதம்பரம் அருகில் மருதூரில் பிறந்தார். ஆன்மீகவாதியான வள்ளலார் சமரசச் சுத்த சன்மார்க்கச் சத்திய ஞான சபையை நிறுவினார். கடவுளின் பெயரில் செய்யப்படும் உயிர்ப்பலியைத் தடுத்து நிறுத்தினார். மக்களின் பசியைப் போக்குவதற்காக வடலூரில் சத்திய தரும சாலையையும் நிறுவினார். சமத்துவம், கல்வி, தியானம் போன்றவற்றை மக்களிடம் பரப்பினார். திருவருட்பா, ஜீவகாருண்யம், அருள்நெறி போன்ற பல ஆன்மீக நூல்களை எழுதியுள்ளார்.

2022-2023ஆம் ஆண்டுக்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின் அறிவிப்பில், “உயிர்த்திரள் ஒன்றெனக்கூறி தனிப்பெரும் கருணை ஆட்சி நடத்திய வள்ளல் பெருமானார் தருமசாலை துவக்கிய 156ஆவது ஆண்டு தொடக்கமும் (25.05.2022) வள்ளல் பெருமான் இவ்வுலகிற்கு வருவிக்க உற்ற 200ஆவது ஆண்டு தொடக்கமும் (05.10.2022) ஜோதி தரிசனம் காட்டுவித்த 152ஆவது ஆண்டும் (05.02.2023) வரவிருப்பதால் இம்மூன்று நிகழ்வுகளையும் இணைத்து அவரது 200ஆவது அவதார ஆண்டான அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை 52 வாரங்களுக்கு முக்கிய நகரங்களில் முப்பெரும் விழா நடத்தப்படும் இதற்கென ஒரு சிறப்புக்குழு அமைக்கப்படும்” என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, அருட்பிரகாச வள்ளலாரின் முப்பெரும் விழாவினைச் சிறப்புற நடத்திடும் வகையில் டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்கள் தலைமையில் 14 உறுப்பினர்களைக் கொண்ட சிறப்புக்குழு தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டது.

வள்ளலார் பிறந்த 200ஆவது ஆண்டினைக் கொண்டாடுகின்ற வகையிலும், அவர் தர்மச்சாலை தொடங்கிய 156ஆவது ஆண்டு கொண்டாடுகின்ற வகையிலும், அதேபோல் ஜோதி தரிசனம் காட்டுவித்த 152ஆவது ஆண்டினைக் கொண்டாடுகின்ற வகையிலும் வள்ளலார் முப்பெரும் விழாவினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, “வள்ளலார் தனிப்பெருங்கருணை” சிறப்பு மலரை வெளியிட்டு, சுத்த சன்மார்க்க அன்பர்கள் திரு. மழையூர் சதாசிவம், திரு. சா.மு. சிவராமன், திருமதி தனலட்சுமி, திரு. எம். பாலகிருஷ்ணன், திரு. சிவப்பிரகாச சுவாமிகள் ஆகியோருக்குப் பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து, வள்ளலார் முப்பெரும் விழாவில், வள்ளலாரின் “தனிப்பெருங்கருணை நாள்” முன்னிட்டு 05.10.2022 முதல் ஆண்டு முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்.



**“ பேரறிஞர் அண்ணா சொன்னபடி "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்! சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது! மனிதர்களிடையே வேறுபாடு இருக்கக்கூடாது! நல்லிணக்கம் வேண்டும்! அன்பும், கருணையும் ஒவ்வொருவர் வாழ்வையும் வழிநடத்த வேண்டும்! இரக்கக் குணமும், உதவும் மனமும் வேண்டும்!" என்பதைத் திரும்பத் திரும்பச் சொன்னவர் வள்ளலார் அவர்கள். சோறு போடுவது, அன்னதானம் வழங்குவது மட்டுமே அவரது அறநெறி அல்ல. சாதி, மத வேறுபாடுகளற்ற சமநிலைச் சமூகம் அமைக்கப் பாடுபடுவதுதான் வள்ளலாருடைய வழியில் நடப்பது! ”**

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் (05.10.2022)

# தடைகளைத் தகர்த்து, சாதனைகளைப் படைத்திடுங்கள்




**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 12.09.2022 அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில், விளையாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்குகின்ற 19 வீரர், வீராங்கனைகள், பயிற்றுநர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள், நடுவர்களுக்கு முதலமைச்சர் விருதினையும், அதற்கான ஊக்கத்தொகையாக ரூ.16.30 இலட்சத்துக்கான காசோலைகளையும், தேசிய, சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்றுப் பதக்கங்கள் வென்ற 1,130 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக ரூ.16.28 கோடிக்கான காசோலைகளையும் வழங்கினார்.

> விளையாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்குகின்றவர்களுக்கு முதலமைச்சர் விருது மற்றும் ஊக்கத்தொகைகளை வழங்கி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை. (12.09.2022)

## சிறந்த விளையாட்டு வீரர்கள், பயிற்றுநர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள், நடுவர்களுக்கு முதலமைச்சர் விருதுகள்

பல்வேறு சர்வதேச, தேசியப் போட்டிகளில் கலந்துகொண்டு, பதக்கங்கள் வென்றதற்காக 2018-2019, 2019-2020ஆம் ஆண்டுகளுக்கான 8 சிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், 4 பயிற்றுநர்கள், 4 உடற்பயிற்சி இயக்குநர்கள் / உடற்பயிற்சி ஆசிரியர்கள், 3 நடுவர்கள் என மொத்தம் 19 நபர்களுக்கு முதலமைச்சர் விருதுகளையும், விருதிற்கான ஊக்கத்தொகையாக ரூ.16.30 இலட்சத்துக்கான காசோலைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி வாழ்த்தினார்.

## தேசிய, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்கத்தொகை

கடந்த 2019-2020ஆம் ஆண்டு நடைபெற்ற 65ஆவது தேசிய பள்ளிகள் விளையாட்டுக் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகளில் 14 வயது, 17 வயது, 19 வயதிற்குட்பட்டோர் என 3 பிரிவுகளில் பதக்கங்கள் வென்ற



659 மாணவ, மாணவியர்களுக்கு உயரிய ஊக்கத்தொகையாக ரூ.7.03 கோடிக்கான காசோலைகள்;

கடந்த 2019-2020ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய அளவிலான சப்-ஜுனியர், ஜுனியர், இளையோர், சீனியர் எனப் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 291 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஊக்கத்தொகையாக ரூ.5.94 கோடிக்கான காசோலைகள்;

கடந்த 06.04.2022 முதல் 17.04.2022 வரை மத்தியப் பிரதேசத்தில், போபால் நகரில் நடைபெற்ற 12ஆவது தேசிய அளவிலான சீனியர் ஹாக்கி சாம்பியன்ஷிப் குழுப்போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 18 விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ.27 இலட்சத்திற்கான காசோலைகள்;

கடந்த 23.10.2019 முதல் 27.10.2019 வரை தென் கொரியாவில், சுங்ஜுவில் நடைபெற்ற ஆசிய ரோயிங் சாம்பியன்ஷிப் போட்டிகளில் வெண்கலப் பதக்கம் வென்ற திரு. லட்சுமணன் ரோஹித் மரடப்பா அவர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ.5 இலட்சத்திற்கான காசோலை;

கடந்த 19.03.2021 முதல் 21.03.2021 வரை உத்தரகாண்டில் நடைபெற்ற பெண்களுக்கான 31ஆவது தேசிய அளவிலான சீனியர் ஃபென்சிங் சாம்பியன்ஷிப் குழுப்போட்டிகளில் வெண்கலப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 4 விளையாட்டு வீராங்கனைகளுக்கு ஊக்கத்தொகையாகத் தலா ரூ.1 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.4 இலட்சத்திற்கான காசோலைகள்;

2022ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் சர்வதேச மாஸ்டர் பட்டம் வென்ற தமிழ்நாட்டைச் சார்ந்த திரு. வி.எஸ். ராகுல் அவர்களுக்கு ரூ.3 இலட்சத்திற்கான காசோலை;

கடந்த 04.11.2021 முதல் 13.11.2021 வரை கொலம்பியாவில், இபாகு-டோலிமாவில் நடைபெற்ற இன்லைன் ஸ்பீட் ஸ்கேட்டிங் உலக சாம்பியன்ஷிப்பில் ஜுனியர் ஆண்கள் 15 கீ.மீ. எலிமினேஷன் விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சார்ந்த திரு. ஆனந்த்குமார் வேல்குமார் அவர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ.4 இலட்சத்திற்கான காசோலை;

கடந்த 2019-2020ஆம் ஆண்டிற்கான அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சார்ந்த 144 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு ஊக்கத்தொகையாக ரூ.2.13 கோடிக்கான காசோலைகள்;

கடந்த 2017, 2020ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் பெண்கள் சர்வதேச மாஸ்டர் பட்டம் வென்ற தமிழ்நாட்டைச் சார்ந்த செல்வி ஸ்ரீஜா சேஷாத்திரி, செல்வி கே. பிரியங்கா ஆகியோருக்குத் தலா ரூ.3 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.6 இலட்சத்திற்கான காசோலைகள்;

கடந்த 2016, 2017, 2022ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் சர்வதேச மாஸ்டர் பட்டம் வென்ற தமிழ்நாட்டைச் சார்ந்த திரு. ஆர்.பிரக்ஞானந்தா, திரு. ப.இனியன், திரு. எல்.ஆர்.ஸ்ரீஹரி ஆகிய 3 நபர்களுக்குத் தலா ரூ.3 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.9 இலட்சத்திற்கான காசோலைகள்;

கடந்த 28.09.2021 முதல் 05.10.2021 வரை தோஹாவில் நடைபெற்ற 25ஆவது ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டிகளில் திரு.ஜி.சத்தியன் அவர்கள் ஆண்கள் இரட்டையர்

பிரிவில் 1 வெண்கலப்பதக்கம், ஆண்கள் குழுப்போட்டியில் 1 வெண்கலப்பதக்கம் வென்றதற்கு ரூ.10 இலட்சம், திரு.சரத்கமல் அவர்கள் ஆண்கள் இரட்டையர் பிரிவில் 1 வெண்கலப்பதக்கம், ஆண்கள் குழுப்போட்டியில் 1 வெண்கலப்பதக்கம் வென்றதற்கு ரூ.10 இலட்சம் என மொத்தம் 2 நபர்களுக்கு ரூ.20 இலட்சத்திற்கான காசோலைகள்;

கடந்த 01.10.2021 முதல் 07.10.2021 வரை உஸ்பெகிஸ்தானில் தாஷ்கண்டில் நடைபெற்ற 12ஆவது உலக உடற்கட்டமைப்பு, உடற்தகுதி விளையாட்டு சாம்பியன்ஷிப் போட்டிகளில் பதக்கம் வென்ற திரு.ஜி. குமார் அவர்கள் 75 கிலோ எடைப்பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்றதற்கு ரூ.15 இலட்சம், திரு. ஆர். பெஞ்சமின் ஜெரோட் அவர்கள் 65 கிலோ எடைப்பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்றதற்கு ரூ.10 இலட்சம், திரு.ஆர்.கார்த்திகேஸ்வர் அவர்கள் 85 கிலோ எடைப் பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்றதற்கு ரூ.10 இலட்சம், என மொத்தம் 3 நபர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ.35 இலட்சத்திற்கான காசோலைகள்;

கடந்த 09.02.2020 முதல் 15.02.2020 வரை சென்னையில் நடைபெற்ற 77ஆவது தேசிய ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியில் பெண்கள் பிரிவில் தங்கப்பதக்கம் வென்ற செல்வி ஜோஷ்னா சின்னப்பா அவர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.5 இலட்சத்திற்கான காசோலை;

என மொத்தம், ரூ.16.28 கோடிக்கான காசோலைகளை 1,130 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி வாழ்த்தினார்கள்.

## தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தலைமை அலுவலகத்தில் "ஆடுகளம்" தகவல் மையம்

விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான விவரங்கள், தகவல்கள், புகார்கள், கோரிக்கைகள் குறித்துத் தெரிவித்திட தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள "ஆடுகளம்" தகவல் மையத்தின் செயல்பாடுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். இந்தத் தகவல் மையம் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அனைத்து வேலை நாட்களிலும் செயல்படும். இதுதொடர்பாக 9514000777 என்ற அலைப்பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## முதலமைச்சர் கோப்பை மாநில விளையாட்டுப் போட்டிகளுக்கான முன்பதிவு

முதலமைச்சர் கோப்பைக்கான மாநில விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கான இணையதள முன்பதிவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார். sdat.tn.gov.in என்ற இணையதளத்தில் இதற்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டுள்ள வசதி மூலமாகவும், ஆடுகளம் (tnsports) ஆன்ட்ராய்டு செயலி மூலமாகவும், அந்தந்த மாவட்ட விளையாட்டு அலுவலகங்களில் நேரடியாகவும் இந்தப் போட்டியில் பங்கேற்பதற்கான முன்பதிவை மேற்கொள்ளலாம்.

முதற்கட்டமாகக் கபடிப் போட்டிக்கான முன்பதிவு பள்ளி, கல்லூரி, பொதுமக்கள் பிரிவு மாற்றுத்திறனாளிகள், பொதுப்பிரிவு என 5 பிரிவுகளில் ஆண்கள், பெண்கள் அணிகள் பங்கேற்கும் வகையில் பதிவு தொடங்கப்படுகிறது. படிப்படியாகத் தடகளம், கூடைப்பந்து, சிலம்பம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுகளில் பங்கேற்பதற்கான முன்பதிவும் தொடங்கும்.

## இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த மூன்று மாதங்களில் நான் மூன்றாவது முறையாக நேரு உள்விளையாட்டு அரங்கத்திற்கு நான் வந்திருக்கிறேன். இதிலிருந்தே நீங்கள் தெரிந்து கொள்ளலாம், தமிழக விளையாட்டு மேம்பாட்டுத்துறை எந்தளவுக்குச் சுறுசுறுப்பாக, விளையாட்டு வீரர்களுக்குப் புரியும் வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால், ஒரு அத்தலெட் ஓடுகின்ற வேகத்தோடு செயல்பட்டு வருகிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

உலகமே வியந்து பார்க்கும் வகையில் செஸ் ஒலிம்பியாட் போட்டியை நடத்திக் காட்டினீர்கள்.

அடுத்ததாக டென்னிஸ் போட்டிக்குத் தயாராகி வருகிறீர்கள்.

இந்தச் சூழலில்தான் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அமைச்சர் மெய்யநாதன் அவர்கள் ஒரு ஸ்போர்ட்ஸ் நாதனாகவே மாறிவிட்டார். தனது




துறையை என்றும், எப்போதும் துடிப்போடு வைத்திருக்க வேண்டும் என்று அவர் நினைத்துச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். இப்படி ஒரு சுறுசுறுப்பான அமைச்சர் உங்கள் துறைக்குக் கிடைத்திருப்பது நிச்சயமாக நீங்கள் எல்லாம் பெருமைப்பட வேண்டும்.

திராவிட மாடல் என்ற குறிக்கோளின்படி அனைத்துத் துறையும் வளர வேண்டும் என்பது எங்களது இலக்கு ஆகும். அதில் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக இந்த மாபெரும் நிகழ்ச்சி நடந்து கொண்டு இருக்கிறது.

ஒரு விழாவில் நான்கு முக்கியமான நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

- தமிழ்நாட்டின் தலை சிறந்த விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்களுக்கான விருதுகளை வழங்குதல்,
- இரண்டாவது, பன்னாட்டு, தேசிய அளவிலான போட்டிகளில் வென்ற விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகையை வழங்குதல்.
- மூன்றாவது, முதலமைச்சர் கோப்பைப் போட்டிகளுக்கான முன்பதிவு தொடங்கிவைத்தல்.
- நான்காவது, “ஆடுகளம்” - விளையாட்டு வீரர்களுக்கான தகவல் மையம் ஆகிய நான்கு நிகழ்வுகள் ஒரே நேரத்தில் நடக்கிறது.

உலக அளவில் விளையாட்டுத்துறையில் தமிழ்நாடு முதன்மைப் பெற வேண்டும், நம்முடைய ஊரு வீரர்கள் எல்லாம் சர்வதேச விளையாட்டுகளிலும் பங்கேற்க வேண்டும். பதக்கங்கள் வென்று தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்க்கவேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு தமிழ்நாடு அரசு இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறது.

செஸ் ஒலிம்பியாட் போட்டிக்காக 187 நாடுகளிலிருந்து 2000க்கும் மேற்பட்ட வீரர்கள், வீராங்கனைகள் நம்முடைய தமிழகத்தில், சென்னை, மாமல்லபுரத்தில் நடைபெற்ற அந்தப் போட்டியில் பங்கேற்க வந்தார்கள். தமிழகத்தை உலகமே பார்த்து வியந்தது.

தொடக்கத்தில் எத்தகைய திட்டமிடுதலோடு அதைத் தொடங்கினோமோ அதே அளவு அக்கறையுடன் கடைசி நாள்வரை நடந்து கொண்டதால்தான் செஸ் ஒலிம்பியாட் என்கின்ற போட்டி மாபெரும் வெற்றியை, மாபெரும் சிறப்பை, மாபெரும் பெயரை நாம் அடைய முடிந்தது.

செஸ் ஒலிம்பியாட் போட்டியானது கிராமங்கள் முதல், நகரங்கள் வரை நம் மாணவர்கள், இளைஞர்களிடையே விளையாட்டின்மீது ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஆர்வத்தை இன்னும் தூண்டும் விதமாக, தமிழ்நாடு அரசின் பெரும் முயற்சியால் கொண்டுவரப்பட்டுள்ள உலக மகளிர் டென்னிஸ் போட்டியும் சென்னையில் இன்று தொடங்கி 18ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

தற்போது மாணவர்கள், இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ள இந்தப் பேரார்வத்தினை மேலும் வளர்க்கும் வகையில் பல்வேறு விளையாட்டுகள் அடங்கிய ‘முதலமைச்சர் கோப்பைப் போட்டி’களுக்கான முன்பதிவையும் இன்று தொடங்கிவைப்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

செஸ் ஒலிம்பியாட் நிறைவு விழாவில் நான் சொன்னமாதிரி நம்முடைய பாரம்பரிய விளையாட்டுக்களான கபடி, சிலம்பம் ஆகியவற்றுக்குச் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

கபடிப் போட்டிகளுக்கான முன்பதிவு இன்றைக்குத் தொடங்குகிறது. பிறபோட்டிகளுக்கான முன்பதிவும் படிப்படியாகத் துவங்கயிருக்கிறது.

வரும் அக்டோபர் மாதம் முதல் இப்போட்டிகள் அனைத்து மாவட்டங்களில் நடைபெறும். மாநில அளவிலான இறுதிப் போட்டிகள் பிரம்மாண்டமான அளவில் வரும் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் சென்னையில் நடைபெறும். அதாவது செப்டம்பர் மாதம் முதல் அடுத்த ஆறு மாத காலங்களில் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் பல்வேறு போட்டிகள் நடக்க இருக்கின்றன. இது மாநிலம் முழுமைக்குமான அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் ஒரு பூஸ்ட் மாதிரி.

முதன்முறையாக, இப்போட்டிகள் பள்ளிகள், கல்லூரிகள், பொதுமக்கள், அரசு ஊழியர்கள், மாற்றுத்திறனாளிகள் என 5 பிரிவுகளில் நடக்க இருக்கிறது. ஆண்கள் அணி, பெண்கள் அணி என இருபாலரும் பங்கேற்கும் வகையில் இது நடத்தப்பட இருக்கின்றன.

அடுத்த ஆண்டு முதல் ஜூன் மாதம் கடைசி வாரத்தில் தொடங்கி பொங்கல் வரைக்கும் நடக்கும். தமிழர் திருநாளாம் தைத்திருநாள், கலையும் பண்பாடும் மட்டுமின்றி தமிழர்களின் விளையாட்டுகளும் கொண்டாடப்படும் பெருநாளாக அது அமையும்.

இந்தப் போட்டிகளில் சிறப்பாக விளையாடும் மாணவ, மாணவியரை விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு விடுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் சேர்த்து, அவர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கவும், தேசிய மற்றும் உலக அளவிலான போட்டிகளில் வெற்றிபெற தயார் செய்யவும் ஆணையிடப்பட்டிருக்கிறது.

நமது அரசின் சிறப்பான செயல்பாடுகளால் தமிழ்நாட்டின் விளையாட்டுத்துறையில் புதிய மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக ஊக்கத்தொகை வழங்கப்படாமல் இருந்த சாதனையாளர்களையும் கண்டறிந்து, அவர்களுக்கு விருதுகளும் ஊக்கத்தொகையும் வழங்கிப் பெருமைப்படுத்தி வருகிறோம்.

இன்றைக்கு 1,130 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.16.28 கோடி ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், "ஆடுகளம்" விளையாட்டு வீரர்களுக்கான தகவல் மையமானது, அவர்களின் கோரிக்கைகள், ஆலோசனைகள் புகார்கள் உள்ளிட்டவற்றைக் கேட்டறிந்து அவற்றுக்கான மேல்நடவடிக்கைகளையும், தீர்வுகளையும், விரைவாக வழங்கிடும் மையமாக இது அமையும். ஏற்கெனவே நடந்து முடிந்துள்ள செஸ் ஒலிம்பியாட் போட்டிகளைத் தொடர்ந்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாணவர்களுக்கு, குறிப்பாக அரசுப் பள்ளி மாணவர்களுக்கு, சிறந்த பயிற்சியாளர்கள், கிராண்ட் மாஸ்டர்கள் மூலம் நேரடி மற்றும் இணையவழிப் பயிற்சிகள் வழங்கும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது.

இதன் மூலம் இந்த செஸ் ஒலிம்பியாட் போட்டி கொடி அணிவகுப்பில் உலக அணிகளை வழி நடத்திச் சென்ற, நம்முடைய அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த செஸ் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பலரும், வரும் காலங்களில் இதுபோன்ற சர்வதேச போட்டிகளில், போட்டியாளராகப் பங்கேற்று வாகைசூட வழி ஏற்படும்.

சிலம்பம் உள்ளிட்ட பாரம்பரிய விளையாட்டுக்களை ஊக்கப்படுத்துவதைப்போல தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியினர் விளையாட்டுக்கள் கண்டறியப்பட்டு அவற்றுக்கும் தகுந்த ஊக்கம் அளித்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

களமாட விரும்பும் இளைய தலைமுறை வெற்றி வாகை சூட அனைத்து வழிவகைகளையும் தமிழ்நாடு அரசு நிச்சயமாக உருவாக்கித் தரும்.

நீங்கள் அடையும் வெற்றியும், பெருமையும் உங்களுக்கானது மட்டுமல்ல, தமிழ்நாடும், இந்தியாவும் அடையக்கூடிய வெற்றி. எனவே, உங்களது கடமையும் பெரிது, உங்களுடைய பொறுப்பும் பெரிது. அதை உணர்ந்து தடைகளைத் தகர்த்து, சாதனைகளை படைத்திடுங்கள்.

அனைவருக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

# கொளத்தூரில்,
# ரூ.111.80 கோடியில்
# 840 அடுக்குமாடிக் குடியிருப்புகள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 12.09.2022 அன்று சென்னை, கொளத்தூரில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கௌதமபுரம் திட்டப்பகுதியில் ரூ.111.80 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 840 அடுக்குமாடி குடியிருப்புகளைத் திறந்துவைத்தார். மேலும், ரூ.1.95 கோடி மதிப்பீட்டில் அங்கன்வாடி மையக் கட்டடங்கள், நூலகக் கட்டடம், பூங்கா அமைப்பதற்கான திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் ரூ.1.95 கோடி மதிப்பீட்டிலான பணிகளைத் தொடங்கிவைத்தார்.

அனைவருக்கும் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கௌதமபுரம் திட்டப்பகுதியில் பழுதடைந்த பழைய குடியிருப்புகள் இடிக்கப்பட்டுத் தூண் மற்றும் 14 அடுக்குகளுடன் 840 புதிய குடியிருப்புகள் ரூ.111.80 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதி ஆதாரங்களுடன் பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களுக்காகக் கட்டப்பட்டுள்ளன.

ஒவ்வொரு குடியிருப்பும் 406 சதுர அடி கட்டுமானப் பரப்பில் ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையலறை, கழிவறை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டப் பகுதியில் பழைய குடியிருப்புகளில் வாழ்ந்த

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கிவைத்தார். (12.09.2022)

400 குடும்பங்கள், கூடுதலாகக் கட்டப்பட்டுள்ள 440 குடியிருப்புகள் சென்னை மாநகரில் வாழும் பொருளாதாரத்தில் நலிவுற்றக் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு குடியிருப்பிற்கான மதிப்பீடு ரூ.13.31 இலட்சம் ஆகும். இதில் ஒன்றிய அரசின் பங்கு ரூ.1.50 இலட்சம், மாநில அரசின் பங்களிப்பு ரூ.6 இலட்சம், பயனாளிகளின் பங்களிப்பு ரூ.5.81 இலட்சமாக இருந்தது.

பயனாளிகளின் பங்களிப்புத் தொகை அதிகமாக இருந்ததைப் பயனாளிகளின் பொருளாதார நிலையினைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி மறுகட்டுமான திட்டத்தின்கீழ் உள்ள ஒதுக்கீடுதாரர்களுக்குப் பயனாளிகளின் பங்களிப்புத் தொகையைத் தவணை முறையில் மாதந்தோறும் ரூ.250 வீதம் 20 ஆண்டுகள் வரை செலுத்தலாம் என்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், கூடுதலாகக் கட்டப்பட்டுள்ள 440 குடியிருப்புகளுக்குப் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவின்கீழ், பயனாளிகளின் பங்களிப்புத் தொகையான 5.81 இலட்சம் ரூபாயினை



அப்பயனாளிகளின் பொருளாதார நிலையினைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி ரூ.5 இலட்சமாகக் குறைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவில் தகுதி வாய்ந்த பயனாளிகள் தேர்ந்தெடுக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

இதனால் ஒரு குடியிருப்பிற்கான திட்டச் செலவினம் ரூ.13.31 இலட்சத்தில் ஒன்றிய அரசின் பங்களிப்புத் தொகை ரூ.1.50 இலட்சம் போக, மாநில அரசின் பங்களிப்புத் தொகை மறுகட்டுமானப் பயனாளிகளுக்கு ரூ.6 இலட்சத்திலிருந்து ரூ.11.40 இலட்சமாகவும், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களுக்கு ரூ.6 இலட்சத்திலிருந்து ரூ.6.81 இலட்சமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

கௌதமபுரம் திட்டப்பகுதியில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள 840 அடுக்குமாடி குடியிருப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, 400 குடும்பங்களுக்கு ஒதுக்கீட்டு ஆணைகளையும், வீடுகளுக்கான சாவிகளையும் வழங்கினார்.

இத்திட்டப்பகுதியில் அடிப்படை வசதிகளான மழைநீர்க் கால்வாய், கான்கீரிட் சாலைகள், தெரு மின்விளக்குகள், கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டி, மின்தூக்கி, தரைத்தள வாகன நிறுத்துமிடம், தடையில்லா மின்சாரத்திற்கான மின்மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், குடியிருப்போர் நலச்சங்கம் அமைக்கப்பட்டுக் குடியிருப்புகளை நல்ல முறையில் பராமரிக்க நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், பெருநகரச் சென்னை மாநகராட்சியின் சார்பில் கொளத்தூர், கௌதமபுரம், ரமணா நகரில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.74.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள இரண்டு அங்கன்வாடி மையக் கட்டடங்கள், ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள நூலகக் கட்டடம், ஜவஹர் சாலையில் ரமணா நகர் திறந்தவெளி நிலத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 80.69 இலட்சம் மதிப்பீட்டிலான புதிய பூங்கா என மொத்தம் ரூ.1.95 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து, சென்னைப் பெருநகர்க் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் கொளத்தூர், ஜவகர் நகர், சிவஇளங்கோ சாலையில் ரூ.24.71 இலட்சம்





செலவில் கட்டப்பட்டுள்ள பணிமனை அலுவலகக் கட்டடத்தைத் திறந்துவைத்து, எஸ்.ஆர்.பி. கோயில் வடக்கு, திரு.வி.க. நகர் 4ஆவது தெருவில் ரூ.91.70 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் உந்து ஏற்று நிலையம் கட்டுமானப் பணி, கழிவுநீர் உந்து குழாய்ப் பதிக்கும் பணி, வெற்றி நகரில் ரூ.78.44 இலட்சம் மதிப்பீட்டில் புதிய குடிநீர்க் குழாய் பதிக்கும் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொளத்தூர், ஜவஹர் நகரில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 89 மாணவ, மாணவியர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கினார்.

## இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான மாலை வணக்கத்தை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட புதிய அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடங்களை நான் உங்கள் மத்தியில் திறந்து வைத்திருக்கிறேன். ரூ.111.80 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய கட்டடத்தைத் திறந்து வைத்திருக்கிறேன். 840 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுக் குடியிருப்புதாரர்களுக்கு வீடு ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டிருக்கக்கூடிய நிலையில், இந்தக் கட்டடத்தை நான் திறந்து வைத்திருக்கிறேன்.

நம்முடைய நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு. நேரு அவர்கள் பேசுகிறபோது ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார், தமிழ்நாட்டில் எங்குதான் நம் முதலமைச்சர் சுற்றிக் கொண்டிருந்தாலும், இந்தக் கொளத்தூர் தொகுதி என்றால் அவருக்குத் தானாக ஒரு உற்சாகம் வந்துவிடும், ஒரு மகிழ்ச்சி வந்துவிடும். உண்மைதான், ஏன் வராது? மூன்று முறை என்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். தொடர்ந்து உங்கள் வீட்டுப் பிள்ளையாக நினைத்து, அது எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளுங்கட்சியாக இருந்தாலும், என்னை ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பார்க்காமல் உங்களில் ஒருவனாக நினைத்து, என்னைத் தொடர்ந்து வெற்றிபெற வைத்திருக்கிறீர்கள். ஆக, அப்படிப்பட்ட உங்களைச் சந்திக்க வரும்போது எனக்கு மகிழ்ச்சி தானாக வந்துவிடும், ஒரு எழுச்சியும் வந்துவிடும். சில நேரங்களில் எனக்குச் சோர்வு ஏற்பட்டால், இந்தப் பகுதி வந்தவுடன் அந்தச் சோர்வெல்லாம் உடனடியாகக் கலைந்து போய்விடும். ஆகவே, அப்படிப்பட்ட இந்தக் கொளத்தூர்த் தொகுதியில் இருக்கக்கூடிய உங்களையெல்லாம் சந்திக்க வந்திருப்பதில் நான் தொடர்ந்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கக்கூடியவன்.

இங்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் குடிசை மாற்று வாரியத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய திரு. அன்பரசன் அவர்கள்,




இது இப்போது தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று மாற்றியிருக்கிறோம்.

முதன்முதலில் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் ஆட்சிக்கு அறிஞர் அண்ணா தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, அறிஞர் அண்ணா அவர்கள், எங்குப் பார்த்தாலும் குறிப்பாகச் சென்னையில், குடிசைகள் அதிகமாக இருக்கிறது, ஆகவே, ஆங்காங்கு மழை பெய்தாலும் வெள்ளத்தில் சிக்கிக் கொள்கிறார்கள், கொடுமையான வெயில் வரும்போது, கொடுமையாக கொளுத்தும் அந்த வெயிலைத் தாங்க முடியாத அளவிற்குத் தீப்பற்றக்கூடிய ஒரு சூழ்நிலைகூட ஏற்பட்டு விடுகிறது அல்லது சமையல் செய்கின்ற நேரத்தில், எதிர்பாராத வகையில் தீ விபத்துகள் ஏற்பட்டு விடுகிறது, ஒரு வீட்டில் தீப்பிடித்தால் அது பக்கத்து வீடுகளுக்கு விரைவாகப் பரவிவிடுகிறது, இதை எப்படிச் சரி செய்வது என்று அண்ணா அவர்கள் யோசித்து, எரியாத வீடுகள் அதற்குரிய ஆஸ்பெஸ்டாஸ் அமைப்பில் முதன்முதலில் அந்த வீடு கட்டக்கூடிய திட்டத்தை அண்ணா அவர்கள் தொடங்கினார்கள். அப்படி அந்தத் திட்டம் தொடங்கி ஓரளவுக்குத் திருப்தி ஏற்பட்டாலும், முழு அளவுக்கு அவருக்குத் திருப்தி ஏற்படவில்லை. ஆக, அதுவும் மழை பெய்கின்றபோது சில கஷ்டங்கள் ஏற்படுகிறது என்ற ஒரு நிலை இருந்தது.

அதனால்தான், அண்ணா மறைவிற்குப் பிறகு, ஆட்சிப் பொறுப்பேற்ற நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் 1970ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியம் என்ற ஒரு அமைப்பை இந்தியாவிலேயே முதன் முதலில் ஏற்படுத்தியது தலைவர் கலைஞர் அவர்கள்தான். அன்றைக்கு ஒன்றிய அமைச்சராக இருந்த, பெருந்தலைவர் பாபுஜி என்று அழைக்கப்படக்கூடிய பாபு ஜகஜீவன்ராம் அவர்களை வரவழைத்து அந்தக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். அதற்கு முன்னால், இந்த நாட்டிற்கு விடுதலையைத் தேடித் தந்திருக்கக்கூடிய ஒருவராக இருந்த ஜே.பி. என்று சொல்லக்கூடிய ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களையும் அழைத்து வந்து அந்த நிகழ்ச்சியில் பங்கேற்க வைத்தார் என்பது வரலாறு.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற பேரறிஞர் அண்ணாவின் வழித்தோன்றலாக கலைஞர் அவர்கள் அந்தத் திட்டத்தை அன்றைக்குச் செயல்படுத்திக் காட்டினார்.

இன்றைக்கு அதே திட்டம் பெயர் மாற்றம் செய்யப்பட்டுத் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்ற பெயரைத் தாங்கி, இந்தக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அதை இன்றைக்கு நான் திறந்து வைத்திருக்கக்கூடிய நேரத்தில், உங்கள் முகங்களில் சிரிப்பை மட்டுமல்ல, ஒரு மலர்ச்சியை நான் பார்க்கிறேன், மகிழ்ச்சியை நான் பார்க்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமைந்த காரணத்தால் நாங்கள் பயனடைகிறோம் என்று நீங்கள் மகிழ்ச்சியடைகிறீர்கள். உங்களை

மகிழ்ச்சி அடைய வைக்க திராவிட முன்னேற்றக் கழக அரசு காரணமாக இருந்திருக்கிறது என்று எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது, உங்களின் மகிழ்ச்சியைப் பார்க்கிறபோது!

இன்றைய தினம் 840 குடும்பங்கள், அந்தக் குடும்பங்களின் வாழ்வில் ஒரு மலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஒரு பழமொழி சொல்வார்கள், கல்யாணம் பண்ணிப் பார், வீட்டைக் கட்டிப் பார் என்று.

ஏனென்றால் அவ்வளவு சிரமம். இப்போது கல்யாணம் ரிஜிஸ்டர் அலுவலகத்தில் நடந்துவிடுகிறது, அவரவர்களே முடிவு செய்து கல்யாணம் செய்து கொள்கிறார்கள். அது ஒன்றும் இப்போது அவ்வளவு கஷ்டம் இல்லை. ஆனால் ஒரு காலத்தில் அந்தப் பழமொழி, கல்யாணம் பண்ணிப் பார், வீட்டைக் கட்டிப் பார் என்று சொல்வார்கள், அவ்வளவு கஷ்டம். ஆக, அத்தகைய சாதனைக்குரிய விஷயம்தான் வீடுகள் கட்டுவது என்பது! வீடு என்பது ஒவ்வொரு குடும்பத்தின் கனவு! அந்தக் கனவை நிறைவேற்றுவதற்கு நாங்கள் காரணமாக இருந்திருக்கிறோம் என்பதுதான் எங்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய பெருமை!

அதுவும், கொளத்தூர் தொகுதியில் மிக முக்கியமான பகுதி, இந்த கௌதமபுரம். இங்கு வரும்போதெல்லாம் இந்த கௌதமபுரம் பகுதியிலுள்ள மக்கள் எந்தளவுக்கு எனக்கு வரவேற்பு தந்திருக்கிறார்கள், தந்து கொண்டிருக்கிறார்கள், தந்துகொண்டே இருப்பார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

அப்படிப்பட்ட நிலையிலேதான், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக என்னை நீங்கள் தேர்ந்தெடுத்தபோது, இந்த அடுக்குமாடி குடியிருப்புப் பகுதி மிகப் பழுதடைந்து இருந்த அந்தக் கோலத்தைக் கடந்த 09.08.2015 அன்று இங்கு வந்து நான் பார்த்தேன். அதற்குப் பிறகு மீண்டும் 27.07.2016 அன்று நான் வந்து அதைப் பார்வையிட்டேன். பார்வையிட்டு, அந்தத்



தகவல்களையெல்லாம் சேகரித்து இங்கு இருக்கக்கூடிய நம்முடைய மாவட்டச் செயலாளராக அன்றைக்கு இருந்த, இன்றைக்கு அமைச்சராக இருக்கக்கூடிய நம்முடைய திரு. சேகர்பாபு அவர்கள், அதேபோல இந்த வட்டாரத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. ரங்கநாதன் அவர்கள், நம்முடைய மாநிலங்களவை உறுப்பினர் திரு.கிரிராஜன் அவர்கள், திரு.நாகராஜன் அவர்கள், முரளிதரன் அவர்கள், போன்றவர்கள் எல்லாம் இங்கிருக்கக்கூடிய வட்டக் கழகச் செயலாளர்கள் போன்றவர்களெல்லாம் என்னிடத்தில் தொடர்ந்து இதை வலியுறுத்திக் கொண்டே இருந்தார்கள்.

அதற்குப் பிறகு அவர்கள் தந்த அந்தக் குறிப்புகளையெல்லாம் வைத்துக்கொண்டு, மறுபடியும் நான் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற அந்த வரிசையில் அமர்ந்து இருக்கின்றபோது, இந்தக் குடியிருப்புப் பழுதடைந்து இருக்கிறது, இதைப் பழுது பார்க்க வேண்டும் என்று ஒரு கோரிக்கையை நான் வலியுறுத்தி எடுத்துவைத்தேன். அதற்குப் பிறகு மீண்டும் 03.05.2017 அன்று மீண்டும் இங்கு வந்து நான் பார்வையிட்டேன். உடனடியாகப் பழுது பார்ப்பதற்கு என்னுடைய சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.25 இலட்சத்தை முதற்கட்டமாக நான் ஒதுக்கீடு செய்தேன். ஆக, தொடர்ந்து பல்வேறு பணிகளுக்கு நம்முடைய இங்கே வந்திருக்கக்கூடிய மூத்த வழக்கறிஞர் திரு.என்.ஆர்.இளங்கோ அவர்கள், அவருடைய நாடாளுமன்ற உறுப்பினருடைய மேம்பாட்டு நிதி, அதேபோல இங்கிருக்கக்கூடிய நம்முடைய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடைய மேம்பாட்டு நிதி,




அதற்குப் பிறகு பல்வேறு நிதிகளைப் பெற்று அந்தப் பணிகளெல்லாம் நடந்தது.

அதேபோல, அடுக்குமாடிக் குடியிருப்பில் பழுதடைந்த

- கழிவுநீர்க் குழாய்கள்
- கழிவுநீர்த் தொட்டி
- பழுதடைந்த பீங்கான் கோப்பைகள்
- பழுதடைந்த படிக்கட்டுகள்
- பால்கனிச் சீரமைப்பு
- பழுதடைந்த மேற்கூரையைப் பூசுதல்
- சுவர்ப் பூச்சு வேலை
- தரைத்தளம் ஆகியவற்றைப் பழுது பார்க்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

400 வீடுகள் இருந்த கௌதமபுரத்தில், பழைய வீடுகளெல்லாம் அகற்றப்பட்டு, தற்போது 840 புதிய வீடுகள் கட்டப்பட்டிருக்கிறது.

உண்ண உணவு -

உடுக்க உடை -

இருக்க வீடு -

அனைவருக்கும் கல்வி -

அனைவருக்கும் வேலை -

வாழ்க்கைக்குத் தன்மானம் -

நாட்டுக்கு இனமானம்

ஆகியவற்றை ஊட்டுவதற்கான உருவாக்கியிருக்கக்கூடிய ஆட்சியாகத்தான் இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நீங்களெல்லாம் நன்கு அறிவீர்கள்.

குடிசை மாற்று வாரியம் என்பதை நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று பெயரைச் சூட்டினோம்.

குடிசையை மாற்றிக் கட்டடம் கட்டுவது மட்டும் நோக்கம் அல்ல. இந்த நகர்ப்புர மக்களது வாழ்க்கையும் மேம்பட வேண்டும், வாழ்விடமும் மேம்பட வேண்டும், வாழ்க்கைத் தரமும் மேம்பட வேண்டும் என்று நினைக்கும் அரசுதான் நம்முடைய கழக அரசு. அதனால்தான், இதைத் திராவிட மாடல் அரசு என்று நாம் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம்!

சில மாநிலங்களில் ஏதாவது ஒரு பெரிய விழா நடந்தது என்றால், வெளிநாட்டிலிருந்து ஒரு தலைவரை அழைத்துக் கொண்டுவந்து, நம்முடைய இந்தியாவில் இருக்கக்கூடிய சில மாநிலங்களில் சுற்றிப் பார்க்கின்ற நேரத்தில், அந்த மாநிலத்தில் இருக்கக்கூடியவர்கள் சில வேலைகளைச் செய்திருக்கிறார்கள், என்ன வேலை என்றால், அந்தக் குடிசைப் பகுதிக்

அவர்களுக்குத் தெரியக்கூடாது என்பதற்காகத் தார்ப்பாய்களைப் போட்டு மறைத்திருக்கிறார்கள். அதுவும் நடந்தது, நம்முடைய நாட்டில்.

ஆனால், நம்முடைய மாடல் என்பது, மறைக்கும் மாடல் அல்ல - திராவிட மாடல்! அதனுடைய அடையாளம்தான் இந்த கௌதமபுரத்தில் இருக்கக்கூடிய இந்தக் குடியிருப்பு!

உண்மையான, நேர்மையான இந்தத் திட்டங்களின் மூலமாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை இன்றைக்கு நாம் உயர்த்திக் கொண்டு வருகிறோம். இந்தத் துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய திரு.அன்பரசன் அவர்கள், இங்கே குறிப்பிட்டுச் சொன்னார், 219 இடங்களில் ரூ.10,295 கோடி மதிப்பீட்டில் 94,557 அடுக்குமாடிக் குடியிருப்புகள் நம்முடைய ஆட்சிக்காலத்தில் இப்போது கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவை அனைத்தும் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பதற்கான முயற்சிகள்!

அண்ணா சொன்னது "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்று. அதற்குப் பிறகு கலைஞர் ஆட்சிக்கு வந்த பிறகு, "ஏழையின் சிரிப்பில் அண்ணாவின் முகத்தைக் காண்போம்" என்று சொன்னார். இப்போது நான் சொல்கிறேன் "ஏழையின் சிரிப்பில் கலைஞரின் முகத்தைக் காண்போம்" என்பதுதான் என்னுடைய உணர்வு. ஏழைகளின் முகத்தில் மகிழ்ச்சியை, மலர்ச்சியை உருவாக்கும் திட்டங்களின் மூலமாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு மக்கள் நல அரசு என்பதைத் தினந்தோறும் நாம் மெய்ப்பித்துக்கொண்டு இருக்கிறோம்.

புதிய வாழ்விடங்களைச் சிறப்பாக உருவாக்கித் தரக்கூடிய அந்தப் பணியை இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய அமைச்சர் திரு. அன்பரசன் அவர்கள் மிகச் சிறப்பாக அவர் தன்னுடைய பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். இன்றைக்கு அவர் மட்டுமல்ல, என்னுடையதலைமையில்அமைந்திருக்கக்கூடிய நம்முடைய அரசின் அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கக்கூடிய எந்த அமைச்சரை எடுத்துக் கொண்டாலும், அவரவர்கள் அவர்கள் துறையில் எந்தளவுக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். நம்முடைய அமைச்சர் சேகர்பாபு அவர்களைப் பற்றி உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவர் எப்போது தூங்குகிறார், எப்போது விழித்துக் கொண்டிருக்கிறார், எப்போது எங்கு இருக்கிறார் என்று சொல்ல முடியாது. நேற்றைக்குப் பார்த்தால் நாகர்கோவிலில் இருக்கிறார், கன்னியாகுமரியில் இருக்கிறார், இன்றைக்கு இங்கே வந்திருக்கிறார்.

அதேபோல, அன்பரசன் அவர்கள் பற்றியும் நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அவரும் பம்பரமாகச் சுற்றிக் கொண்டிருக்கிறார். நேரு அவர்களைப் பற்றி சொல்ல வேண்டிய அவசியமே கிடையாது. ஏற்கனவே அமைச்சராக இருந்து அனுபவம் பெற்றவர். இன்றைக்கு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று நம்முடைய தமிழகம் முழுவதும் தினந்தோறும் ஒவ்வொரு நகரப்பகுதிக்கும் சென்று, ஒவ்வொரு மாநகரப் பகுதிக்கும் சென்று சுற்றிச் சுழன்று வந்து கொண்டிருக்கிறார். ஆக, இவை எல்லாம் கலைஞர் அவர்கள் நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கக்கூடிய பாடம்.

கலைஞர் அவர்கள் ஸ்டாலினைப் பற்றி ஏதாவது ஒரு வார்த்தை சொல்லுங்கள் என்று பத்திரிகையாளர்கள் கேட்டபோது, ஒரே வரியில் சொன்னார், உழைப்பு! உழைப்பு! உழைப்பு! என்று சொன்னார். அந்த உழைப்பு எனக்கு மட்டுமல்ல, என்னோடு இணைந்து பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய அமைச்சர்களாக இருந்தாலும் சரி, சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, மேயர்களாக இருந்தாலும் சரி, மாநகராட்சி மன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, எந்தப் பொறுப்பில் அவர்கள் தங்களை ஒப்படைத்துக் கொண்டிருந்தாலும் அந்தப் பொறுப்பை உணர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் திராவிட மாடல் அரசு. ஆக அப்படிப்பட்ட திராவிட மாடல் அரசு இன்றைக்குக் கம்பீரமாகத் தன்னுடைய கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. அதற்கு நீங்கள் என்றைக்கும் பக்கபலமாக இருக்க வேண்டும் என்று உங்களையெல்லாம் அன்போடு கேட்டுக்கொண்டு, இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் உங்களையெல்லாம் சந்திக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு என்னுடைய இதயப்பூர்வமான நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

# "தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் தொடக்கம்"




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கிவைத்தார். (29.09.2022)

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 29.09.2022 அன்று சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை சார்பில், சென்னையில் உள்ள அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியில் (Anna Administrative Staff College) தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்திற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள 30 இளம் வல்லுநர்களுக்கு, 30 நாட்கள் வகுப்பறைப் பயிற்சியுடன் கூடிய இரண்டாண்டு புத்தாய்வுத் திட்டத்தினைத் தொடங்கிவைத்தார்.

தமிழ்நாடு அரசு தனது அனைத்துத் துறைகளிலும் சிறந்த நல்லாட்சியை வழங்கிட பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு அரசு இரண்டாண்டுக்கால "தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்தை (2022-2024)" அறிமுகப்படுத்தியுள்ளது. திறன்மிகு இளைஞர்களின் ஆற்றலையும், திறமையையும் பயன்படுத்தி, நிருவாகச் செயல்முறைகளின் செயல்திறனை மேம்படுத்தி, தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு திட்டங்கள், கொள்கைகளின் சேவை வழங்கலை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனத்தைக் கல்வி பங்காளராகக் கொண்டு சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் ஒருங்கிணைக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், மூன்று கட்டங்களாகத் தேர்வு நடத்தப்பட்டு, தேர்வு செய்யப்பட்ட 30 இளம் வல்லுநர்களுக்கு, அரசின் உயர் அலுவலர்கள், துறை சார்ந்த வல்லுநர்களைக்கொண்டு 30 நாட்கள் வகுப்பறைப் பயிற்சி பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து சென்னையிலுள்ள அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியில் வழங்கப்படும்.

இப்பயிற்சியின் நிறைவில், (i) நீர்வளங்களை மேம்படுத்துதல் (Augmentation of Water Resources),

(ii) வேளாண் உற்பத்தி, விளைச்சல் மற்றும் சந்தைப்படுத்துவதற்குரிய இணைப்புகளை உருவாக்குதல் (Agriculture Production, Productivity and Creating of Marketing Linkages), (iii) அனைவருக்கும் வீடு (Housing For All), (iv) கல்வித் தரத்தை உயர்த்துதல் (Improving Educational Standards), (v) சுகாதாரக் குறியீடுகளை மேம்படுத்துதல் (Improving Health Indicators), (vi) அனைவருக்கும் உள்ளடங்கிய சமூகம் (Social Inclusion), (vii) உட்கட்டமைப்பு மற்றும் தொழில் வளர்ச்சி (Infrastructure and Industrial Development), (viii) திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு (Skill Development and Enterpreneurship Development), (ix) முறையான கடன் (Institutional Credit), (x) மரபு மற்றும் பண்பாடு (Heritage and Culture), (xi) சுற்றுச்சூழல் சமநிலை (Ecological Balance), (xii) தரவு நிருவாகம் (Data Governance) ஆகிய ஒவ்வொரு "கருப்பொருள் பகுதிக்கும்" (Thematic Areas) தொடர்புடைய அரசுத் துறைகளுடன் இரண்டு வல்லுநர்கள் வீதம் மொத்தம் 24 வல்லுநர்களும், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறையின் கண்காணிப்புப் பிரிவில் ஆறு வல்லுநர்களும் ஒருங்கிணைப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

மேலும், இளம் வல்லுநர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டங்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பது, மதிப்பீடு செய்வது, இடையூறுகளைக் கண்டறிவது மற்றும் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட முடிவுகளை எடுப்பதற்கு உதவுவது ஆகியவை அவர்களது முக்கிய பணிகளாகும். இவை, சேவை வழங்கலில் (Service Delivery) ஏதேனும் இடைவெளிகள் இருப்பின் அவற்றினை நிவர்த்தி செய்திடவும், உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கு நிகரான அரசின் சேவைகளை வழங்கிடவும் வழிவகை செய்யும்.

இப்பணிகளைத் திறம்படச் செயல்படுத்தும் பொருட்டு இளம் வல்லுநர்களுக்கு இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மடிக்கணினிகளை வழங்கி, தமிழ்நாடு அரசு மேற்கொண்டுவரும் முன்முயற்சிகளிலும், நல்லாட்சி வழங்குவதிலும் இளம் வல்லுநர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாய்ப்பைச் சிறப்பான முறையில் பயன்படுத்தி முழுமையான அர்ப்பணிப்புடன் பங்களிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இப்புத்தாய்வுத் திட்டத்தின்கீழ், தேர்வு செய்யப்பட்டுப் பயிற்சியில் கலந்துகொள்ளும் இளம் வல்லுநர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மாதாந்திர உதவித்தொகையாக ரூ.65,000 மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளை மேற்கொள்வதற்கான பயணச் செலவு, கைப்பேசி மற்றும் தரவு பயன்பாடு போன்ற செலவினத்திற்காக மாதம் ரூ.10,000 கூடுதல் தொகையாக வழங்கப்படும்.

இரண்டு வருட புத்தாய்வுத் திட்டத்தைத் திருப்திகரமாக நிறைவு செய்யும் வல்லுநர்களுக்கு, பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனம் பொதுக்கொள்கை மற்றும் மேலாண்மையில் முதுகலைச் சான்றிதழ் (Post Graduate Certificate in Public Policy and Management) வழங்கும். இதுதவிர, ஏற்கெனவே முதுகலைப் பட்டம் பெற்றவர்களுக்குக் குறைந்தபட்ச தகுதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனத்தின் மூலம் முனைவர் பட்டப்படிப்பு மேற்கொள்வதற்கு வாய்ப்பும் வழங்கப்படும்.

## தெரிந்து கொள்வோம் !

"**தா**ட்கோ மூலம் செயல்படுத்தப்படும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்திற்கு தற்போது குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதிக எண்ணிக்கையிலான நபர்கள் பயனடையும் வகையில், தற்போது நடைமுறையிலுள்ள குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3 இலட்சமாக உயர்த்தி நிர்ணயிக்கப்படும்."

"காந்திய மண்"



## அக்டோபர் 02:
## உத்தமர் காந்தியடிகள் அவர்களின் பிறந்தநாள்

"பேதங்களைக் கடந்து அன்பும் அமைதியும் மிளிரும் சமூகமாக இந்தியாவை உருவாக்கிட உழைத்த அண்ணல் காந்தியார் பிறந்தநாளில், சமத்துவமும் சகோதரத்துவமும் இந்த மண்ணில் தழைத்து, வெறுப்புணர்வைத் தூண்டும் சக்திகளுக்கு என்றும் இடமில்லை; இது காந்திய மண் எனச் சூளுரைப்போம்!"

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைத்தளப் பதிவு (02.10.2022)

tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

## படமும் / செய்தியும்




உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 154ஆவது பிறந்தநாளையொட்டித் தமிழ்நாடு அரசின் சார்பில் 02.10.2022 அன்று சென்னை, எழும்பூர், அரசு, அருங்காட்சியக வளாகத்தில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு அருகே வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **ஆர்.என்.ரவி** அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களும் மலர்தூவி மரியாதை செலுத்தி, சர்வோதயா சங்கத்தினர் நிகழ்த்திய நூற்பு வேள்வி மற்றும் காந்திய இசைப் பாடல் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்கள்.

# சிறந்த மாணவர்களாக அனைவரையும் உருவாக்குவதே "சிற்பி" திட்டத்தின் நோக்கம்




சென்னைப் பெருநகரக் காவல்துறை சார்பில் பள்ளி மாணவர்களை நல்வழிப்படுத்தும் "சிற்பி" திட்டம் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கிவைத்தார். (14.09.2022)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.09.2022 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில், சென்னைப் பெருநகரக் காவல்துறை சார்பில் பள்ளி, மாணவர்கள் ஒழுக்கத்திலும் கல்வியிலும் மேலும் சிறந்து விளங்கவும், நாட்டுப்பற்றுடன் நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ளவும், அவர்களை நல்வழிப்படுத்தவும், 'சிற்பி' (SIRPI – Students In Responsible Police Initiatives) என்ற புதிய திட்டத்தைத் தொடங்கிவைத்தார். மேலும், சிற்பி திட்டத்தின் ஒருங்கிணைப்பு அதிகாரிகளுக்கு (Nodal Officers) பணி நியமன ஆணைகளையும், இத்திட்டத்தில் இணைந்துள்ள மாணவ, மாணவியர்களுக்குச் சிற்பி திட்டத்தின் சீருடைகளையும் வழங்கி வாழ்த்தினார்.

தமிழகத்தில், சட்டம், ஒழுங்கு சிறந்த முறையில் விளங்கவும், பொதுமக்கள் அச்சமின்றி அமைதியான முறையில் வாழ்வதற்கும், பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்திவரும் நிலையில், காவல்துறையுடன், பள்ளி மாணவர்களின் நெருக்கத்தை வளர்த்து நல்லுறவை ஏற்படுத்தி, சட்டத்தை மதிக்கும் சிறந்த குடிமக்களாகவும், காவல்துறையின் உண்மையான நண்பர்களாகவும் மாற்றும் உயரிய நோக்கில் "சிற்பி" திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

பள்ளியில் பயிலும் மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவதுடன், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கிடவும், சட்டம், ஒழுங்கு பிரச்சினைகளில் ஈடுபடாமல் நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ளவும், போதை உள்ளிட்ட தீய பழக்கங்களுக்கு அடிமையாகாமல் அவர்களை நல்வழிப்படுத்தவும், தாம் கற்ற கல்வியையும், ஒழுக்கத்தையும் பிறருக்குக் கற்றுக் கொடுக்கும் அளவுக்கு அவர்களை வளர்ப்பதற்கும், ஒரு வழிகாட்டி தேவைப்படுவது அறிந்து, பள்ளி மாணவர்களுக்கான ஒரு சிறந்த வழிகாட்டியாக, காவல்துறையினரின் முயற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்தும் பிரிவாக "சிற்பி" (SIRPI – Students In Responsible Police Initiatives) என்ற இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் ஒருங்கிணைப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, மாணவ, மாணவியர்களுக்கு நற்பண்பு, நல்லொழுக்கம், நாட்டுப்பற்று, பொது அறிவு ஆகியவற்றைக் கற்றுக் கொடுப்பதுடன், உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள உடற்பயிற்சிகள், யோகா போன்றவையும் கற்றுக் கொடுக்கப்படும்.

இதன் முதற்கட்டமாக 100 அரசுப் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பள்ளிகளில் இருந்து 8ஆம் வகுப்பு பயிலும் 50 மாணவர்கள் அவர்களது விருப்பத்தின்பேரில், தன்னார்வலர்களாகத் (Volunteers) தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு நற்பண்புகள், உடற்பயிற்சி குறித்த வகுப்புகள் நடத்தப்படும். மேலும், அம்மாணவர்கள் 8 சுற்றுலாத் தலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுக் கல்வி, வரலாறு, பொது அறிவு குறித்து எடுத்துரைக்கப்படும். அத்துடன் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்காக, விளையாட்டுப் பயிற்சி, உடற்பயிற்சி, கவாத்து ஆகியவையும் கற்றுக் கொடுக்கப்படும். நற்பண்புகளை வளர்த்துக்கொள்ள நல்லொழுக்கம், நாட்டுப்பற்று, தேசிய ஒற்றுமை, பிறருக்கு உதவுதல், தாம் கற்ற கல்வியையும், நல்லொழுக்கத்தையும் பிறருக்கு எடுத்துரைத்தல், கண்டுகளித்த வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் மற்றும் நல்ல அனுபவங்கள் குறித்துப் பிறருக்குக் கற்றுத்தருதல் போன்ற நல்ல பண்புகளை வளர்க்க இச்சிறப்பு வகுப்புகள் உதவும்.

மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு, பொதுமக்கள் அமைதியாக வாழ்வதற்கு உறுதுணையாக இருக்கும் காவல்துறையின் செயல்பாடுகள், அமைப்பு, பணிகள் குறித்தும், அவசர உதவி மையங்கள், அதன் செயல்பாடுகள் குறித்தும், சென்னைப் பெருநகரக் காவல் துறையின் செயல்பாடுகள் குறித்தும் எடுத்துரைக்கப்படும்.

இவ்வகுப்புகள் மூலம் அவர்களைச் சிற்பியாக உருவாக்கி, இந்த சிற்பிகள் மூலம் அப்பள்ளியில் உள்ள மற்ற மாணவர்களுக்கும் நற்பண்புகள் கற்பிக்கப்பட்டு, கல்வி, ஒழுக்கம், விளையாட்டு என அனைத்திலும் சிறந்த மாணவர்களாக அனைவரையும் உருவாக்குவதே சிற்பி திட்டத்தின் நோக்கமாகும்.

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், சிற்பி உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### உறுதிமொழி

"நான் இச்சிற்பி திட்டத்தின் வாயிலாகச் சிறந்த மாணவனாகத் / மாணவியாகத் திகழ்வேன், சாலை விதிகளை மதிப்பேன், சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பேன், எந்நாளும் போதைக்கு அடிமையாக மாட்டேன், இயற்கையைப் பாதுகாப்பேன், பகைமை பாராட்டாமல் அன்பை அனைவரிடமும் பகிர்வேன், சமுதாயத்தில் அனைவருக்கும் எடுத்துக்காட்டாய் விளங்குவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்".

## இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

நான் சிறப்புரை ஆற்ற வரவில்லை, சுருக்க உரை ஆற்றத்தான் வந்திருக்கிறேன். காரணம், உடனடியாக உரையாற்றிவிட்டு விமான நிலையத்திற்குச் சென்று மதுரைக்குச்



செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், சுருக்கமாக இந்த நிகழ்ச்சியின் நோக்கத்தைப் பற்றி தொடக்கத்தில் வரவேற்புரை ஆற்றிய நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் மிக விளக்கமாக உங்களிடத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதைத்தான் நான் இந்த நேரத்தில் வழிமொழிகிற நிலையில் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

மிக முக்கியமான, பொறுப்புமிகுந்த நிகழ்ச்சி, இந்த நிகழ்ச்சி. அப்படிப்பட்ட இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். காவல்துறையை, மக்களின் நண்பன் என்று சொல்கிறோம்! அதற்கேற்ப, மக்கள் அனைவரும் காவல்துறையின் நண்பர்களாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம். என்னுடைய எண்ணம் மட்டுமல்ல, எல்லோருடைய எண்ணமும் அப்படித்தான் இருக்கும்.

காவல்துறையும், மக்களும் ஒன்றிணைந்து செயல்பட்டால் குற்றங்கள் குறையும் என்பதைவிட, குற்றமே நிகழாமலும் தடுக்கப்படும் என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த வகையில் மக்களையும் காவல்துறையையும் ஒன்றிணைக்கும் எத்தனையோ திட்டங்கள் நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. அப்படி நடைமுறையில் இருக்கக்கூடிய திட்டங்களைப் போல இது ஒரு முக்கியமான திட்டமாக, சிற்பி என்ற புதிய முன்னெடுப்பைத் தமிழ்நாடு காவல்துறை இன்றைக்கு உருவாக்கியிருக்கிறது. இதனுடைய பொருள் Students in Responsible Police Initiatives (SIRPI).

ஆக, சிற்பி என்ற இந்தத் திட்டத்திற்கு பெயரைச் சூட்டி அதற்காக ஒரு நிகழ்ச்சியை நடத்தி, மக்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்கிற எண்ணத்தோடு இதை ஏற்பாடு செய்திருக்கக்கூடிய காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகளுக்கு நான் முதலில் என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுதல்களை, நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**சிற்பி, என்கிற இந்தத் திட்டம், பொறுப்புமிக்க மாணவர்களை உருவாக்கும் திட்டம்! இந்தத் திட்டத்தை,**

- கடந்த 13.09.2021 அன்று தமிழகச் சட்டப்பேரவையில் நான் அறிவித்தேன்.
- அறிவித்த நேரத்தில் சொன்னேன், ரூபாய் நான்கு கோடியே இருபத்தைந்து இலட்சம் மதிப்பீட்டில் இந்தத் திட்டம் செயல்படுத்த இருப்பதாக நான் அறிவித்தேன்.
- சென்னை மாநகரில் உள்ள 100 அரசுப் பள்ளிகளில், பள்ளிக்குத் தலா 50 மாணவர்கள் வீதம் பங்கேற்கக்கூடிய வகையில் இந்தத் திட்டம் இன்றைக்கு நிறைவேற்றப்படுகிறது.
- சிறுவர்களை இளமைக் காலம் முதலே பொது ஒழுக்கம் உள்ளவர்களாகவும், சமூகப் பொறுப்புள்ளவர்களாகவும் ஆக்க இந்தத் திட்டம் பயன்படும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

சிறார் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதில் தமிழ்நாடு காவல்துறைச் சிறப்புக் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது. சிறார் குற்றச் செயல்களில் ஈடுபட,

- குடும்ப உறுப்பினர்களின் கவனக்குறைவு,
- போதிய குடும்ப வருமானம் இல்லாமை,
- ஆதரவில்லாமல் சிறார்கள் வளர்வது,
- வேலைவாய்ப்பின்மை

போன்றவை பெரும்பாலும் இதற்குக் காரணமாக அமைந்திருக்கிறது. இவற்றைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுப்பதன் மூலமாக, சிறார்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்கிறதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கமாக அமைந்திருக்கிறது.

வளர்ச்சி என்பது ஒரு பக்கத்திலே இருந்தாலும் இன்று ஒரு பக்கத்திலே சில சமூகப் பிரச்சினைகள் அதிகமாகி வருவதை நாம் கவனித்தாக வேண்டும், அதைத் தடுத்தாக வேண்டும்.

- போதைப் பொருள் ஒழிப்பு
- குடிப்பழக்கத்திற்கு எதிரான நடவடிக்கைகள்
- சட்டம் சார்ந்த விழிப்புணர்வு பெறச் செய்தல்\
- அரசு சார்ந்த மற்றும் அரசு சாரா அமைப்புகளுடன் தொடர்பினை ஏற்படுத்துதல்
- சுய ஆளுமைத் திறனை மேம்படுத்துதல்,
- பெற்றோர்களது பேச்சை மதித்து நடத்தல்
- பொதுமக்களோடு தொடர்பு
- இளம் வயதிலிருந்து போக்குவரத்து விதிகளைக் கடைபிடிக்க செய்தல்,
- மாநிலத்தின் செழுமை மற்றும் வளர்ச்சியைக் கண்டு பெருமைகொள்ளச் செய்தல் ஆகிய பண்புகளைச் சிறார்களிடையே உருவாக்கியாக வேண்டும்.

இப்படி உருவாக்கப்படும் மாணவர்கள் எதிர்காலத்தில் நிச்சயமாக தலைசிறந்து விளங்குவார்கள். அதாவது சிற்பியைப் போல நாம் மாணவர்களைச் சிரத்தை எடுத்துச் செதுக்கியாக வேண்டும். இதுகுறித்துக் காவல்துறையின் உயர் அதிகாரிகளிடம் நான் சில தகவல்களைக் கேட்டேன். இந்தத் திட்டத்தை எப்படிச் செயல்படுத்தப் போகிறீர்கள் என்று கேட்டேன்.

இந்தச் செயல் திட்டத்திற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள 100 பள்ளிகளில் எட்டாம் வகுப்பு பயிலக்கூடிய 2,764 மாணவர்களும், 2,236 மாணவிகளும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பள்ளியிலும் இரண்டு ஒருங்கிணைப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பள்ளிகளில் ஒவ்வொரு புதன்கிழமையும் மாணவ, மாணவியர்கள் அப்பள்ளியில் உள்ள இரு ஒருங்கிணைப்பு அதிகாரிகளின் முன்னிலையில் கூடுவார்கள்.

மாணவ, மாணவியர்களுக்கான வகுப்புகளைக் காவல்துறை அதிகாரிகளும் துறைசார் நிபுணத்துவம் பெற்றவர்களும் நடத்துவார்கள். இதுதொடர்பாக மாணவ, மாணவியர்களுக்குப் புத்தகம் ஒன்று வழங்கப்படும்.

இந்த வகுப்புகள் நடைபெறும் தருணங்களில் மாணவ, மாணவியர்களுக்கு ஊட்டச்சத்துமிக்க உணவுகள் வழங்கப்படும். மேலும், இம்மாணவ, மாணவியர்கள் நிருணயிக்கப்பட்ட 8 இடங்களுக்குச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவார்கள் என்று காவல்துறை அதிகாரிகள் என்னிடத்தில் சொன்னார்கள். இங்கே நீங்கள் படக்காட்சியாக தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள். அதைக் கேட்டபோது எனக்கு மனநிறைவு அளிப்பதாக இருந்தது.

"ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் பையனே
நாடு காக்கும் தலைவனாய்
நாளை விளங்கப் போகிறாய்"

என்று பாடினார் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள்.

அத்தகைய எதிர்காலத்தை நம்முடைய சிறுவர்களைச் சமூக ஒழுக்கங்களோடு வளர்த்தெடுக்க வேண்டியது நம்முடைய கடமை! அவர்களைச் சிறப்பாகச் செதுக்கியாக வேண்டும். அப்படி உருவாகும் இளைஞர்கள் சிறந்த சமுதாயத்தை உருவாக்குவார்கள், செதுக்குவார்கள். இந்தப் பயிற்சிக் காலத்தில் மனித உரிமை மீறல்கள் இருக்கக்கூடாது. அவர்களது தன்மானத்துக்கு இழுக்கு ஏற்படும் வகையில் யாரும் நடக்கக்கூடாது. எந்தவிதமான புகாரும் வராமல் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று நான் எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன். நல்லொழுக்கம் கொண்டவர்களாக அவர்களை வளர்ப்பதன் மூலமாக நல்ல தலைமுறைகளை உருவாக்குவோம்.

ஆகவே, இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்கள் அனைவரையும் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன். ●


## மக்களுக்காகவே என்னை அர்ப்பணித்திருக்கிறேன்

**" உங்களால் உருவாக்கப்பட்ட இந்த அரசு உங்களுக்கான பல்வேறு பணிகளைச் செய்வது மட்டுமல்ல, கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது. மக்களுக்காகவே என்னை நான் அர்ப்பணித்திருக்கிறேன். "**

- ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில்,
அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஆற்றிய உரை (10.01.2022)

# ரூ.17.84 கோடியில் திண்டுக்கல்லில் ஒருங்கிணைந்த இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்









திண்டுக்கல் மாவட்டம், தோட்டனூத்து ஊராட்சியில், ரூ.17.84 கோடியில்
ஒருங்கிணைந்த இலங்கைத்தமிழர் மறுவாழ்வு முகாம்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்துவைத்தார். (14.09.2022)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.09.2022 அன்று முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, திண்டுக்கல் மாவட்டம், தோட்டனூத்து ஊராட்சியில், தோட்டனூத்து, அடியனூத்து, கோபால்பட்டி முகாம்களை ஒருங்கிணைத்து ரூ.17.84 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 321 புதிய வீடுகள், உட்கட்டமைப்பு வசதிகளைத் திறந்துவைத்தார்.

"கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது என்றால், கடல் கடந்து வாழும் தமிழர்களின் கண்ணீரால்" என்று எழுதினார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். அத்தகைய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழி நடக்கக்கூடிய இந்த அரசின் சார்பில், கடல் கடந்து வந்த இலங்கைத் தமிழ் மக்களின் கண்ணீரைத் துடைக்கக்கூடிய வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் நலன்காக்க 27.08.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன்கீழ் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார்.

அதில், "கடந்த சில ஆண்டுகளாக முறையான அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்துவரக்கூடிய முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு, பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை அமைத்துத் தருவதை இந்த அரசு உறுதிசெய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதற்காக, அவர்கள் தங்கியிருக்கும் முகாம்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அந்த ஆய்வுகளின் அடிப்படையில், இலங்கைத் தமிழர்களது முகாம்களில், மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள வீடுகள் புதியதாகக் கட்டித்தரப்படும்" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

அதன்படி, திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டத்தில் உள்ள தோட்டனூத்து, அடியனூத்து, கோபால்பட்டி முகாம்களை ஒருங்கிணைத்து 321 புதிய வீடுகளுடன் கூடிய புதிய முகாமினை அமைக்க ஏதுவாகத் தோட்டனூத்துக் கிராமத்தில் 3.05 ஹெக்டேர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான நிதியும் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, தோட்டனூத்து ஊராட்சியில் புதியதாக ஒருங்கிணைந்த இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் அமைக்கப்பட்டு ரூ.15.89 கோடி செலவில் ஒவ்வொரு குடியிருப்பும் தலா 300 சதுரஅடி பரப்பளவில் 321 வீடுகள் கட்டப்பட்டுள்ளது. மேலும், இம்முகாமில் ரூ.1.62 கோடிச் செலவில் அங்கன்வாடி மையம், தார்ச்சாலைகள், சிமெண்ட் சாலை, ஆழ்குழாய், மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி, புதிய மின் கம்பங்கள், 78 தெருவிளக்குகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளும், ரூ.33.10 இலட்சம் செலவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான குளியலறைகள், புதிய ஆழ்குழாய்க் கிணறு ஆகியன அமைக்கப்பட்டுக் குடிநீர் வழங்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திண்டுக்கல் மாவட்டம், தோட்டனூத்து ஊராட்சியில் "ஒருங்கிணைந்த இலங்கைத்தமிழர் மறுவாழ்வு முகாம்" தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் 321 வீடுகள், இதர அடிப்படை வசதிப் பணிகள் எட்டு மாதங்களில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

# நரிக்குறவர் இளைஞர்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் சமூகநீதியைப் பெற நடவடிக்கை!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் அறிக்கை (14.09.2022)



**வி**ளிம்பு நிலையில், அடிப்படை உரிமைகள் இன்றி நீண்ட காலமாகப் பாதிக்கப்பட்டிருந்த நரிக்குறவ மக்களுக்குப் பழங்குடியினர் தகுதி வழங்கியிருக்கும் ஒன்றிய அரசின் முடிவினைத் தமிழ்நாடு அரசின் சார்பில் வரவேற்கிறேன். 2021 சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் "நரிக்குறவர் உள்ளிட்ட மக்கள் பயனடைய அவர்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க ஒன்றிய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தப்படும்" என்று சொல்லியிருந்தோம்.

கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் கடந்த 19.03.2022 அன்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு இதுகுறித்துக் கடிதம் எழுதினேன். அதில் "1965இல் லோகூர் குழுவும்" "1967இல் நாடாளுமன்றக் கூட்டுக்குழுவும்", பிறகு தமிழ்நாடு அரசும், "2013இல் ஒன்றிய அரசின் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அந்தப் பரிந்துரையை ஏற்றுக் கொண்டிருந்ததையும்" சுட்டிக்காட்டி, "விரைவில் குருவிக்காரர் குழுவினருடன் இணைந்த நரிக்குறவர் மக்களுக்குப்" பழங்குடியினர் தகுதி அளித்திட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன்.

இதைத்தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் இது தொடர்பாகக் கோரிக்கை எழுப்பி வந்தனர். இதற்கான மசோதாவும் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடர் முயற்சிகளின் விளைவாக, கழகத்தின் முப்பெரும் விழா விருதுநகரில் நடைபெறுகின்ற இந்த வேளையில், இந்த மகிழ்ச்சிக்குரிய அறிவிப்பு வெளிவந்திருக்கிறது. இடஒதுக்கீட்டிற்காகவும், அடித்தட்டு மக்களின் எழுச்சிக்காகவும் நடத்தி வந்த போராட்டத்திற்கு இப்போது வெற்றி மாலை கிடைத்திருக்கிறது. சமூகநீதி வரலாற்றில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற நேரத்தில் நிகழ்த்தியுள்ள சாதனை இது!

நரிக்குறவர் மக்களுக்குப் பழங்குடியின தகுதி மட்டுமின்றி, எனது தலைமையிலான அரசு அமைந்த பிறகு அவர்களுக்காகப் பல்வேறு சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவர்களின் வாழ்விடங்களுக்குப் பட்டா வழங்குவது, அடிப்படை வசதிகள் வழங்குவது, தொழில் துவங்க உதவுவது என ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நானே அவர்கள் வசிக்கும் பூஞ்சேரி கிராமத்திற்குச் சென்று அவர்களுக்கான அடிப்படை வசதிகளை மட்டுமின்றி, குடும்ப அட்டை போன்ற அடிப்படை உரிமைகளை அளித்து, அவர்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்கான உத்தரவாதத் திட்டத்தைத் துவக்கிவைத்து, ரூ.4.53 கோடிக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினேன். சமூகநீதிக்காக, சமுதாயத்தைக் கை தூக்கி நிறுத்துவதற்காக அடுத்தடுத்து பொருளாதார உதவி நடவடிக்கைகளைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு எடுத்துவருகின்ற நேரத்தில், அவர்களுக்குப் பழங்குடியினத் தகுதி வழங்கும் ஒன்றிய அரசின் நடவடிக்கை, நரிக்குறவர் சமுதாயத்தில் உள்ள இளைஞர்களின் கல்வி, வேலைவாய்ப்பில் சமூகநீதியைப் பெற்றுத்தரும்.

நரிக்குறவர் இன மக்களின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக, அவர்களின் வாழ்வினை ஒளிமயமாக்க எனது தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசு தொடர்ந்து அடுத்தடுத்து சிறப்பு நடவடிக்கைகளை எடுக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



# பழங்குடியினத் தகுதியைப் பெற்றுத் தந்ததற்காக நரிக்குறவர் சமுதாய மக்கள் நன்றி

படமும்/செய்தியும்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 15.09.2022 அன்று விருதுநகர் விருந்தினர் மாளிகையில், நரிக்குறவர் சமுதாய மக்கள் சந்தித்து, நரிக்குறவர் இன மக்கள் பயனடைய அவர்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க ஒன்றிய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி, பழங்குடியினத் தகுதி பெற்றுத் தந்தமைக்காகத் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டனர்.

## நரிக்குறவர்கள் உரிமைகளை வென்றெடுக்கவும் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் அரசு என்றும் துணை நிற்கும்

'பழங்குடியினர்' பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்ற நரிக்குறவர் இனமக்களின் நீண்டநாள் கோரிக்கைக்காகக் கழகமும், கழக அரசும் எடுத்த தொடர் முயற்சிகளின் விளைவாக, ஒன்றிய அமைச்சரவைக் கூட்டத்தில் அதற்கு நேற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மேலும், இதற்கு முன்னதாகவே, கடந்த ஆண்டு நவம்பர் 4ஆம் தேதி, செங்கல்பட்டு மாவட்டம், பூஞ்சேரிக்குச் சென்று நரிக்குறவர் மற்றும் பிற விளிம்புநிலை மக்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளையும் வளர்ச்சித்திட்டப் பணிகளுக்கான ஆணைகளையும் வழங்கினேன்.

இதனைத் தொடர்ந்து, அனைத்து மாவட்டங்களிலும் நரிக்குறவர், பழங்குடியினர் மற்றும் இதர விளிம்பு நிலை மக்கள் வசிக்கும் கிராமங்களில் நேரடியாகக் கள ஆய்வு மேற்கொண்டு, அங்கு வசிக்கும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் அரசின் சார்பாக மேற்கொள்ள வேண்டிய நலத்திட்ட உதவிகளைக் கண்டறிந்து தேவைகள் மதிப்பீட்டுப் பட்டியல் தயார் செய்திடவும் தலைமைச் செயலாளர் வாயிலாக அறிவுறுத்தப்பட்டது.

அதனடிப்படையில், 5,875 குடியிருப்புப் பகுதிகளில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களின் தேவைகள் மதிப்பிடப்பட்டு, புதிய கான்கிரீட் வீடுகள், குடிநீர் இணைப்புகள், மின்சார இணைப்புகள், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், குடும்ப அட்டைகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டைகள், வாக்காளர் அடையாள அட்டைகள், சாதிச் சான்றிதழ்கள், நலவாரிய அட்டைகள், பல்வேறு உதவித் தொகைகள், சாலை வசதி, திறன் பயிற்சி உள்ளிட்டவை வழங்கப்பட்டு வருகின்றன.

நரிக்குறவர்கள் பழங்குடியினராக அறிவிக்கப்படுவார்கள் என்கிற மகிழ்ச்சியான செய்தியும் வெளியாகியிருக்கும் இவ்வேளையில், நரிக்குறவர் இன மக்களின் சமூகநீதிக்காக அனைத்து மட்டங்களிலும் கழக அரசு மேற்கொண்ட தொடர் முயற்சிகளுக்காகவும், மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்காகவும் நரிக்குறவர் இன மக்களின் பிரதிநிதிகள் விருதுநகரில் இன்று என்னைச் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

சமத்துவப் பெரியார் கலைஞரின் வழியில் நடக்கும் நமது அரசு, ஒடுக்கப்பட்ட, விளிம்புநிலை, சிறுபான்மைச் சமூகங்களுக்கான பிரதிநிதியாக இருந்து அவர்களின் உரிமைகளை வென்றெடுக்கவும் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் என்றும் துணைநிற்கும் என்று அவர்களிடத்தில் உறுதியளித்தேன்!

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைத்தளப் பதிவு (15.09.2022)

tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

# ரூ.70.57 கோடியில் விருதுநகர் மாவட்டப் புதிய ஆட்சியர் அலுவலகக் கட்டடம்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அடிக்கல் நாட்டினார். (15.09.2022)

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.09.2022 அன்று விருதுநகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில், விருதுநகர் மாவட்ட ஆட்சியரகப் பெருந்திட்ட வளாகத்தில், ரூ.70.57 கோடி மதிப்பீட்டில் புதிய ஆட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் 2021-2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், விருதுநகர் மாவட்ட ஆட்சியரகப் பெருந்திட்ட வளாகத்தில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, விருதுநகர் மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலகக் கட்டடம் ரூ.70.57 கோடி மதிப்பீட்டில் 2,02,496 சதுரஅடி பரப்பளவில் 6 தளங்களுடன் கட்டப்படவுள்ளது. இக்கட்டடத்தின் தரைத்தளத்தில், அஞ்சலகம், பொதுமக்கள் குறைதீர்க் கூட்ட அரங்கம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேர்தல்பிரிவு அலுவலகம் மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்தம் ஆகியவையும், முதல் தளத்தில் வாகன நிறுத்தம், தொழிலகப் பாதுகாப்புத்துறை, குற்ற வழக்குகள் பதிவுத்துறை, புள்ளியல் துறை அலுவலகங்களும், இரண்டாம் தளத்தில் தேசிய தகவலியல் மையம், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம், மாவட்டக் கருவூலம், இரண்டு துணை ஆட்சியர் அலுவலகங்கள் ஆகியவையும், மூன்றாம் தளத்தில் மாவட்ட வருவாய் அலுவலர், துணை ஆட்சியர் (கலால், முத்திரை, சிறப்புத்திட்டங்கள் அமலாக்கத்துறை) உதவி இயக்குநர் (தமிழ் வளர்ச்சி), ஆதிதிராவிடர் நலத்துறை, தணிக்கை, சுற்றுலாத்துறை அலுவலகங்கள் ஆகியவையும், நான்காம் தளத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கூட்ட அரங்குகள், காணொலிக் கூட்ட அரங்கு, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர், பேரிடர் மேலாண்மைக் கட்டுப்பாட்டு அறை, இரண்டு துணை ஆட்சியர்கள், பயிற்சி ஆட்சியர்கள் அலுவலகங்கள் ஆகியவையும், ஐந்தாம் தளத்தில் அவசரக் கால உதவி மையம், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலகம் (நில எடுப்பு மற்றும் தேசிய நெடுஞ்சாலை ஆணையம், தொழிற்பேட்டை) உதவி இயக்குநர் மருந்துக்கட்டுப்பாடு மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, சிறப்பு வட்டாட்சியர் அலுவலகங்கள் ஆகியவையும், ஆறாம் தளத்தில் துணை இயக்குநர் (சுரங்கம்), மகளிர் நலன் மேம்பாட்டு, உதவி இயக்குநர் நிதி மற்றும் தணிக்கை, மாவட்ட வழங்கல் அலுவலர் அலுவலகங்கள் ஆகிய அலுவலகங்கள் இக்கட்டடத்தில் செயல்படும்.

சிவகாசி வட்டம், ஆனையூர்க் கிராமத்தைச் சேர்ந்த திருமதி மு. பாண்டிதேவி என்பவர், கொத்தனாராக வேலை பார்த்து வந்த தனது கணவர் பணியின்போது இறந்துவிட்டதாகவும், தனக்கு ஒரு மகள் மற்றும் மகன் உள்ளதாகவும், இதில் மகன் மகாராஜா மூளை வளர்ச்சிக் குறைவால் இறந்துவிட்டதாகவும், மகள் புவனேஸ்வரிக்கு கால்கட்டு, மணிகட்டு, மார்புப் பகுதிகளில் எலும்பு வளர்ச்சி அதிகமாக உள்ளதால், கடன் பெற்று சிகிச்சை அளித்து வருவதாகவும், மேலும், வயதான தனது தாயையும் பராமரித்து வருவதாகவும், தற்போதுதான் கூலி வேலை செய்து வறுமையில் வாழ்ந்து வருவதாகவும், எனவே தனக்கு அரசு வேலை வழங்கிட கேட்டு உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தில் மனு அளித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தில் மனு அளித்திருந்த திருமதி மு. பாண்டிதேவி அவர்களுக்கு, அவரது குடும்பச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு சிவகாசி வட்டாரக் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகக் கட்டுப்பாட்டின்கீழ்ச் செயல்படும் சித்துராஜபுரம் மேலூர் அங்கன்வாடி மையத்தில் அங்கன்வாடி பணியாளராகப் பணிநியமன ஆணையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சியரகப் பெருந்திட்ட வளாகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மரக்கன்றை நட்டு வைத்தார். பின்னர், வேளாண் மற்றும் உழவர் நலத்துறை, பள்ளிக்கல்வித்துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செய்தி மக்கள் தொடர்புத்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், மாவட்டத்தில் செயல்படுத்தி வரும் சிறப்புத் திட்டங்கள் ஆகியவை குறித்து அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.




## செப்: 15 பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள்



### ஈன்றெடுத்த தமிழன்னைக்குப் பெயர்சூட்டிய பெருமகன்

“தம்பி! உன்னைத்தான் தம்பி...” என அரசியல் விழிப்புணர்வூட்டி, முற்போக்குச் சிந்தனைகளால் தமிழினத்தை மீட்ட அண்ணன் - ஈன்றெடுத்த தமிழன்னைக்குப் பெயர்சூட்டிய பெருமகன் - நம் தமிழ்நாட்டின் தலைமகன், பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்கி, என்றும் தமிழ்நாட்டு நலனுக்காக உழைத்திட உறுதியேற்போம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைதளப் பதிவு (15.09.2022)

tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in



# பாண்டியர் காலத்தில் தமிழ் வளர்த்த மதுரை, தொழில் வளர்ப்பதிலும் முன்னணியில் விளங்குகிறது

"தோள் கொடுப்போம் தொழில்களுக்கு"
மதுரை மண்டல மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் புதிய திட்டங்களைத் தொடங்கிவைத்து,
கடனுதவிகளை வழங்கி ஆற்றிய உரை (16.09.2022)




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.09.2022 அன்று மதுரையில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற 'தோள் கொடுப்போம் தொழில்களுக்கு' மதுரை மண்டல மாநாட்டில் கலந்துகொண்டு, குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வளர்ச்சிக்காகச் செயல்படுத்தப்பட இருக்கும் பல புதிய திட்டங்களைத் தொடங்கிவைத்து, சிறப்பாகச் செயல்பட்ட குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், அந்நிறுவனங்களுக்குக் கடன் வழங்கிய வங்கிகளுக்கு விருதுகள் வழங்கி, தொழில்முனைவோர்களுக்குக் கடனுதவிகளை வழங்கினார்.

## தொழில்முனைவோர் மற்றும் வங்கிகளுக்கான விருதுகள்

தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்படும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களையும், குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழங்கி, இந்நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் வங்கிகளையும் அங்கீகரித்து, ஊக்கப்படுத்துவதற்காகத் தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்கி வருகிறது.

அதன்படி, 2021 - 2022ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான சிறந்த தொழில் முனைவோருக்கான விருதுகள் விவரங்கள்:

சிறந்த தொழில் முனைவோருக்கான விருது தூத்துக்குடி மாவட்டம், கல்பகா கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும்; வேளாண் சார்ந்த தொழில்களுக்கான விருது திருப்பத்தூர் மாவட்டம், ப்ரெஸ்ரா பிக்ல்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்திற்கும்; தரம் மற்றும் ஏற்றுமதிக்கான விருது தூத்துக்குடி மாவட்டம், ரமேஷ் ப்ளவர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும்; சிறந்த மகளிர் தொழில்முனைவோருக்கான விருது செங்கல்பட்டு மாவட்டம், ஐ.சி.ஏ. ஸ்பெசாலிட்டிஸ் நிறுவனத்திற்கும்; சிறப்புப் பிரிவினருக்கான விருது புதுக்கோட்டை மாவட்டம், பிரபு இண்டஸ்ட்ரியல் கேஸ்சஸ்





நிறுவனத்திற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

### குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு அதிகக் கடன் வழங்கிய முதல் மூன்று வங்கிகளுக்குத் தமிழ்நாடு அரசு விருது

முதல் இடத்திற்கான விருதினை இந்தியன் வங்கிக்கும், இரண்டாம் இடத்திற்கான விருதினை இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கும், மூன்றாம் இடத்திற்கான விருதினை பாங்க் ஆஃப் பரோடா வங்கிக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

### வங்கிக்கடனுக்கான சொத்துப் பிணைய உரிமைப்பத்திரம் பதிவு செய்திட ஆன்லைன் வசதி

தற்போதுள்ள நடைமுறைப்படி, குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், வங்கிகளில் சொத்துப் பிணையம் கொடுத்துக் கடன் பெறும் பொழுது, அந்தச் சொத்தின் மீது கடன் பெற்றுள்ளதை உரிமைப்பத்திரம் ஒப்படைத்துப் (M.O.D. - Memorandum of Deposit of Title Deed and Equitable Mortgage) பதிவு செய்வதற்குச் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு நிறுவனத்தின் உரிமையாளரும் வங்கி மேலாளரும் நேரில் சென்று பதிவு செய்ய வேண்டும். இதனால் கால விரயம் ஏற்பட்டுக் கடன் பெறுவது தாமதமாகிறது. கடன் திருப்பிச் செலுத்தியபின் அதேபோல் M.O.D. பதிவு செய்ததை இரத்து செய்து இரசீது பெறுவதற்கும் வங்கி மேலாளர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் செல்ல வேண்டியுள்ளது. இதனாலும் காலவிரயம் ஏற்படுகிறது.

எனவே, இந்தக் காலவிரயத்தைத் தவிர்க்கும் நோக்கில், தொழில் நிறுவனங்கள், வீட்டுக்கடன் பெறுவோர், விவசாயக்கடன் பெறும் விவசாயிகள் என ஆண்டொன்றுக்குச் சுமார் 6 இலட்சத்து 50 ஆயிரம் நிறுவனங்கள், பயனாளிகள் பயனடையும் வகையில், சொத்தின்மீது கடன் பெறுவதற்கான, உரிமைப்பத்திரம் ஒப்படைத்துப் (Memorandum of Deposit of Title Deed and Equitable Mortgage) பதிவு செய்வதற்கு சார் பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் செல்லாமல் வங்கிகளிலிருந்தே ஆன்லைன் மூலம் உரிய கட்டணம் செலுத்திப் பதிவு செய்திடும் வசதியினையும், கடன் திருப்பிச் செலுத்தியபின் பதிவு செய்ததை ஆன்லைன் மூலமே இரத்து செய்து இரசீது பெறுவதற்கான வசதியினையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்.

மேலும், தொழில் நிறுவனங்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், “தமிழ்நாடு பதிவுச் சட்டத் திருத்தம்” செய்து அதற்கான ஆன்லைன் வசதியும், வாடகை ஒப்பந்தப் பத்திரத்தை ஆன்லைன் மூலம் பதிவு செய்வதற்கான வசதியினையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்.

### குறுந்தொழில் குழுமம் அமைப்பதற்கான ஆணை

மாநிலம் முழுவதும் பரவலாகக் குறுந்தொழில் நிறுவனங்கள் கொண்ட பல்வேறு குறுங்குழுமங்கள் (Micro Clusters) உள்ளன. ஊரகப்பகுதிகளில் நீடித்த நிலையான வேலைவாய்ப்பினை உறுதி செய்திட இந்தக் குறுங்குழுமங்களை மேம்படுத்துவது இன்றியமையாதது ஆகும். இக்குறு நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக, ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்து 20 குறுங்குழுமங்கள் அமைக்கப்படும் என்று 2022-2023ஆம் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக, ஏற்கெனவே, நான்கு குழுமங்கள்



ரூ.32.98 கோடி அரசு மானியத்துடன் ரூ.44.06 கோடித் திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்குப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மதுரை மாவட்டம், விளாச்சேரியில் ரூ.3.63 கோடி அரசு மானியத்துடன் ரூ.4.03 கோடித் திட்ட மதிப்பீட்டில் பொம்மைக் குழுமம், தூத்துக்குடியில் 100 விழுக்காடு அரசு மானியத்துடன் ரூ.2.02 கோடித் திட்டமதிப்பீட்டில் ஆகாயத்தாமரைக் குழுமம், விருதுநகர் மாவட்டம், தளவாய்புரத்தில் ரூ.3.40 கோடி அரசு மானியத்துடன் ரூ.3.77 கோடித் திட்ட மதிப்பீட்டில் மகளிர் நெசவுக் குழுமம் ஆகிய மூன்று குறுங்குழுமங்கள் அமைப்பதற்கான ஆணைகளை வழங்கினார்.

## சிட்கோ நிறுவனத்தின் ஆன்லைன் சேவைகள் தொடக்கம்

சிட்கோ தொழிற்பேட்டைகளில் உள்ள குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில், வங்கி கடனுக்கான தடையின்மைச் சான்று, குடிநீர் இணைப்பு, விற்பனைப்பத்திரம் பெறுதல் உள்ளிட்ட 12 சேவைகளை ஆன்லைன் வாயிலாகப் பெறுவதற்கான வசதிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்.

## பொதுவசதிக் கட்டடங்கள் திறப்பு

கரூர் மாவட்டம், புஞ்சைக்காளக்குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் ரூ.1.93 கோடிச் செலவிலும், இராமநாதபுரம் மாவட்டம், சக்கரக்கோட்டை சிட்கோ தொழிற்பேட்டையில் ரூ.90 இலட்சம் செலவிலும் கட்டப்பட்டுள்ள பொதுவசதிக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்துவைத்தார்.

## பள்ளிப் புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம்

பள்ளிப்பருவத்திலேயே மாணவர்களைப் புத்தாக்கச் சிந்தனையுடன் உருவாக்கிட "பள்ளிப்புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம்" எனும் புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு, புத்தாக்க நிறுவனமும், பள்ளி கல்வித்துறையும் யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தும். இந்த ஆண்டு, முதல் கட்டமாக அரசு, அரசு உதவி பெறும் அனைத்து மேல்நிலைப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையில் பயிலும் 1.56 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கும், 3,120க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கும் தொழில் முனைதல் பற்றிய விழிப்புணர்வு அளிக்கப்படும்.

மேலும், மாணவர்களிடையே புத்தாக்கச் சிந்தனையை ஊக்குவிக்கும் வகையில், மாணவர் குழுக்களின் சிறந்த 40 புத்தாக்கச் சிந்தனைகளுக்கு ரூ.25,000 முதல் ரூ.1 இலட்சம் வரை ரொக்கப் பரிசுகளும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும். இதன்மூலம் மாணவர்களின் சிந்திக்கும் திறன் மேம்படுத்தப்படுவதோடு, அவர்களை வருங்காலத் தொழில்முனைவோர்களாக உருவாக்க முடியும்.

## கேர் திட்டம் (CARE – Covid Assistance and Relief to Entrepreneurs)

கோவிட் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு, வங்கிகளில் கடன்பெற முடியாமல் தவிக்கும் தகுதியுள்ள குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயனடையும் வகையில், ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்து கேர் (CARE) – "தொழில்முனைவோர் கோவிட் உதவி மற்றும் நிவாரணத் திட்டம்" என்கின்ற புதிய திட்டத்தை



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கும் அடையாளமாக முதல் பயனாளிக்கு ரூ.8.80 இலட்சம் காசோலையினைக் கடனாக வழங்கினார்.

## தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி (தாய்கோ) மூலம் கடனுதவி வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டத்தினை 25.08.2022 அன்று திருப்பூரில் தொடங்கிவைத்தார். இத்திட்டம் தாய்கோ வங்கி மூலம் தனது பயணத்தைத் தொடர்ந்து உள்ளது. குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு அதிக அளவில் கடன் வழங்கும் வகையில் தாய்கோ வங்கிச் சீரமைக்கப்படும் என்று அரசு அறிவித்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம் மற்றும் தாய்கோ வங்கியின் ஃப்ளை திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் 4 பயனாளிகளுக்கு ரூ.64.38 இலட்சம் கடனுதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். ஃப்ளை திட்டமானது சிட்கோ நிறுவனத்திடமிருந்து மனை ஒதுக்கீடு ஆணை பெற ஒதுக்கீடு கடிதத்தின் அடிப்படையில் தொழில் முனைவோர்களுக்குக் கடன் வழங்கும் தாய்கோ வங்கியின் கடன் திட்டமாகும்.

## தமிழ்நாடு அரசு கடன் உத்தரவாதத் திட்டம் (TNCGS)

தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சொத்து பிணையில்லாக் கடன் எளிதில் பெறும் வகையில் தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம் (TNCGS) என்கின்ற பிரத்தியேகத் திட்டம் கடந்த மாதம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. கடந்த ஒரு மாத காலத்தில் இத்திட்டத்தின்கீழ், 81 குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.20.13 கோடி கடன் தமிழ்நாடு அரசு கடன் உத்தரவாதத்துடன் வழங்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடித் தளம் (TN TReDs)

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தாங்கள் விற்பனை செய்த பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான தொகையை மிகவும் காலதாமதமாகப் பெறும் நிலைக்குத் தீர்வு காணும் வகையில், தமிழ்நாடு வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடி தளம் கடந்த மாதம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இத்தளத்தில் தமிழ்நாடு அரசின் 76 பொதுத்துறை நிறுவனங்கள் பங்கு பெற்றுள்ளன.

இந்த முயற்சியை முன்னெடுத்து செல்லும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் வங்கிகள், ட்ரட்ஸ் தளத்திற்கான ரூ. 1,391 கோடிக்கான தங்களது கடன் உச்ச வரம்புகளை அறிவித்துள்ளதன் மூலம் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் தோள் கொடுக்கும் பங்குதாரர்களாக மாறியுள்ளன. இது வெகுவிரைவில் ரூ. 5,000 கோடியை அடையும்.

## குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான அரசு திட்டங்கள் குறித்த கையேடு வெளியீடு

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக மாநில, ஒன்றிய அரசுகள் பல்வேறு துறைகள் மூலம் நிதி வசதி, உட்கட்டமைப்பு, திறன் மேம்பாடு, தர மேம்பாடு, தொழில்நுட்ப மேம்பாடு, உள்நாடு மற்றும் வெளிநாடு சந்தை வாய்ப்புகள் ஆகியவற்றிற்கான

திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றன. இத்திட்டங்கள் குறித்த தகவல்கள் ஒரே இடத்தில் இடம்பெறும் வகையில், 97 திட்டங்கள் குறித்த தகவல்கள் தொகுக்கப்பட்டு, அதற்கான கையேட்டினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

### மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்

உலக அளவில் நம் தொழில் நிறுவனங்கள் போட்டியிட்டு நீடித்த வளர்ச்சி அடைய வேண்டும் என்பதால், நான்காம் தலைமுறை தொழில் நுட்பத்திற்கு (Industry 4.0) குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தயார்படுத்திக்கொள்ள பயிற்சி வழங்குவதற்காக இண்டோ அமெரிக்கன் சேம்பர் ஆஃப் காமர்ஸ் மற்றும் தமிழ்நாடு அரசின் FaMe TN நிறுவனம் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

### இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டு நாள் பயணமாக மதுரை வந்த நான் நேற்றைய தினம் மாநிலம் முழுமைக்குமான பள்ளி மாணவர் காலை உணவுத் திட்டத்தை இதே மாநகரில் நான் தொடங்கி வைத்திருக்கிறேன்.

இன்றைய தினம் மதுரைப் பகுதி குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன்.

சென்னை, கோவை, திருப்பூருக்கு அடுத்ததாக மதுரையில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

தொழில் வளர்ச்சி என்கிறபோது அது பெரிய தொழில்கள் மட்டுமல்ல, குறு, சிறு, நடுத்தரத் தொழில்களையும் உள்ளடக்கியதுதான். இந்தத் தொழில்கள் மூலமாகத்தான் ஏராளமானவர்களுக்கு வேலை கிடைக்கும், பல இலட்சம் குடும்பங்கள் வாழும் அந்த அடிப்படையில் இவற்றின் வளர்ச்சியைத் தமிழக அரசு முக்கியமானதாகக் கருதுகிறது.

பாண்டியர் காலத்தில் தமிழ் வளர்த்த மதுரை, இன்று தொழில் வளர்ப்பதிலும் முன்னணியில் விளங்குகிறது. இத்தகு சிறப்புமிகு தூங்காநகரில் இவ்விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

பரவலான வளர்ச்சியே பார்போற்றும் வளர்ச்சி, சமச்சீரான வளர்ச்சியே சிறப்பான வளர்ச்சி என்பதை உறுதி செய்திடக்கூடிய வகையில் கடந்த ஜனவரி மாதம் தென் தமிழகத்தில் தூத்துக்குடியில் தொழில் துறை சார்ந்த மாநாடு நடத்தப்பட்டது. இன்று மதுரையில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சார்பில் "தோள் கொடுப்போம் தொழில்களுக்கு" என்ற முழக்கத்தோடு தென்மண்டல மாநாடு, விருதுகள் வழங்கக்கூடிய விழா மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மதுரை மாவட்டத்தில் சுமார் 50 ஆயிரம் பதிவு செய்யப்பட்ட குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்நிறுவனங்களின் மூலம் 3.37 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கிறது.

- மதுரை சுங்கடிச் சேலைகள்
- ஆயத்த ஆடைகள்,
- வீட்டு உபயோக பிளாஸ்டிக் பொருட்கள்,
- மதுரை அப்பளம்

ஆகியவற்றிற்குப் பெயர் பெற்றது.

தமிழ்நாட்டின் தனித்தன்மையான பொருட்கள் ஏராளமாக இருக்கின்றன. குறிப்பாக, புவிசார்க் குறியீடு பெற்ற 42 பொருட்களில் 18 பொருட்கள் தென்தமிழ்நாட்டைச் சார்ந்தவை. அது என்ன 18 பொருட்கள் என்று கேட்டீர்கள் என்றால்,

- நாகர்கோவில் கோவில் நகைகள்
- ஈத்தாமொழி நெட்டைத் தென்னை
- விருபாச்சி மலை வாழைப்பழம்
- சிறுமலை மலை வாழைப்பழம்
- பத்தமடைப் பாய்கள்
- மதுரை மல்லி
- திண்டுக்கல் பூட்டுகள்
- திருவில்லிப்புத்தூர் பால்கோவா
- கோவில்பட்டி கடலைமிட்டாய்
- பழனி பஞ்சாமிர்தம்
- கொடைக்கானல் மலைப் பூண்டு
- மதுரைச் சுங்கடி சேலைகள்

- அலைப்பை பச்சை ஏலக்காய்
- கன்னியாகுமரி கிராம்பு
- மலபார் மிளகு
- காரைக்குடி கண்டாங்கிச் சேலைகள்
- ஈஸ்ட் இந்தியா லெதர்
- செட்டிநாடு கோட்டான் என்கின்ற பனை ஓலைக் கூடைகள்

எனத் தமிழ்நாட்டைச் சேர்ந்த 18 வகையான பொருட்கள் புவிசார்க் குறியீடு பெற்றுள்ளதை நான் இங்குப் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். இதுமட்டுமல்ல, புவிசார்க் குறியீடு பெற்ற அதைப் பெறுவதற்காக விண்ணப்பித்துள்ள 25 வகையான பொருட்களில்,

- கம்பம் பன்னீர் திராட்சை
- உடன்குடி பனங்கற்கண்டு
- தூத்துக்குடி மக்ரூன்
- சோழவந்தான் வெற்றிலை
- மார்த்தாண்டம் தேன்

உள்ளிட்ட 14 வகையான பொருட்கள் தென் தமிழகத்தைச் சேர்ந்தவை என்பது பெருமைக்குரிய ஒன்று. இப்பொருட்களுக்கு மிகப் பெரிய அளவில் வெளிநாடுகளில் வரவேற்பு உள்ளது என்கிற காரணத்தால், நமது உற்பத்தியாளர்களும், ஏற்றுமதியாளர்களும் அதிக அளவில் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து தமிழகத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டும்!

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு MSME நிறுவனங்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வண்ணம்

- மாநில அளவில் சிறந்த தொழில்முனைவோர் விருது
- மாநில அளவில் சிறந்த வேளாண்சார்த் தொழில் நிறுவனத்திற்கான விருது
- மாநில அளவில் சிறந்த மகளிர் தொழில்முனைவோர் விருது
- மாநில அளவில் தரம் மற்றும் ஏற்றுமதி நிறுவனத்திற்கான விருது
- சிறப்புப்பிரிவைச் சேர்ந்த சிறந்த நிறுவனத்திற்கான விருது

என விருதுகள் என்னால் வழங்கப்பட்டுள்ளன. விருது பெற்றுள்ள நிறுவனத்திற்கும், நிறுவனத்தின் நிருவாகத்திற்கும், என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்நிறுவனங்கள் மென்மேலும் வளர்ந்து இந்திய அளவில் உலக அளவில் சிறப்புப் பெற வேண்டும் என்பதே என்னுடைய விருப்பம்.

MSME நிறுவனங்களுக்கு அதிக அளவில் கடன் வழங்கியதன் அடிப்படையில் விருது பெற்ற வங்கிகளுக்கு எனது மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதோடு, மென்மேலும் சிறந்த முறையில், அனைத்துப் பிரிவினருக்கும் கடன் வழங்கிச் சமச்சீரான தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் எனவும் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

வாடகை ஒப்பந்தப் பத்திரத்தை ஆன்லைன் மூலம் பதிவு செய்வதற்கான வசதியும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சொத்துப் பிணையில்லாக் கடன் எளிதில் பெறும் வகையில் தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம் (TNCGS) என்கின்ற பிரத்தியேகத் திட்டம் கடந்த மாதம் என்னால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த ஒரு மாத காலத்தில் இத்திட்டத்தின்கீழ், 81 MSME நிறுவனங்களுக்கு ரூ.20.13 கோடிக் கடன் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

- தாய்கோ வங்கி சீரமைக்கப்பட்டுள்ளது.
- கேர் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடித் தளம் தொடங்கப்பட்டுள்ளது.
- சிட்கோ மூலம் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
- பெருங்குழுமத் திட்டம், குறுங்குழுமத் திட்டம் ஆகியவற்றை அரசு அறிவித்துள்ளது.

இந்த வரிசையில் தற்போது,

- மதுரை மாவட்டம், விளாச்சேரி பொம்மைக் குழுமம்,
- தூத்துக்குடி ஆகாயத் தாமரைக் குழுமம்,
- விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் மகளிர் நெசவுக் குழுமம்

ஆகிய குழுமங்கள் ரூ.9.05 கோடி அரசு மானியத்துடன் ரூ.9.82 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைப்பதற்கான ஆணை என்னால் வழங்கப்பட்டுள்ளது.

இதுமட்டுமில்லாமல்,



✷ காஞ்சிபுரம் நரிக்குறவர் பாசிமணிக் குழுமம்,

✷ திருநெல்வேலியில் சமையல் பாத்திரக்குழுமம்,

✷ திருப்பத்தூரில் ஊதுபத்திக் குழுமம்,

✷ சேலம் மாவட்டம், தம்மம்பட்டியில் மரச்சிற்பக் குழுமம்,

✷ கிருஷ்ணகிரியில் மூலப்பொருட்கள் கிடங்கு குழுமம்,

✷ ஈரோட்டில் மஞ்சள்தூள் உற்பத்தி செய்யும் குறுந்தொழில் குழுமம்,

✷ ஈரோடு மாவட்டம், பவானியில் ஜமுக்காளம் உற்பத்தி செய்யும் குறுந்தொழில் குழுமம்,

ஆகிய குழுமங்களுக்குப் பொதுவசதி மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூரில், தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம் கடந்த மாதம் என்னால் தொடங்கி வைக்கப்பட்டது. இதன்மூலம் மேற்கு மாவட்டங்கள் மட்டுமில்லாமல், திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய தென்மாவட்டங்களிலுள்ள கயிறு தொழில் நிறுவனங்கள் பயனடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டில் எளிமையாகத் தொழில் புரிதல் பட்டியலில் தமிழ்நாடு 14ஆவது இடத்தில் இருந்து, இப்போது 3ஆவது இடத்திற்கு முன்னேறி வந்திருக்கிறது. அடுத்து முதல் இடத்தைப் பிடிப்பதே நமது இலக்கு.

அதேபோல், ஸ்டார்ட் அப் இந்தியா வெளியிட்ட தரவரிசைப் பட்டியலில் பல படிகள் முன்னேறி அரசின் சிறந்த புத்தொழில் செயல்பாடுகளுக்கான 'லீடர்' அங்கீகாரத்தைத் தற்போது பெற்று இருக்கிறது.

தமிழ்நாட்டை 2030க்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்றிட வேண்டும் என்கின்ற இலக்கை அடைய, ஏற்றுமதி வர்த்தகம் முக்கியமாகும். எனவே, ஏற்றுமதியை ஊக்குவித்து வருகிறோம்.

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கை சார்ந்த முடிவுகள் எடுப்பதற்கும், திட்டங்கள் வகுப்பதற்கும், MSME நிறுவனங்கள் குறித்த தரவுகள் மிக முக்கியம். எனவே, பதிவு செய்த MSME நிறுவனங்கள் குறித்த நிகர்நிலைத் தரவுகளைப் பெற, ஒன்றிய அரசின் MSME அமைச்சகத்துடன் தமிழக அரசின் MSME துறை விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள உள்ளது.

சென்னை போன்ற பெருநகரங்களில் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும், புத்தொழில் வளர்ச்சி பெற வேண்டும் என்கிற நல்ல நோக்கத்தோடு, மதுரை, திருநெல்வேலி, ஈரோடு மாவட்டங்களில் வட்டாரப் புத்தொழில் மையங்கள் அண்மையில் என்னால் தொடங்கி வைக்கப்பட்டன. மூன்று வட்டார புத்தொழில் மையங்களில் இரண்டு தென் தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

தொழில் வளர்ச்சியை மேம்படுத்த ஒரு முக்கியமான அறிவிப்பு ஒன்றை இந்த நிகழ்ச்சியில் நான் வெளியிட விரும்புகிறேன்.

தொழில் முனைவோர்கள் சொத்துப் பிணையம் கொடுத்துக் கடன் பெறும்போது, சொத்தின்மீது கடன் பெற்றுள்ளதை உரிமைப்பத்திரம் ஒப்படைத்துச் (Memorandum of Deposit of Title

Deed) சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்கின்றனர். அதே சொத்தின் மீது கூடுதல் கடன் பெறும்போது திரும்பவும் பதிவு செய்ய வேண்டிய முறை தற்பொழுது நடைமுறையில் உள்ளது.

ஒரு சொத்தின்மீது எத்தனை முறைக் கூடுதல் கடன் பெற்றாலும், அத்தனை முறையும் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். இதனால் கால விரயம் ஏற்படுவதுடன் கடன் பெறுவதிலும் காலதாமதம் ஏற்படுகிறது. இந்த நடைமுறையை மாற்றி, அதே சொத்தின்மீது கூடுதல் கடன் பெறும்போது பதிவு செய்யத் தேவை இல்லை என்ற நடைமுறை கொண்டு வரப்படும்.

இத்துடன் இந்த மாநாடு நடைபெறும் மதுரையை மையப்படுத்தி, மற்றொரு மகிழ்ச்சியான அறிவிப்பையும் நான் வெளியிடுகிறேன்.

2000ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சென்னையில் திறந்து வைத்த டைடல் பூங்கா, மாநிலத்தினுடைய தகவல் தொழில்நுட்பப் புரட்சிக்கு முன்னோடியாகத் திகழ்ந்து வருவதை நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள். தகவல் தொழில்நுட்பப் புரட்சியைத் தமிழ்நாட்டின் இரண்டாம், மூன்றாம் நகருக்கு எடுத்துச்செல்ல, டைடல் நிறுவனம், கோயம்புத்தூரில் ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்காவை உருவாக்கியதுடன், திருப்பூர், விழுப்புரம், தூத்துக்குடி, தஞ்சாவூர், சேலம், வேலூர் மற்றும் ஊட்டி ஆகிய இடங்களில் New Tidal பூங்காக்களை நமது அரசு உருவாக்கி வருகிறது. தகவல் தொழில்நுட்பம், FINTECH போன்ற அறிவு சார்ந்த தொழில்களுக்கான முக்கிய மையமாக மதுரையை மாற்றும் வகையில் டைடல் மற்றும் மதுரை மாநகராட்சி இணைந்து SPB மூலம் ஒரு முன்னோடி டைடல் பூங்கா அமைக்கப்படவுள்ளது. இந்தப் பூங்கா டைடல் லிமிடெட் நிறுவனத்தால், இயக்கப்பட்டு நிருவகிக்கப்படும். மதுரை நகரின் மையப் பகுதியான மாட்டுத் தாவணியில் இரண்டு கட்டங்களாக இந்தப் பூங்கா கட்டப்படும். முதற்கட்டமாக, ரூ.600 கோடித் திட்ட மதிப்பீட்டில், ஐந்து ஏக்கரில் இது அமைக்கப்படும். இரண்டாம் கட்டத்தில், மேலும் ஐந்து ஏக்கரில் இரட்டிப்பாக்கப்படும். இந்தப் பூங்காவானது, தகவல் தொழில்நுட்பம் FINTECH, தகவல் புதிய தொழில்நுட்பங்களுக்குத் தரமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதுடன் மதுரை மண்டலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும், அது வழிவகுக்கும். முதல் கட்டத்தில், 10,000 பேர் இதனால் வேலைவாய்ப்புப் பெறுவர் என்று எதிர்பார்க்கிறோம்.

பொதுவாகத் தொழில் வளர்ச்சி என்பதை அந்தத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியாக மட்டும் நாங்கள் பார்ப்பது இல்லை. அதன் மூலமாக வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன. எனவே, பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் வளர்ச்சியாகவே நாம் பார்க்கிறோம்.

அந்த வட்டாரம், மாவட்டம் வளர்ச்சியைப் பெறுகிறது. இதன் மூலமாக மாநிலத்தின் வளர்ச்சிக் குறியீடானது வளர்கிறது. இந்த வகையில், குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் அனைத்தையும் மாநிலத்தின் வளர்ச்சிக்கு மிக,மிக அவசியமானவை என நாம் நினைக்கிறோம்.

உங்களது தேவைகளைச் சொல்லுங்கள். நிறைவேற்றித் தருகிறோம். தமிழ்நாட்டுக்கு நிலையான வளத்தை நீங்கள் உருவாக்கித் தாருங்கள்!

இந்த நல்ல நாளில் விருதுகள் பெற்றிருக்கக்கூடிய அனைவருக்கும் என்னுடைய நல்வாழ்த்துகளைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

## இனிமையான தமிழ்

**“தமிழைப் பேசும்போது இனிமையாக இருக்கிறது.<br>தமிழைக் கேட்கும்போது இனிமையாக இருக்கிறது.<br>ஏன், 'தமிழ்' என்று சொல்லும்போது இனிமையாக இருக்கிறது.”**

-கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள் வழங்கும் விழாவில்,<br>தமிழறிஞர்களுக்கு விருதுகள் வழங்கும் விழாவில்<br>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்<br>திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை. (22.01.2022)

# எந்நேரத்திலும், எவ்விடத்திலிருந்தும் பட்டா மாறுதல் பெறும் இணையவழிச் சேவைத் தொடக்கம்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 23.09.2022 அன்று தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில், 'எங்கிருந்தும் எந்நேரத்திலும்' என்ற இணையவழிச் சேவையின் மூலமாகப் பொதுமக்கள் எங்கிருந்தும் பட்டா மாறுதலுக்கு விண்ணப்பிக்கும் வசதி மற்றும் நகர்ப்புறப் புல வரைபடங்களை இணையவழியில் பதிவிறக்கம் செய்துகொள்ளும் வசதி ஆகியவற்றைத் தொடங்கிவைத்தார்.

வருவாய்த்துறை, மாநிலத்தின் நிருவாக அமைப்புக்கு முதுகெலும்பாக விளங்குவதோடு, சாமானிய மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், அரசின் பல்வேறு சமூகப் பொருளாதாரத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றுகிறது. பொதுமக்கள், விவசாயிகள், மாணவர்களுக்குத் தேவையான பல்வேறு ஆவணங்கள், பட்டா, சிட்டா, அடங்கல், சாதிச்சான்று, இருப்பிடச் சான்று, வருமானச் சான்று போன்ற பல்வேறு சான்றிதழ்களை வழங்கி வருகிறது. இத்துறையின் பணியினை மேலும் செம்மைப்படுத்தும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், துறை அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல், வருவாய்த்துறை பணிகளைக் கணினிமயமாக்கல் போன்ற பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், பட்டா மாறுதலுக்கு விண்ணப்பிக்கும் வசதி மற்றும் நகர்ப்புறப் புல வரைபடங்களை இணையவழியில் பதிவிறக்கம் செய்யும் வசதியைத் தொடங்கிவைத்தார். (23.09.2022)

## பட்டா மாறுதலுக்கு இணைய வழியில் விண்ணப்பிக்கும் வசதி

நில உரிமையாளர்கள் பட்டா மாறுதலுக்கான விண்ணப்பங்களைப் பொதுச் சேவை மையங்கள் (Common Service Centres), சார்பதிவாளர் அலுவலகம் வாயிலாக விண்ணப்பித்து, அவை இணையவழியில் பரிசீலிக்கப்பட்டு, பட்டாமாறுதல் ஆணைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது, பொதுமக்களின் வசதிக்காக எந்நேரத்திலும், எவ்விடத்திலிருந்தும் பட்டா மாறுதல் கோரி https://tamilnilam.tn.gov.in/citizen/ என்ற இணைய வழியில் விண்ணப்பிக்கும் புதிய வசதி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இப்புதிய சேவையின் மூலம், பொதுமக்கள் பட்டா மாற்றத்திற்கு விண்ணப்பிக்கும் பொருட்டு வட்டாட்சியர் அலுவலகங்கள் / பொதுச்சேவை மையங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமிருக்காது, பொதுமக்கள் நில உட்பிரிவுக்கான கட்டணம், செயலாக்கக்

கட்டணங்களைச் செலுத்த வங்கிகளுக்கு நேரில் செல்லாமல், இணையவழியிலேயே செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், பட்டா மாறுதல் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், பொதுமக்கள் பட்டா உத்தரவின் நகல், பட்டா, புலப்படச்சுவடி ஆகியவற்றை 'எங்கிருந்தும், எந்நேரத்திலும்' என்ற இணையவழிச் சேவையின் மூலமாகக் கட்டணமின்றிப் பதிவிறக்கம் செய்துகொள்ளும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. இதனால், பொதுமக்கள், பொதுச்சேவை மையங்களுக்குச் செல்வதும், வட்ட அலுவலகங்களில் இடைத்தரகர்களால் அவதிப்படுவதும் தவிர்க்கப்படும்.

### நகர்ப்புறங்களுக்கான வரைபடங்களை இணையவழியில் பதிவிறக்கம் செய்துகொள்ளும் வசதியை ஏற்படுத்துதல்

தமிழ்நாட்டில் நகர்ப்புற நில ஆவணங்கள் 2014 முதல் 2017ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் கணினிப்படுத்தப்பட்டுத் தமிழ்நிலம் (நகர்ப்புறம்) என்னும் மென்பொருள் மூலம் படிப்படியாக இணையவழிப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

கணினிப்படுத்தப்பட்ட பிளாக் வரைபடங்களை, தனித்தனி நகரப் புலங்களுக்கான வரைபடங்களாக https://eservices.tn.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்துகொள்ளும் இப்புதிய வசதி மூலமாக, பொதுமக்கள் நகர்ப்புற நிலவரைப் படங்களை இணையவழியில் கட்டணமின்றிப் பெறலாம். மேலும், இவ்வரைபடம், மனை அங்கீகாரம் மற்றும் வங்கிக் கடன் பெறுதல் போன்ற இதரச் சேவைகளுக்கு அத்தியாவசியமாக விளங்குவதுடன், பொதுமக்கள், நகரநிலவரைபடம் பெறும்பொருட்டு வட்டாட்சியர் அலுவலகம் வருவது தவிர்க்கப்படும்.

## கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களுக்குத் திருவுருவச் சிலை

படமும் / செய்தியும்




இங்கிலாந்து நாட்டின், கேம்பர்ளி நகரில், முல்லைப் பெரியாறு அணையை உருவாக்கித் தென் தமிழ்நாட்டின் நீர்வளத்திற்கு வித்திட்ட கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களுக்குத் திருவுருவச் சிலை நிறுவப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து, 10.09.2022 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் நிறுவப்பட்டுள்ள கர்னல் ஜான் பென்னிகுயிக் சிலையை, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கம்பம் ராமகிருஷ்ணன், திரு.கோ.தளபதி, திரு. மகாராஜன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப, கேம்பர்ளி தமிழ் பிரிட்டிஷ் சங்க நிருவாகிகள் ஆகியோர் பார்வையிட்டார்கள்.

# வனச்சூழலைப் பாதுகாத்திட தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது



"பசுமைத் தமிழ்நாடு இயக்கம்"
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தொடங்கிவைத்தார். (24.09.2022)

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 24.09.2022 அன்று செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில், தமிழகத்தின் வனப்பரப்பை அதிகப்படுத்தும் நோக்கில் நடப்பாண்டில் முதற்கட்டமாக 2.80 கோடி மரக்கன்றுகள் நடும் திட்டத்தைப் பள்ளி மாணவர்களுடன் 500 உள்ளூர் நாட்டு மரக்கன்றுகளை நட்டு, பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தைத் தொடங்கிவைத்தார்.

வனங்களின் சுற்றுச்சூழல், சமூகத்திற்குத் தூயக்காற்று, நீர் வளங்கள், வளமான மண், உயிர்ப்பன்மை, வாழ்வதற்கேற்ற சூழல் போன்றவற்றை வழங்குகின்றன. மேலும், கரியமில வாயுவினை மறுசுழற்சி செய்து அதன் வெளிப்பாட்டினைக் கட்டுப்படுத்துல், பருவநிலையை முறைப்படுத்துதல், இயற்கை சீற்றங்களைத் தணித்தல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய சூழலமைப்புச் சேவைகளை வனங்கள் வழங்கி வருகின்றன. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வனச்சூழலைப் பாதுகாத்திடத் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைச் சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

"தமிழ்நாட்டின் காடு, மரங்களின் அடர்த்தியை மாநிலத்தின் நிலப்பரப்பில் 33 சதவிகிதமாக உயர்த்துவதற்காக, தமிழ்நாடு பசுமை இயக்கத்தை அரசு ஏற்படுத்தவுள்ளது. தமிழ்நாடு பசுமை இயக்கத்தின்கீழ், பல்வேறு துறைகள், பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடனும், மக்களின் முழு அளவிலான பங்களிப்புடனும், பலதரப்பட்ட நம் மண்சார்ந்த மரங்களை நடுவதற்குப் பெரும் மரம் நடவுத் திட்டம் ஒன்று அடுத்த 10 ஆண்டுக்காலத்தில் செயல்படுத்தப்படும்" என்று 2021-2022ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழகத்தில் வனப்பரப்பை அதிகப்படுத்தி, பசுமைப் போர்வையை விரிவுபடுத்தும் வகையில் "பசுமைத் தமிழ்நாடு இயக்கம்" தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

நாட்டுமர வகைகள் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளையும், இயற்கை பேரிடர்களை எதிர்கொள்ளவும், அப்பேரிடர்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் திறன் கொண்டதாகவும் திகழ்வதால், அதிக அளவிலான நாட்டு மரங்கள் நடுவது மற்றும் ஊக்குவிப்பது பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இந்த இயக்கத்தின்கீழ், அடுத்த பத்தாண்டுக் காலத்தில் நகர்ப்புறப் பகுதிகள், விவசாயப் பண்ணைகள், கல்வி நிறுவனங்கள்,



பசுமைத் தமிழ்நாடு இயக்க தொடக்க விழாவில், வனத்துறை சார்பில், அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்குகளில் பொதுமக்கள் மரக்கன்றுகள் நடுதலைப்பற்றித் தேவையான விவரங்களை அறிந்துகொள்ளும் வகையில் வைக்கப்பட்டுள்ள எண்ம சுவர் (Digital Wall), எண்ம நூல்கள் (Digital Book) போன்றவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

மேலும், இந்நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பசுமைத் தமிழ்நாடு இயக்கம் குறித்த ஆவணச் சிறப்பு மலரை வெளியிட்டார். பின்னர், பசுமையாக்கல் மற்றும் மரம் வளர்ப்புப் பணிகளில் சிறந்த முறையில் பங்காற்றிய விவசாயிகள், தனிநபர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டிச் சிறப்பித்தார்.

கோயில் நிலங்கள், தொழிற்சாலைகள், தொழிற்சாலைகளுக்குச் சொந்தமான நிலங்கள், ஏரிக்கரைகள், நீர்ப்பிடிப்புப் பகுதிகள், ஆற்றுப் படுகைகள், பிற பொதுநிலங்களில் பொருளாதாரம் மற்றும் சூழல் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் மர வகைகள் நடப்படும்.

மேலும், பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின்கீழ், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த, உயர்ரக மரங்களான சந்தனம், செம்மரம், ஈட்டி மரம் போன்ற மரங்களை வளர்க்க விவசாயிகள் ஊக்குவிக்கப்படுவார்கள். இயற்கை வளங்களை நிலையான முறையில் பயன்படுத்தி வனப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினர், விவசாயிகள், கிராம மக்கள் போன்ற உள்ளூர் சமூகங்களின் வருமானத்தைப் பெருக்கவும் இத்திட்டம் உதவும்.

பசுமைத் தமிழ்நாடு இயக்கத்திற்காகப் பல்வேறு மாவட்டங்களில் வனத்துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தனியார் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் நாற்றங்கால்கள் போன்றவற்றின் மூலமாக 2.80 கோடி மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டுள்ளன.

நாற்றுக்களின் தேவை மற்றும் நாற்றங்கால்களைக் கண்காணிக்க, பசுமைத் தமிழ்நாடு இயக்கத்திற்காக www.greentnmission.com என்ற தனி இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், மரக்கன்றுகளின் நடவு, பிழைப்புத்திறன் (Survival Rate) போன்றவற்றைக் கண்காணிப்பதற்கு அனைத்து நடவு இடங்களின் விவரங்கள் புவிக்குறியீடு தரவுகளுடன் சேகரிக்கப்படுகின்றன.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பசுமைத் தமிழ்நாடு இயக்கத்திற்குத் தங்களது பங்களிப்பாக, ஹுண்டாய் இந்தியா மோட்டார் நிறுவனத்தின் சார்பில் ரூ.10 இலட்சமும், மணலி தொழில்முனைவோர் கூட்டமைப்புச் சார்பில் ரூ.35 இலட்சமும், பசுமை சுற்றுச்சூழல் பவுண்டேசன் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் சார்பில் ரூ.1 இலட்சமும், மகளிர் ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கத்தின் சார்பில் ரூ.15 ஆயிரமும் என மொத்தம் ரூ.46.15 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பசுமைத் தமிழ்நாடு இயக்கம் தொடங்கி வைக்கப்பட்ட நாளான அன்று, அனைத்து மாவட்டங்களிலும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளால் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.



## இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில், பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தினுடைய தொடக்க விழா சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதைத் தொடங்கி வைக்கக்கூடிய ஓர் அரிய வாய்ப்பு, ஒரு நல்ல வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. ஆக, வாய்ப்பினைத் தந்திருக்கக்கூடிய இந்தத் துறையின் அமைச்சருக்கும், இந்தத் துறையின் அதிகாரிகளுக்கும் முதலில் என்னுடைய நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது இன்றைய காலத்தின் கட்டாயம்!

இயற்கையை நம்மால் உருவாக்க முடியாது. ஆனால், இயற்கையை நாம் நினைத்தால் நிச்சயமாகக் காப்பாற்ற முடியும். அதைக் காப்பாற்றுவதற்கு அனைவரும் முன்வர வேண்டும். அப்படிப்பட்ட உணர்வை எல்லோரும் பெற்றிட வேண்டும். அந்த அடிப்படையில் நம்மிடத்தில் இருக்கும் இயற்கை வளத்தைக் காப்பாற்றுவதற்காக இந்த பசுமைத் தமிழ்நாடு இயக்கம் தொடங்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு என்பதே பசுமை மாநிலம்தான். நம்முடைய இலக்கியங்கள் இயற்கையைப் பற்றியே அதிகமாக எழுதி இருக்கின்றன. இயற்கையைப் பற்றியே நம்முடைய புலவர்கள் அதிகமாகப் பாடி இருக்கிறார்கள். இயற்கையோடு இயைந்து வாழ்ந்த இனம் நம்முடைய தமிழினம். மண்ணையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பகுத்து வாழ்ந்தவர்கள் நம்முடைய தமிழர்கள். மக்களுக்கு மட்டுமல்ல, மண்ணுக்கும் மணமும் குணமும் சொன்ன இனம் நம்முடைய தமிழினம். தெருவில் படர்ந்து கிடந்த முல்லைக்குத் தன்னுடைய தேரைக் கொடுத்தான் பாரி மன்னன்.

காடும் காடு சார்ந்து, மலையும் மலை சார்ந்து, கடலும் கடல் சார்ந்து வாழ்ந்தவர்கள் நம்முடைய தமிழர்கள். அனைத்துக் கோவில்களிலும் அதற்கெனத் தனித்தனி மரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அப்படித்தான் வளர்த்திருக்கிறார்கள். எனவேதான் இயற்கையைக் காப்பது என்பது நம்முடைய இயல்பிலேயே இருக்கிறது.

வளர்ச்சி என்பதன் பெயரால் இயற்கைக்குச் சோதனை வரும்போதெல்லாம், இயற்கையையும் காத்து வளர்ச்சியை வழிநடத்தி வருகிறோம். அதுதான் தமிழ்நாடு அரசினுடைய பசுமைக் கொள்கை!

இயற்கையையும், பசுமையையும், அரசும், ஆட்சியும் மட்டுமே காப்பாற்றிவிட முடியாது. மக்களும் சேர்ந்தால்தான் காப்பாற்ற முடியும். ஏனென்றால், இயற்கை என்பது அரசினுடைய சொத்து, அது அரசினுடைய சொத்து மட்டுமல்ல, மக்களின் சொத்து! எதிர்காலச் சமுதாயத்தின் சொத்து! அத்தகைய இயற்கைச் சொத்தை, அரசும், மக்களும் காக்க வேண்டும் என்ற உன்னதமான நோக்கத்தில்தான், இந்தப் பசுமைத் தமிழகம் இன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

பல்லுயிரை நாம் காக்க வேண்டும். இந்த உலகம் என்பது மனிதர்களான நமக்கு மட்டும் சொந்தமானது அல்ல. புல் பூண்டு தொடங்கி அனைத்து விலங்குகளுக்கும் சொந்தமானதுதான் இந்த உலகம். எனவே, அவற்றை நாம் காக்க வேண்டும்.

இப்போது நமக்கு இருக்கக்கூடிய மாபெரும் அச்சுறுத்தல் என்பது காலநிலை மாற்றம்தான். அதிகப்படியான வெப்பம், வெயில் அடிக்கிறது. மழை என்பது சீரானதாக இல்லாமல், பலமாக அடித்துவிட்டு நின்று விடுகிறது. மழைக்காலம் - வெயில் காலம் என்று பிரித்துச் சொல்லமுடியாத அளவுக்கு நாடு இப்போது மாறி இருக்கிறது, காலநிலை மாறி இருக்கிறது. மழை எப்போது வரும், மழை எப்போது வராது என்று சொல்லமுடியாத அளவிற்குக் காலநிலை மாறியிருக்கிறது. எனவே, காலநிலைகளைக் கணிக்க முடியாத ஒரு சூழ்நிலை இன்றைக்கு மாறியிருக்கிறது. உலகின் சில பகுதிகளில் அனல்காற்று அதிகப்படியாக வீசிக் கொண்டு இருக்கிறது. தோல் எரியக்கூடிய அளவுக்குக் காற்று வீசுகிறது. இவை அனைத்தும் இயற்கையை, பசுமையை நாம் மறந்ததால் ஏற்படக்கூடிய எதிர்வினைகள்தான் என்பதை நாம் எச்சரிக்கையுடன் கவனித்தாக வேண்டும்.

அதற்கு நாம் வனம், காடுகள் ஆகியவற்றைக் காக்க வேண்டும். காடுகளை, பசுமைப் பரப்புகளை நாம் மீட்டெடுக்க வேண்டும். இயற்கை நீர் நிலைகளைக் காக்க வேண்டும். இருக்கும் நீர் நிலைகளைத் தூர்வாரி, சுத்தமாக வைத்திருக்க வேண்டும். மண்ணின் வளம் கெடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். காற்றை இதற்கு மேலும் மாசுபடுத்தாமல் கவனித்தாக வேண்டும்.




பிளாஸ்டிக் பைகளை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். அதற்காகவே "மீண்டும் மஞ்சப்பை" என்ற இயக்கத்தை நாம் முன்னெடுத்திருக்கிறோம்.

- நிலையான வாழ்வாதாரம்
- நிலையான வேளாண்மை
- உணவுப் பாதுகாப்பு -

ஆகியவற்றில் வனமும் மரமும் முக்கியப் பங்கு வகிக்கிறது. எனவே, மரங்களை வைப்பது, வனங்களைப் பாதுகாப்பதில் பசுமைத் தமிழ்நாடு இயக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

அரசின் சார்பில் பல்வேறு முன்னெடுப்புகள் செய்யப்பட்டு வருகின்றன. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதி உதவியாக ரூ.920.58 கோடி கிடைத்துள்ளது. இதன் மூலமாகச் சுற்றுச்சூழலை மேம்படுத்த இருக்கிறோம். பசுமையாக்குதல் நடக்க இருக்கிறது. வனப் பகுதியின் சமூகப் பொருளாதாரம் மேம்படுத்தப்பட இருக்கிறது.

அதேபோல், தரம் குன்றிய வன நிலப் பரப்புகளை மறுசீரமைப்புச் செய்து, அவ்விடத்தில் புதிய வன மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வதற்காக, நபார்டு வங்கி ரூ.481.14 கோடியையும் வனத்துறைக்கு வழங்கியிருக்கிறது, அதற்கான ஒப்புதலையும் தந்திருக்கிறது என்பதை நான் இந்த நிகழ்ச்சியின் மூலமாக உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இயற்கையைக் காத்தல் என்பது ஏதோ மக்களுக்குத் தொடர்பில்லாததைப்போல் சிலர் நினைக்கிறார்கள். இயற்கை மூலமாக மக்களைக் காப்பதுதான் இது என்பதைத் தயவுசெய்து யாரும் மறந்துவிட வேண்டாம்.

2018ஆம் ஆண்டு கஜா புயல் அடித்தது. தமிழ்நாட்டில் உள்ள சிலப் பகுதிகளைப் பாதித்தது. அப்போது பிச்சாவரம், முத்துப்பேட்டைப் பகுதியில் இருந்த அலையாத்தி காடுகள்தான் அந்தக் கடுமையான புயலையும் தாங்கி மக்களைக் காத்தது என்பதை மறந்துவிட வேண்டாம்.

காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ளத் தேவையானத் திறனை நாட்டு மரங்கள் தருகின்றன. எனவே, அதிகளவிலான நாட்டு மரங்களை நடுவது இந்த பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின் நோக்கமாக இருப்பதை அறிந்து நான் உள்ளபடியே பாராட்டுகிறேன்.

பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின் சார்பில், தட்பவெப்ப நிலை மாற்றங்களைத் தாக்குப் பிடிக்கும் மரங்களை அதிகமாக நடவேண்டும். அடுத்த பத்தாண்டுக் காலத்தில் நகர்ப்புரப் பகுதிகளில் அதிகமான இயற்கைச் சூழலை உருவாக்கியாக வேண்டும்.

இந்த இயக்கத்தின்கீழ், குறுகிய காலத்தில் மாநிலம் முழுவதும் 350 நாற்றங்கால்களில் 2.80 கோடி நாற்றுகள் வளர்க்கப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

பொருளாதார முக்கியத்துவத்தையும் மனதில் வைத்துச் சந்தனம், செம்மரம், ஈட்டி மரம் போன்ற மரங்களை வளர்க்க உழவர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். மாநிலத்தின் உணவு உற்பத்தியில் சமரசம் செய்யாமல், மர உற்பத்தியைப் பெருக்க முயற்சிப்போம். இயற்கை வளங்களை நிலையான முறையில் பயன்படுத்தி வனப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினர், உழவர்கள், கிராம ஊராட்சி மக்கள் போன்ற உள்ளூர்ச் சமூகங்களின் வருமானத்தைப் பெருக்க இந்தத் திட்டம் உதவும் என நம்புகிறேன்.

ஆட்டோ ஓட்டுநர்கள், மாணவச் செல்வங்கள், சுய உதவிக்குழுக்கள், தொழில்முனைவோர், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் என அனைவரும் இங்கே கூடியுள்ளீர்கள். இந்த இயக்கத்தினுடைய மாபெரும் பணி என்னவென்றால், இதை வெற்றியடையச் செய்ய வேண்டும். இந்த வெற்றி உங்கள் கைகளில்தான் இருக்கிறது. அந்த வெற்றியை உருவாக்கித் தரக்கூடிய பொறுப்பு உங்களிடத்திலேதான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு அங்குல இடம் இருந்தாலும் கூட, அதில் ஒரு தாவரத்தினை வளர்ப்போம் என உறுதிமொழி எடுத்து, ஒவ்வொருவரும் எத்தனை தாவரங்களை உருவாக்க முடியுமோ அத்தனை தாவரங்களை உருவாக்கி இத்தமிழகத்தினைப் பசுமைமிகு தமிழகமாக மாற்றிட வேண்டும்.

செவ்விந்தியர்கள் எனப்படும் அமெரிக்கப் பழங்குடி மக்களிடையே சொல்லப்படும் புகழ்பெற்ற பொன்மொழி ஒன்றை இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்...

"கடைசி மரமும் வெட்டப்பட்ட பின்னர்தான், கடைசி ஆறும் நஞ்சுகளால் நிரப்பப்பட்ட பின்னர்தான், கடைசி மீனும் பிடிக்கப்பட்ட பின்னர்தான், பணத்தைச் சாப்பிட முடியாது என்பதை நீங்கள் உணர்வீர்கள்" என்பதே அந்தப் பொன்மொழி.

அத்தகைய நிலைமை நமக்கு வரக்கூடாது. பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தை முன்னெடுப்போம். வளர்த்தெடுப்போம். பசுமையிலும் வளர்ந்த மாநிலமாக வளமோடு வாழ்வோம். என்று கூறி, இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன்.

## மாணவ, மாணவியர்களுக்குப் பரிசு வழங்குதல்



சென்னை, கிண்டி காந்தி மண்டபத்தில் 02.10.2022 அன்று நடைபெற்ற காந்தியடிகளின் பிறந்தநாள் விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **ஆர்.என்.ரவி** அவர்கள் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்.

# தமிழைத் தமிழே என்று அழைக்கக்கூடிய சுகம் வேறு எதிலும் இருக்காது




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
24.09.2022 அன்று நடைபெற்ற தமிழ்ப் பரப்புரைக்கழகம் தொடக்க விழாவில் ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

“தமிழ் - வெறும் மொழியல்ல!
அது நம் உயிர்!”

முத்தமிழறிஞர் - முத்தமிழ் வித்தகர் தலைவர் கலைஞர் அவர்கள், தமிழைப்பற்றி அடிக்கடி பெருமையோடு சொல்லுவார்கள். அதனை நான் பல்வேறு இடங்களில் சொல்லியிருக்கிறேன். அதை இந்த நிகழ்ச்சியிலும் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

“உளங்கவர் ஓவியமே, உற்சாகக் காவியமே, ஓடை நறுமலரே, ஒளியுமிழ் புதுநிலவே, அன்பே, அமுதே, அழகே, உயிரே, இன்பமே, இனியத் தென்றலே, பனியே, கனியே, பழரசச் சுவையே, மரகத மணியே, மாணிக்கச் சுடரே, மன்பதை விளக்கே என்றெல்லாம் தமிழை அழைக்கத் தோன்றுகிறது. இருந்தாலும் தமிழைத் தமிழே என்று அழைக்கக்கூடிய சுகம் வேறு எதிலும் இருக்காது.

அத்தகையத் தமிழ் வாழும் காலமெல்லாம் நின்று நிலைபெறக் கூடிய தமிழ்ப் பரப்புரைக் கழகத்தைத் தொடங்கி வைப்பதை என்னுடைய வாழ்நாளில் கடமையாக மட்டுமல்ல – என்னுடைய வாழ்நாளில் பெருமையாகவும் நான் கருதிக் கொண்டிருக்கிறேன்.

‘வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்’, என்பதை முழக்கமாகக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு, தமிழ்ப் பாதுகாப்புக் கழகம் தொடங்குவது என்பது முழுமுதல் கடமை!

தி.மு.க. என்று சொல்வதைத் திரையுலகத்தில் பரப்பியபோது, ஒரு பாடல் பிரபலப்படுத்தப்பட்டது. அந்தப் பாடலை எழுதியவர் மதிப்பிற்குரிய கவிஞர் கண்ணதாசன் அவர்கள். பாடி நடித்தவர் திரு. கலைவாணர் அவர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்த நான்கே ஆண்டில் வந்தது அந்தப் படம். தொண்டர்களுடைய உணர்ச்சியைத் தட்டி எழுப்பியது மட்டுமல்ல, தி.மு.க. என்றால் என்ன என்பதைச் சொன்னது அந்தப் பாடல்...

“தீனா... மூனா... கானா...

எங்கள் திருக்குறள் முன்னேற்றக் கழகம்

தீனா ... மூனா.... கானா

அறிவினைப் பெருக்கிடும்

பகுத்தறிவோடு நாட்டினர் வாழத்

திருக்குறள் தந்தார் பெரியார் - வள்ளுவப்

பெரியார் - அந்தப்

பாதையிலே நாடு சென்றிடவே -

வழி வகுப்பதையும் அதன்படி

தீனா... மூனா...கானா...

திருக்குறள் முன்னேற்றக் கழகம்...” என்று கலைவாணர் அவர்கள் பாடுவார்.

அதாவது தி.மு.க. என்றாலே தமிழ்!

தமிழ் என்றாலே தி.மு.க.! என்று வளர்க்கப்பட்டதுதான் இந்த இயக்கம்.

அத்தகைய இயக்கம் ஆட்சிக்கு வந்தபோது, தாய்த்தமிழ் நாட்டுக்குத் தமிழ்நாடு என்றுப் பெயர் சூட்டப்பட்டது. அதற்கு முன்னால், இந்த மாநிலத்துக்குச் சென்னை ராஜதானி - சென்னை மாகாணம் என்றுப் பெயர். அதனை மாற்றித் தமிழ்நாடு என்றுப் பெயர் சூட்டியவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள். அத்தகைய அண்ணாவின் பெயரால் அமைந்துள்ள இந்தப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பரப்புரைக் கழகம் தொடங்குவது பொருத்தமானது. மிக மிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது!

அனைவருக்குமான வளர்ச்சி -

அனைத்துத் துறை வளர்ச்சி -

அனைத்து மாவட்ட வளர்ச்சி -

அனைத்துச் சமூக வளர்ச்சி –

என்பதை உள்ளடக்கமாகக்கொண்ட திராவிட மாடல் ஆட்சியை நாம் நடத்தி வருகிறோம். அந்த வகையில் தகவல் தொழில்நுட்பவியல் துறையும், எண்மச் சேவைகள் துறையும் வளர்ச்சி அடைந்து வருகின்றன.

தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பவியலுக்கு அடித்தளம் அமைத்ததே கழக அரசுதான். இதற்குக் கம்பீரமானச் சாட்சியாக இன்றும் எழிலுடன் நிற்கிறது டைடல் பார்க். 1996ஆம் ஆண்டு முதலமைச்சராகத் தலைவர் கலைஞர் அவர்கள் இருந்தபோது தொடங்கியத் தகவல் தொழில்நுட்பப் புரட்சிதான் கடந்த 27 ஆண்டுகள் அத்துறை மகத்தான வளர்ச்சியைப் பெறுவதற்குக் காரணம்.

உலகம் முழுக்க தமிழ்நாட்டு இளைஞர்கள் பணியாற்றுகிறார்கள் என்றால் அதற்குக் கலைஞர் அவர்கள்தான் அடித்தளம் அமைத்தார்கள்.

அதன் அடுத்தகட்டம்தான் கணினிமயமாக்கல். நம்முடைய அறிவுச் சொத்துக்கள் அனைத்தையும் முழுமையாக அறிவியல் தொழில்நுட்பங்களின் அடிப்படையில் மாற்றிச் சேமித்து வைக்கக்கூடிய, மகத்தானப் பணியைத் தமிழ் இணையக் கல்விக் கழகம் செய்து வருகிறது.

1999ஆம் ஆண்டு Tamilnet99 என்ற தமிழ் இணையவழி மாநாட்டின் மூலம் இணையத்தமிழ் தொடர்பான முன்னெடுப்புகளையும், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் தோற்றத்தையும் முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார். அதன் பின் 05.07.2000 அன்று தமிழ் இணையக் கல்விக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது.

பல நூறு ஆண்டுகளாகத் தமிழின் சொத்துக்கள் சேகரித்து வைக்கப்படாமல் அழிந்து போய்விட்டது. அந்தத் தவறு தடுக்கப்பட்டு, இன்று தொகுத்தும், சேகரித்தும், தொழில்நுட்ப அடிப்படையில் மாற்றியும் வைத்திருக்கிறோம். இந்தத் தமிழ்த் தொண்டைச் செய்து வரக்கூடிய, அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய திரு. மனோ தங்கராஜ் அவர்களை நான் இந்த நேரத்தில் பாராட்ட விரும்புகிறேன். இந்தப்பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்ட தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் தலைவர் திரு. உதயச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களையும் நான் இந்த நேரத்தில் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

சி.வை.தாமோதரனார், உ.வே.சாமிநாதர் போன்ற ஒரு சிலரால்தான் தமிழ் இலக்கியங்கள் காப்பாற்றப்பட்டது. அதே போன்ற பணியைத் தனி அக்கறையுடன் செயல்படுத்திவரும் அனைவருக்கும் அரசின் சார்பில் நான் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கு மகுடம் வைப்பதைப்போலப் தமிழ்ப் பரப்புரைக் கழகம் இன்றுத் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் அதிகமாகவும், அறுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் குறைந்த எண்ணிக்கையிலும் வாழ்கிறார்கள். சில நாடுகளில் தமிழ் எழுதவும் பேசவும் படிக்கவும் மறந்த தமிழர்களும் இருக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் தமிழைச் சொல்லிக் கொடுப்பதற்காகத்தான் தமிழ்ப் பரப்புரைக் கழகம் தொடங்கப்பட்டுள்ளது. 24 மொழிகளில் தமிழ்ப் பாட நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. 30 நாடுகள், 20 மாநிலங்களைச் சேர்ந்த தமிழ் அமைப்புகளின் பொறுப்பாளர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் இணையவழியாக இணைந்து இந்த விழாவில் பங்கேற்றுள்ளது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

உணர்வால், உள்ளத்தால், தமிழால், நாம் அனைவரும் இணைந்துள்ளோம். அமெரிக்கா, குவைத், ஓமன், நார்வே போன்ற நாடுகளைச் சேர்ந்த நம் உறவுகளும் இணைந்துள்ளார்கள்.

மொழிக்கு மட்டும்தான் இத்தகைய அன்பால் இணைக்கக்கூடிய ஆற்றல் உண்டு. மொழியால் இணைந்தவர்களைச் சாதியால், மதத்தால் பிரிக்க முடியாது. தமிழால் ஒன்றிணைய வேண்டியக் காலகட்டத்தில் தமிழ்ப் பரப்புரைக் கழகம் தொடங்கப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் பேராசிரியர் செந்தமிழ் அரிமா என்றுப் போற்றப்பட்ட இலக்குவனார் அவர்கள், தமிழ் காப்புக் கழகம் தொடங்கினார். அது தமிழைக் காக்க வேண்டியக் காலகட்டமாக இருந்தது. தமிழை நாம் பாதுகாத்துவிட்டோம்.

இது தமிழைப் பரப்ப வேண்டிய காலகட்டம். அதனால் தமிழ்ப் பரப்புரைக் கழகம் தொடங்கி இருக்கிறோம்.

தாய்மொழியாம் தமிழ் மொழியை உலகெங்கும் கொண்டுச் செல்லும் உயரிய நோக்கம்தான் இதற்குக் காரணம்!

தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் சார்பில்

- ❖ அயலக வாழ் தமிழ் மாணவர்களுக்கு அடிப்படைநிலை முதல் பட்டக்கல்வி நிலை வரை தமிழ்க்கல்வி இணையவழியாக அளிக்கப்படுகிறது.
- ❖ உலகம் முழுவதும் உள்ளத் தொடர்பு மையங்கள் மூலம் இந்த இணையவழித் தமிழ்க் கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- ❖ கடந்த 5 ஆண்டுகளில் 28 தொடர்பு மையங்கள் மட்டுமே ஏற்படுத்தப்பட்டன. ஆனால், கடந்த ஓராண்டில் மட்டும் 17 புதியத் தொடர்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- ❖ தமிழ்ப் புத்தகங்கள் மின்னுருவாக்கம் செய்யப்படுகின்றன.
- ❖ கணினித் தமிழுக்குத் தேவைப்படும் மென்பொருட்கள் உருவாக்கப்படுகின்றன.
- ❖ அண்மையில் கீழடி என்ற விசைப்பலகையும், தமிழிணைய ஒருங்குறி மாற்றியும் நமது அரசால் வெளியிடப்பட்டன.
- ❖ தமிழ் எழுத்துருக்களைத் தரப்படுத்தி, அவற்றை உலகம் முழுமைக்கும் பொதுமைப்படுத்தி இருப்பது தமிழ் இணையக் கல்விக் கழகத்தினுடைய முக்கியச் சாதனை.



- ❖ இந்த முன்னேற்றங்களில் மாணவர்களின் பங்கேற்பை உறுதிசெய்யக் கணித்தமிழ் பேரவைகள் 200 கல்லூரிகளில் உருவாக்கப்பட்டுள்ளன.
- ❖ தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்மொழி மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்கு நமது அரசு அளித்து வரும் முக்கியத்துவத்தை அனைவரும் அறிவீர்கள். தமிழ்மொழிக்குச் செம்மொழி அங்கீகாரம் பெற்றது முதல் பொருநை அருங்காட்சியகம் அமைப்பது வரை, நாங்கள் தமிழுக்காகவும், தமிழர்களின் தொன்மையினை வெளிக்கொணருவதற்காகவும் முன்னெடுக்கும் முயற்சிகள் பல பல.

- ❖ 2022-2023ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், தமிழ் வளர்ச்சித்துறைக்கு ரூ.82 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ❖ தமிழ் எழுத்தாளர்களைச் சிறப்பித்து வருகிறோம்.
- ❖ ஜெர்மனி நாட்டின் கொலோன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கைக்கான நிதி உதவி அளித்திருக்கிறோம்.
- ❖ தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமை ஆக்கியிருக்கிறோம்.
- ❖ நவிமும்பை தமிழ்ச் சங்கக் கட்டடத்திற்கு நிதி உதவி செய்யப்பட்டுள்ளது.
- ❖ தீராக்காதல் திருக்குறள் என்ற பெயரில் தீந்தமிழ் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.
- ❖ பாரதியின் நினைவு நூற்றாண்டுத் தொடர்பான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- ❖ திருவள்ளுவர் தொடங்கி அறிஞர்கள் பெயரால் விருதுகள் வழங்கி வருகிறோம்.




❖ புகழ்பெற்றத் தலைவர்கள், தமிழ் அறிஞர்கள் ஆகியோரின் அரிய ஒலி/ ஒளிப் பொழிவுகளை இணையதளத்தில் ஆவணப்படுத்தி வருகிறோம்.

❖ இலக்கியக் கூட்டங்கள் நடத்தி வருகிறோம்.

சில நாட்களுக்கு முன்னால் தமிழகம் வந்த அகில இந்தியத் தலைவர் ஒருவர், "தமிழுக்கு தி.மு.க. என்ன செய்தது?" என்று கேட்டுவிட்டுப் போய்விட்டார்? தமிழுக்கு என்ன செய்யவில்லை! என்பதுதான் அவருக்கு நம்முடைய பதிலாக இருக்க முடியும்.

இப்படி ஓராண்டுக் காலத்தில் தமிழ்த் தொண்டு ஆற்றிய ஆட்சி தி.மு.க. ஆட்சி!

இதற்கு மகுடமாகத்தான் தமிழ்ப் பரப்புரைக் கழகம் தொடங்கப்பட்டுள்ளது. இது தமிழின் புகழ்பாடும் கழகம் அல்ல, பேசிக் களிக்கும் கழகம் அல்ல. தமிழை உலகெங்கும் பரப்பக்கூடிய கழகம்!

தமிழர்கள் அனைவரும் தமிழில் எழுத, பேச, படிக்க, சிந்திக்க வேண்டும் என்பதே இதனுடைய முழுமுதல் நோக்கம்!

கல்வி, வேலைவாய்ப்பு, வெளிநாட்டு வாழ்க்கை ஆகியவற்றின் காரணமாக, தமிழை முழுமையாகப் பயன்படுத்த முடியாதச் சூழலுக்கு அயலகத் தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இது தவிர்க்க முடியாத ஒரு நெருக்கடி. அப்படி ஒரு நெருக்கடி இருந்தாலும், தமிழைத் தள்ளிவைத்து விடக்கூடாது.

மொழிதான் ஓர் இனத்தின் அடையாளம்.

மொழிதான் ஓர் இனத்தின் உயிர்.

மொழிதான் ஒரு மனிதரின் உணர்ச்சிக்கு உணவு.

மொழிதான் ஒருவரின் சிந்தனைக்கு உரம்.

எனவே, தாய்மொழிப் பற்று என்பது தாய்மொழிப் படிப்பாக, தாய்மொழி அறிவாக மாற வேண்டும் என்பதே என்னுடைய ஆசை!

இப்போது முதல்நிலை முதல் பருவப் பாடநூல் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ் மொழியை எளிமையாகக் கற்க, மாணவர்களின் கற்கும் ஆர்வத்தைத் தூண்டும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

விருப்பங்களோடு தமிழைக் கற்கலாம்.

படங்களைக் கொண்டு தமிழைக் கற்கலாம்.

audio books வழங்க இருக்கிறோம்.

சந்தேகங்கள் எழும்போது video lessons பார்த்துத் தெளியலாம்.

flash cards மூலம் அதிகச் சொற்களைக் கற்கலாம்.

இதன் மூலம் தமிழ் கற்றல் என்பது ஒரு பாடமாக இல்லாமல் மகிழ்ச்சியான அனுபவமாக இருக்கும். 24 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது இந்தப் புத்தகம். 12 மொழிகளில் ஒலிப் புத்தகமாகவும் கிடைக்கிறது. L-S-R-W (listening, Speaking, Reading, Writing) என்றத் திறன்கள் அடிப்படையில் இவை அமைக்கப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, ஐந்தாம் நிலை வரையிலானப் பாடப்புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு

வெளியிடப்படவுள்ளன. இதன் மூலமாகத் தமிழில் பேசலாம், படிக்கலாம் என்பது எளிமையாக்கப்படும். தமிழ் படிப்பது என்பதைச் சுவைக்காக மட்டுமில்லாமல், தமிழ்ப் பண்பாட்டை அறிவதற்காகவும் அனைவரும் படிக்க வேண்டும். நம்முடைய இலக்கியங்கள் அறநெறியை அதிகமாக வலியுறுத்துகின்றன.

பிரிக்கும் பண்பாடு அல்ல நம்முடையது!

பிணைக்கும் பண்பாடுதான் தமிழ்ப் பண்பாடு!

அத்தகைய பண்பாட்டைக்கொண்ட பழந்தமிழ் இலக்கியங்களை அனைவரும் அறியத் தமிழைப் படிக்க வேண்டும்.

தேவாரம் உள்ளிட்டப் பாடல்களை இசைக் கோவைகளாக வழங்க இருக்கிறோம்.

முதல்நிலை முதல் பருவத்திற்கான பாடநூல்கள் 26 நாடுகள், 20 மாநிலங்களில் உள்ள தமிழ்ப் பள்ளிகள், தொடர்பு மையங்கள், தமிழ் ஆர்வலர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பரப்புரைக் கழகத்தின் மூலமாக, 22 நாடுகள் மற்றும் 20 மாநிலங்களைச் சேர்ந்த 25 ஆயிரம் மாணவர்கள் முதற்கட்டமாகப் பயனடைய இருக்கிறார்கள். இதனை, மேலும் உலகு தழுவி வாழக்கூடிய பல ஆயிரக்கணக்கான அயலகத் தமிழ் மாணவர்களுக்குக் கொண்டு செல்லும் பணியைத் தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலமாகத் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும்.

தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணாவின் கனவை, செம்மொழித் தகுதியைப் பெற்றுத் தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கனவை, நிறைவேற்றும் நாளாக இது அமைந்துள்ளது.

தொண்டு செய்வாய் தமிழுக்கு;

துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே !

என்று வலியுறுத்தி, இந்த இனிய வாய்ப்பைப் பெற்ற இந்த நேரத்தில் உங்கள் அனைவருக்கும் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன். ❖






"அனைவருக்கும் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டுத் தமிழக அரசு பொது விநியோகத்திட்டம் / சிறப்பு பொது விநியோகத்திட்டம் ஆகியவற்றின் மூலம் அத்தியாவசியப் பண்டங்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்து வருகிறது. அவ்வாறு, விநியோகம் செய்யப்படும் அத்தியாவசியப் பண்டங்களைச் சிலர் முறைகேடாகக் கள்ளச்சந்தையில் விற்று அதிக இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றனர். உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலர்கள், குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத்துறை அலுவலர்கள் ஆகியோர் தொடர் ரோந்துப் பணி மேற்கொண்டு கடத்தல், பதுக்கல் தொடர்பான தடுப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்தியாவசியப் பண்டங்கள் கடத்தல், பதுக்கலில் ஈடுபடும் நபர்கள், அதற்கு உடந்தையாகச் செயல்படும் நபர்கள்மீதும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்கள்மீதும் இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 1955இன்படி, வழக்குப் பதிவு செய்து உரிய மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு, தொடர் குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்களைக் கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம் 1980இன்படி தடுப்புக் காவலில் வைக்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, 29.08.2022 முதல் 04.09.2022 வரையுள்ள ஒரு வாரக் காலத்தில் ரூபாய் ஐந்து இலட்சத்து இருபத்தோராயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்து ஒன்பது மதிப்புள்ள, 924 குவிண்டால் அரிசியும், அக்கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட 32 வாகனங்களும் கைப்பற்றுகை செய்யப்பட்டுள்ளன. அக்குற்றச் செயலில் ஈடுபட்ட 198 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்." ❖

# மழை வெள்ளத் தடுப்பு முன் ஏற்பாட்டுப் பணிகளில் அனைத்துத் துறைகளும் தயார் நிலையில் இருப்பதை அறிந்து மனநிறைவடைகிறேன்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 26.09.2022 அன்று வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"வருமுன் காப்பதே அரசு; வந்த பின் திட்டமிடுவது இழுக்கு" என்ற அடிப்படையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த ஆலோசனைக் கூட்டத்தை நாம் நடத்தி இருக்கிறோம். இத்தகைய முன்னெச்சரிக்கைக் கூட்டங்கள்தான் அவசிய, அவசரமானவை. அதனை அனைத்து அரசுத் துறைகளும் உணர்ந்திருப்பதை அறிந்து உள்ளபடியே பாராட்டுகிறேன்.

அரசின் பல்வேறுத் துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், பாதுகாப்பு நடவடிக்கைகளையும் இங்குப் பேசிய அதிகாரிகள் அனைவரும் விரிவாக எடுத்துச் சொன்னீர்கள். அனைத்துத் துறைகளும் தயார் நிலையில் இருப்பதை அறிந்து மன நிறைவடைகிறேன். கடந்த ஆண்டுநாம் ஆட்சிக்கு வந்தபோது பெருமழையைச் சந்தித்தோம். சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு நமக்கெல்லாம் பெரும் சவாலாகவே இருந்தது. மீண்டும் அதுபோன்ற ஒரு நிலை சென்னைக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்று நாம் அப்பொழுதே முடிவெடுத்தோம். அதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட்டோம்.

இதற்கான வழிமுறைகளை அரசுக்கு எடுத்துரைக்க மரியாதைக்குரிய திருப்புகழ் அவர்கள் தலைமையில் ஒரு குழுவும் அமைக்கப்பட்டு, அந்தக் குழு அளித்த ஆலோசனைப்படி பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

சென்னை மட்டுமின்றி அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்கள் மற்றும் தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழையால் பாதிக்கப்படக்கூடிய மாவட்டங்களில் எல்லாம் மேற்கொள்ளப்பட வேண்டிய வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள் கண்டறியப்பட்டு, தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. அவ்வாறு துவக்கப்பட்டப் பணிகள் அனைத்தையும் மிக விரைவில் முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலே கடந்த ஆண்டு அதிக அளவிலே வெள்ளப் பாதிப்புக்குள்ளானப் பகுதிகள், வெள்ள அபாயம் உள்ள பகுதிகளைக் கண்காணித்து உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகமிக அவசியமானது. இதுமட்டுமின்றிச் சென்னையின் முதன்மையான நீராதாரங்களாக இருக்கக்கூடிய செம்பரம்பாக்கம், புழல் உள்ளிட்ட ஏரிகளில் ஏற்கெனவேப் போதிய அளவில் நீர் இருப்பு உள்ளதாக நான் அறிகிறேன். ஆகவே, பருவமழையையொட்டி இந்த ஏரிகளின் நீர்வரத்து, நீர் இருப்பு அளவு ஆகியவற்றைத் தொடர்ந்து கண்காணித்து, அதை முறையாகக் கையாள வேண்டும்.

மழைக் காலத்தின்போது நகர்ப்புரங்களில் மின்கம்பிகள், மழைநீர் வடிகால் பணிகள் தடுப்புகளின்றி இருப்பது விபத்துகளை ஏற்படுத்தக்கூடும். அதுமட்டுமின்றி, கடும் போக்குவரத்து நெரிசலையும் அவை ஏற்படுத்திவிடுகின்றன. எனவே, மழைவெள்ளத் தடுப்புத் தொடர்பாகத் துவக்கப்பட்டப் பணிகள் அனைத்தையும் போர்க்கால அடிப்படையில் குறிப்பிட்டக் காலத்திற்கு முன்பாகவே முடிக்க நீங்கள் முனைப்புடன் செயல்பட வேண்டுமென்று உங்கள் எல்லோரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே தொடக்கத்தில் சொன்னதுபோல, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் என நியமிக்கப்பட்டுள்ளக் கண்காணிப்பு அலுவலர்களும் (Monitoring Officers) மழைக்காலத்திற்கு முன்பாக ஓரிரு முறை தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மாவட்டங்களுக்குச் சென்று அதைப் பார்வையிட வேண்டும். அந்த மாவட்டத்திலேயேத் தங்கி, பள்ளிக் கட்டடங்கள், நிவாரண மையங்களை ஆய்வு செய்யுங்கள்.

இதில், குறிப்பாகப் பள்ளிக் கட்டடங்களில் நீங்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். கடந்த ஆண்டு நாம் சந்தித்த இடர்ப்பாடுகளின் அடிப்படையில் பல்வேறு இடங்களில் ஆக்கிரமிப்புகளை அகற்றினோம். முக்கியக் கால்வாய்களில் தூர்வாரும் பணிகளை மேற்கொண்டோம். இதன்மூலமாக இம்முறை சென்னை நகரில் முக்கியப் பகுதிகளில் மழைநீர் தேங்காது என்று நான் ஓரளவுக்கு நம்பிக் கொண்டிருக்கிறேன், எதிர்பார்க்கின்றேன். அதே வேளையில், தேங்காது என்கிற நினைப்போடு நீங்களும் மெத்தனமாகவும் இருந்துவிடக் கூடாது.

மழைக்காலத்தில் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த அலுவலர்களும், வருவாய்த்துறை, பொதுப்பணித் துறை, தீயணைப்புத் துறை, வேளாண் துறை ஆகிய பல்வேறுத் துறை அலுவலர்களும் தனித்தனியாக இயங்காமல், அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அரசுத் துறையுடன் சேர்ந்து மக்களும் ஒருங்கிணைந்து செயல்படக்கூடியச் சூழலை நீங்கள் உருவாக்க வேண்டும்.

ஒவ்வொரு பகுதியிலும் இருக்கக்கூடிய குடியிருப்புச் சங்கங்கள், அந்தப் பகுதி மக்களுடன் இணைந்து முன்னெச்சரிக்கை, தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டால், அதனால் நல்ல பலன் கிடைக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஒவ்வொரு மாநகராட்சிப் பகுதியிலும் 24 மணிநேரமும் செயல்படும் வகையில் அமைக்கப்படும் அவசர உதவி மையங்கள் முறையாகச் செயல்படுவதைக் கண்காணிப்பு அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

கடந்த முறை வானிலை எச்சரிக்கைத் தகவல்களைக் குறித்த காலத்தில் பெறுவதில் தாமதங்கள் காணப்பட்டது. அதனைத் தவிர்க்கும் வகையில், இந்த ஆண்டு உரியக் காலத்தில் வானிலை ஆராய்ச்சி மையத்திலிருந்து சரியான தகவல்களைப் பெறுவதோடு தனியார் வானிலை ஆராய்ச்சியாளர்கள் அளிக்கும் தரவுகளையும், வருவாய்த்துறையில் ஒப்பிட்டு அதனடிப்படையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், மக்களுக்கான அறிவிப்புகளை நீங்கள் செய்ய வேண்டும்.

நிவாரண மையங்களில் பொதுமக்களைத் தங்க வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்போது, அவர்களுக்குத் தரமான உணவு, குடிநீர், மின்சாரம், மருத்துவம், சுகாதார வசதிகள் ஆகியவற்றை நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதில் குறைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது உங்கள் கடமை. ஒவ்வொரு நிவாரண முகாமிற்கும் ஒவ்வொரு பொறுப்பு அலுவலர் நியமிக்கப்பட வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு வகையிலும் நாம் கவனமெடுத்துச் செயல்பட்டால், கடும் மழையினால் பாதிக்கப்படக்கூடிய ஏழை, எளிய மக்கள், உழவர்கள், மீனவர்கள் போன்றவர்கள் அவர்களுக்கு ஏற்படக்கூடிய துயரை நாம் ஓரளவுக்குக் குறைக்க முடியும். அதுதான் இந்த அரசினுடைய நோக்கம்.

உங்களுக்கு ஏற்படக்கூடிய எண்ணங்களை, உடனுக்குடன் அரசுக்கு நீங்கள் தெரிவித்து அந்தப் பணிகளை வேகப்படுத்த வேண்டும். இதுபோன்ற ஆலோசனைக் கூட்டங்களில் மட்டும்தான் ஆலோசனை சொல்ல வேண்டும் என்பது இல்லை. உடனுக்குடன் நீங்கள் சொல்ல வேண்டும்.

பொதுத் தொலைப்பேசி எண்களைப் பரப்ப வேண்டும். நோய்கள் பரவாமல் தடுக்க வேண்டும். பேரிடர் மேலாண்மையில் அதிக கவனம் செலுத்த வேண்டும். மின் விபத்துகள் ஏற்படாமல் தடுக்க வேண்டும். மொத்தத்தில் மக்களைக் காக்க வேண்டும். அது ஒன்றே நமது இலக்கு!

# ரூ.174.48 கோடியில் நடைபெற்று வரும் வெள்ளத் தடுப்புப் பணிகள் ஆய்வு



வெள்ளத் தடுப்புப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 29.09.2022 அன்று நீர்வளத்துறை, பெருநகரச் சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத்துறை ஆகிய துறைகளின் சார்பில் செம்மஞ்சேரி, நூக்கம்பாளையம், பெரும்பாக்கம், வேளச்சேரி, பள்ளிக்கரணை, அடையாறு ஆகிய இடங்களில் ரூ.174.48 கோடி மதிப்பீட்டிலான வெள்ளத் தடுப்புப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழையின்போது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, புறநகர்ப் பகுதிகளை நேரடியாகச் சென்று ஆய்வு செய்து மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்தி, போர்க்கால அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டு, பணிகளும் விரைவாக நடைபெற்றன. வரும் பருவமழைக் காலங்களில் மழை வெள்ளப் பாதிப்புகள் ஏற்படாத வகையில் அதிக அளவில் நீர் தேங்கும் இடங்களில் மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொள்ளத் தமிழ்நாடு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் உடனடியாகத் தொடங்கப்பட்டு தற்போது அப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நீர்வளத்துறைச் சார்பில் செம்மஞ்சேரி DLF அருகில், ரூ.21.70 கோடி மதிப்பீட்டில் மதுரப்பாக்கம் ஓடையில் ஒரு கதவணையுடன் கூடிய வெள்ள ஒழுங்கி (Head Regulator) அமைத்து DLF குடியிருப்புப் பகுதிக்கு இடையில் செல்லும் சாலை வழியாக 500 மீட்டர் நீளத்திற்கு மூன்று கண் உடைய பெரு மூடுவடிகால்வாய் (Cut and Cover Macro Drain) அமைக்கும் பணிகளையும்;

நூக்கம்பாளையம் பாலம் அருகில், அரசன்கழனி கால்வாயிலிருந்து பொலினினி குடியிருப்புப் பகுதி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டுக் குடியிருப்புக் கட்டடம், செம்மஞ்சேரி கால்வாயின் இருபுறமும் நூக்கம்பாளையம் பாலம் வரை ரூ.24.30 கோடி மதிப்பீட்டில் 1,900 மீட்டர் தாங்குசுவர் (Retaining Wall) அமைத்தல், தூர்வாரும் பணிகளையும்;

நேதாஜி நகர் பிரதான சாலை, பொலினினி குடியிருப்பு அருகில் அரசங்கழனி வேலன் தாங்கல் ஏரியில் கதவணையுடன் கூடிய வெள்ள ஒழுங்கி அமைத்து அரசன்கழனி ஏரியிலிருந்து கழுவெளி வரை ரூ.29 கோடி மதிப்பீட்டில் ஒரு பெருமூடு வடிகால்வாய் 970 மீட்டர் நீளத்திற்கு அடித்தளக்



கான்கிரீட்டுடன் கம்பி மற்றும் சுவர் அமைக்கும் பணிகளையும்;

பள்ளிக்கரணை தாமரைக்குளம் அருகில், பள்ளிக்கரணை அணை ஏரியிலிருந்து வெளியேறும் வெள்ள நீரினை பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்குக் கொண்டுசெல்ல ஏதுவாக ரூ.57.70 கோடி மதிப்பீட்டில் பள்ளிக்கரணை அணை ஏரியிலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வரையில் மூடிய பெரு வடிகால்வாய் அமைக்கும் பணிகளையும்;

பின்னர், நெடுஞ்சாலைத்துறை சார்பில் வேளச்சேரி தாம்பரம் சாலையில், தாமரைக்குளம் முதல் பள்ளிக்கரணை NIOT (National Institute of Ocean Technology) வரை பள்ளிக்கரணை சதுப்புநிலத்தை வெள்ள நீர் சென்றடையும் வகையில் 1,000 மீட்டர் நீளத்திற்கு ரூ.20 கோடி மதிப்பீட்டில் வடிகால் அமைக்கும் பணிகளையும்;

தொடர்ந்து, பெருநகரச் சென்னை மாநகராட்சி சார்பில் வேளச்சேரி, ஏஜிஎஸ் காலனி 4ஆவது பிரதான சாலையில், ஏஜிஎஸ் காலனி 1 முதல் 4 பிரதான சாலைகள் 6ஆவது குறுக்கு தெரு, 7ஆவது குறுக்கு தெரு வரையிலான மொத்த பகுதிகளை இணைத்து ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் வடிவமைக்கப்பட்டு, 6 தெருக்களில் சுமார் 1,620 மீட்டர் நீளத்திற்கு ரூ.5.18 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட மழைநீர் வடிகால் பணிகளையும்;

அடையாறு, கஸ்தூரிபாய் நகர் 3ஆவது பிரதான சாலையில், திருவேங்கடம் தெரு, கோவிந்தராஜபுரம் 1ஆவது, 2ஆவது தெரு, கஸ்தூரிபாய் நகர் 1ஆவது தெரு, கஸ்தூரிபாய் நகர் 3ஆவது பிரதான சாலைகளை இணைத்துச் சிதிலமடைந்த பழைய கால்வாய்களை இடித்துப் புதிய ஒருங்கிணைந்த கால்வாய்கள் வடிவமைக்கப்பட்டு 5 தெருக்களில் சுமார் 1,085 மீட்டர் நீளத்திற்கு ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட மழைநீர் வடிகால் பணிகளையும்;

அடையாறு, இந்திரா நகர் 3ஆவது பிரதான சாலையில், இந்திரா நகர், திருவான்மியூர் கண்ணப்பன் நகர், கணேஷ்நகர், காமராஜ் நகர், இந்திரா நகர் பிரதான சாலைகளை இணைத்து சிதிலமடைந்த பழைய கால்வாய்களை இடித்துப் புதிய ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் வடிவமைக்கப்பட்டு, வெள்ள நிவாரண நிதியின் கீழ், 21 தெருக்களில் சுமார் 4,895 மீட்டர் நீளத்திற்கு ரூ.14.38 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட மழைநீர் வடிகால் பணிகளையும்;

என மொத்தம், ரூ.174.48 கோடி மதிப்பீட்டிலான மழைநீர் வடிகால் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இப்பணிகள் அனைத்தையும் அக்டோபர் மாதத்திற்குள் விரைவாகவும், தரமாகவும் முடித்திட வேண்டும் என்று தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

## ரூ.167.08 கோடியில் நடைபெற்று வரும் மழை நீர் வடிகால் பணிகள், தூர்வாரும் பணிகள் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 08.10.2022 அன்று பெருநகரச் சென்னை மாநகராட்சி, நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத்துறை ஆகிய துறைகளின் சார்பில் சென்னை மாநகரின் என்.எஸ்.சி. போஸ் சாலை, சென்ட்ரல் இரயில் நிலையம் அருகில், வால்டாக்ஸ் சாலை, பேசின் பாலம், டெமலஸ் சாலை, புளியந்தோப்பு நெடுஞ்சாலை, டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலை, கொளத்தூர் - வேலவன் நகர், டெம்பிள் ஸ்கூல் ஆகிய இடங்களில் ரூ.167.08 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணிகள், தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழையின்போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, புறநகர்ப் பகுதிகளை நேரடியாகச் சென்று ஆய்வு செய்து மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்தி, போர்க்கால அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டு, பணிகளும் விரைவாக நடைபெற்றன. வரும் பருவமழைக் காலங்களில் மழை வெள்ளப் பாதிப்புகள் ஏற்படாத வகையில் அதிக அளவில் நீர் தேங்கும் இடங்களில் மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொள்ளத் தமிழ்நாடு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டு, அப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று, தற்போது முடிவுறும் தருவாயில் உள்ளன.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சியின் சார்பில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மழைநீர் தேக்கத்தினை அகற்ற நிரந்தரத் தீர்வாக ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின்படி மூலதன நிதியின்கீழ், ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் 46 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்;

சென்னை சென்ட்ரல் இரயில்வே நிலையம், ரிப்பன் கட்டடம், ராஜா முத்தையா சாலை, ஈ.வெ.ரா பெரியார் சாலை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மழைநீர் தேக்கத்தினை அகற்ற நிரந்தரத் தீர்வாக ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின்படி, சிங்காரச் சென்னை Phase I திட்டத்தின்கீழ், ரூ.2.06 கோடி மதிப்பீட்டில் 600 மீட்டர் நீளத்திற்கு நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்;

நெடுஞ்சாலைத்துறை சார்பில் வால்டாக்ஸ் சாலையில், சென்னை சென்ட்ரல் முதல் மூலக்கொள்ளதம் வரை ரூ.33 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் 4,600 மீட்டர் நீளத்திற்கான மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள், எட்டு குறுவடிகால்கள் (சிறுபாலங்கள்), மூன்று அணுகு கால்வாய்கள் அமைக்கும் பணிகள்;



நீர்வளத்துறைச் சார்பில் பருவமழை முன்னெச்சரிக்கைப் பணிகளை மேற்கொள்ள பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்டப் பகுதிகளில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் 31 பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன. இதில் சென்னை, பேசின் பாலத்திற்கு அருகில் வடக்குப் பக்கிங்காம் கால்வாயில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகள்;

பெருநகரச் சென்னை மாநகராட்சி சார்பில் டெமலஸ் சாலை, முனுசாமி சாலை, அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மழைநீர் தேக்கத்தினை அகற்ற நிரந்தரத் தீர்வாக ஆலோசனைக் குழு பரிந்துரையின்படி, ஆலோசகரிடமிருந்து தொழில்நுட்ப வடிவமைப்பும், சென்னை-இந்தியத் தொழில்நுட்ப கழகத்தின் (IIT) ஒப்புதலும் பெற்றுச் சிங்காரச் சென்னை Phase I திட்டத்தின்கீழ் ரூ.3.39 கோடி மதிப்பீட்டில் 725 மீட்டர் நீளத்திற்கு நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்;

திரு.வி.க. நகர் மண்டலம், புளியந்தோப்பு நெடுஞ்சாலையில் மழைநீர் தேக்கத்தினை அகற்ற நிரந்தரத் தீர்வாக ஆலோசனை குழுவின் பரிந்துரையின்படி, புளியந்தோப்பு நெடுஞ்சாலையில் மூலதன மானிய நிதியின்கீழ் ரூ.6.28 கோடி மதிப்பீட்டில் 790 மீட்டர் நீளத்திற்கு நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்;

டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலை, அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மழைநீர்த் தேக்கத்தினை அகற்ற நிரந்தரத் தீர்வாகச் சிங்காரச் சென்னை Phase I திட்டத்தின்கீழ், ரூ.2.81 கோடி மதிப்பீட்டில் 600 மீட்டர் நீளத்திற்கு நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்;

கொளத்தூர் பகுதியில் மழைநீர்த் தேக்கத்தினை அகற்ற நிரந்தரத் தீர்வாக கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியின்கீழ், 92 சாலைகளில் ரூ.96.50 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியின் ஒரு பகுதியாக வேலவன் நகர்ப் பகுதியில் பேப்பர் மில்ஸ் சாலை (பேருந்து தட சாலை) சந்திப்பில் 485 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்;

நெடுஞ்சாலைத்துறை சார்பில் கொளத்தூரில் உள்ள டெம்பிள் ஸ்கூல், வீனஸ் நகர், செல்வி நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் தேக்கத்தினை அகற்ற நிரந்தரத் தீர்வாக உள்வட்டச் சாலையில் வீனஸ் நகர், டெம்பிள் ஸ்கூல் பகுதிகளில் ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் 200 HP திறன் கொண்ட வினாடிக்கு 2.4 கன மீட்டர் நீரை வெளியேற்றும் தானியங்கி நீர் இறைப்பான் அமைக்கும் பணிகள்;

என மொத்தம், ரூ.167.08 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் தூர்வாரும் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இப்பணிகள் அனைத்தையும் அக்டோபர் மாதத்திற்குள் விரைவாகவும், தரமாகவும் முடித்திட வேண்டும் என்று தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

## மகத்தானப் பணி

**“தமிழக அரசு தேர்ந்தெடுத்துச் செயல்படுத்திவரும் அனைத்துத் திட்டங்களையும் மக்களிடம் கொண்டுசெல்லும் மகத்தானப் பணி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அப்பணியை நீங்களும் தொய்வில்லாமலும், புதிய உற்சாகத்துடனும் நிறைவேற்றி வர வேண்டும்.”**

-மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக, ஆலோசனைக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை (23.05.2021)

# சுற்றுலாத் தலங்கள் அதிகமுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகும்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சுற்றுலாத்துறை சார்பில், சுற்றுலா அலுவலகக் கட்டடம், உட்கட்டமைப்பு வசதிகள், தங்கும் விடுதி, கூட்டரங்கம் ஆகியவற்றைத் திறந்துவைத்தார். (27.09.2022)

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 27.09.2022 அன்று தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில், திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு ஓட்டலில் ரூ.4.17 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள தங்கும் விடுதி, கூட்டரங்கம், கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகரில் ரூ.60 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள சுற்றுலா அலுவலகக் கட்டடம், மதுரை, கோரிப்பாளையத்தில் அமைந்துள்ள தர்காவில் ரூ.1.80 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்துவைத்தார்.

சுற்றுலாத்துறையானது வேலைவாய்ப்புகளை அளித்தல், அன்னியச் செலாவணியினை ஈட்டுதல் ஆகியவற்றில் முக்கிய பங்காற்றுகிறது. இந்தியாவில் சுற்றுலாத் தலங்கள் அதிகமுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகும். தமிழ்நாட்டில் பல்வகையான சுற்றுலாத் தலங்கள், பிரம்மாண்டமான திருக்கோயில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலைப்பகுதிகள், அழகிய கடற்கரைகள் போன்ற பல்வேறு சுற்றுலாத் தலங்கள் பலதரப்பட்ட சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அமைந்துள்ளது. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தமிழ்நாடு இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தில் உள்ளது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத்துறையை மேம்படுத்திடத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வாயிலாகத் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

### திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு ஓட்டலில் தங்கும் விடுதி, கூட்டரங்கம்

காவிரிக் கரையில் அமைந்துள்ள அழகிய நகரமான திருச்சிராப்பள்ளி, பல்வேறு வரலாற்றுப் பெருமைகளும், இயற்கை வளமும் ஒருங்கே அமைந்த மாவட்டமாகும். மலைக்கோட்டையில்

அமைந்துள்ள உச்சிப் பிள்ளையார் கோயில், 108 திவ்ய தேசங்களில் முதன்மையானதும், முக்கியமானதாகவும் கருதப்படும் ஸ்ரீரங்கம், பஞ்சபூத நீர்த்தலமாகிய திருவானைக்காவலும், புகழ்பெற்ற சக்தி பீடமாகிய சமயபுரமும், இயற்கை எழில் கொஞ்சும் பச்சமலை, புளியஞ்சோலை, முக்கொம்பு போன்ற சுற்றுலாத் தலங்கள் இம்மாவட்டத்தில் உள்ளன. ஆண்டுதோறும் திருச்சிராப்பள்ளிக்கு வருகைபுரியும் இலட்சக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு அதிக வசதிகளை ஏற்படுத்தித்தரும் வகையில், தமிழ்நாடு ஓட்டலில் ரூ.4.17 கோடி செலவில் சுமார் 19,238 சதுரஅடி பரப்பில் தங்கும் விடுதி, பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகள், தொழில் கூட்டங்கள் நடத்துவதற்கு 110 நபர் இருக்கை வசதி கொண்ட கூட்ட அரங்கம் கட்டப்பட்டுள்ளது.

### சிதம்பரத்தில் கட்டப்பட்டுள்ள சுற்றுலா அலுவலகக் கட்டடம்

கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள வரலாற்று நினைவிடங்கள், சிறப்புமிக்க கட்டடங்கள், பழமையான கோயில்கள், சிதம்பரம் தில்லை நடராஜர் கோயில், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம், போர்ச்சுக்கீசியர்கள் வாணிபம் நடத்திய பரங்கிப்பேட்டை, சமரச சன்மார்க்க நெறிகண்ட வள்ளலார் பிறந்த வடலூர் போன்ற இடங்களுக்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளுக்குக் கடலூர் மாவட்டத்தில் உள்ள சுற்றுலாத் தலங்கள் பற்றிய தகவல்களை வழங்குவதற்கும், கடலூர் மாவட்டத்தில் நடைபெறும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை ஒருங்கிணைப்பதற்கும் சிதம்பரம் நகரில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சுற்றுலா அலுவலகம் கட்டப்பட்டுள்ளது. இதன்மூலம், கடலூர் மாவட்டத்தில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் இவ்வலுவலகத்தின் வாயிலாகச் சிறப்பாக மேற்கொள்ளப்படும்.

### மதுரை, கோரிப்பாளையத்தில் அமைந்துள்ள தர்காவில் மேற்கொள்ளப்பட்டுள்ள கூடுதல் வசதிகள்

மதுரை மாநகர், கோரிப்பாளையத்தில் அமைந்துள்ள ஹஜ்ரத் காஜா சையத் சுல்தான் அலாவுதீன் அவுலியா தர்கா மற்றும் மஸ்ஜித் வக்ஃப் 800 ஆண்டுகள் பழமைவாய்ந்த புனிதத் தலமாகும். இங்கு நடைபெறும் கந்தூரி திருவிழாவிற்கு அதிகளவில் உள்ளூர் மக்களும், சுற்றுலாப் பயணிகளும் வருகை புரிகின்றனர். இத்தர்காவிற்கு வருகைபுரியும் புனித யாத்திரிகர்கள், சுற்றுலாப் பயணிகளுக்குக் கூடுதல் வசதிகளை ஏற்படுத்தித்தரும் வகையில், ரூ.1.80 கோடி செலவில் பெண்கள், ஆண்களுக்கான ஓய்வுக்கூடங்கள், பொருட்கள் வைப்பறை, ஆண்கள், பெண்கள் கழிப்பறைகள் ஆகிய கூடுதல் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ❖

படமும் / செய்தியும்

## கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையச் செயல்பாடுகள் ஆய்வு



அரசு தலைமைச் செயலாளர் முனைவர் **வெ. இறையன்பு**, இ.ஆ.ப., அவர்கள், சென்னை நெசப்பாக்கம் கழிவுநீர் அகற்று நிலையத்தில் 10 எம்.எல்.டி. திறன்கொண்ட மூன்றாம் நிலைக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையச் செயல்பாட்டினை 11.09.2022 அன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# ரூ.360.63 கோடியில் நிறுவப்பட்டுள்ள 2,488 வளைய சுற்றுத்தர அமைப்புகள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கிவைத்தார் (28.09.2022)

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், 28.09.2022 அன்று எரிசக்தித்துறை சார்பில், சென்னை, செவாலியே சிவாஜி கணேசன் சாலையில், புதியதாக நிறுவப்பட்டுள்ள வளைய சுற்றுத்தர அமைப்பினைத் (Ring Main Unit) தொடங்கிவைத்ததோடு, சென்னை மாநகர், புறநகர் உட்பட்ட 28 சட்டமன்றத் தொகுதிகளில் ரூ.360.63 கோடி மதிப்பில் புதியதாக நிறுவப்பட்டுள்ள 2,488 வளைய சுற்றுத்தர அமைப்புகளையும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் தொடங்கிவைத்தார்.

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள அண்ணாநகர், அம்பத்தூர், ஆவடி, சேப்பாக்கம், எழும்பூர், துறைமுகம், கொளத்தூர், மாதவரம், மதுரவாயல், மைலாப்பூர், பெரம்பூர், ஆர்.கே.நகர், இராயபுரம், சைதாப்பேட்டை, தியாகராயநகர், திரு.வி.க.நகர், திருவொற்றியூர், ஆயிரம்விளக்கு, வில்லிவாக்கம், விருகம்பாக்கம், ஆலந்தூர், பூவிருந்தவல்லி, வேளச்சேரி, சோழிங்கநல்லூர், கும்மிடிப்பூண்டி, ஸ்ரீபெரும்புதூர், பல்லாவரம், தாம்பரம் ஆகிய 28 சட்டமன்றத் தொகுதிகளில் சுமார் ரூ.787 கோடி மதிப்பீட்டில் விநியோக மின்மாற்றிகள், மின்வழிப் பாதைகளுக்குப் புதியதாக 5,692 வளைய சுற்றுத்தர அமைப்புக் கருவிகள் (RMU) நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றுள், ஏற்கெனவே 216 வளைய சுற்றுத்தர அமைப்புக் கருவிகள் (RMU) ரூ.31.31 கோடிச் செலவில் மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து கொளத்தூர், சேப்பாக்கம், சைதாப்பேட்டை, துறைமுகம், ஆலந்தூர், ஆவடி, அண்ணாநகர், எழும்பூர், மயிலாப்பூர், பெரம்பூர், ஆர்.கே.நகர், இராயபுரம், தி.நகர், திரு.வி.க.நகர், ஆயிரம்விளக்கு, வில்லிவாக்கம், விருகம்பாக்கம், வேளச்சேரி, அம்பத்தூர், மாதவரம், மதுரவாயல், சோழிங்கநல்லூர், திருவொற்றியூர், பல்லாவரம், தாம்பரம், திருப்போரூர், பூந்தமல்லி, ஸ்ரீபெரும்புதூர்,



ஆகிய 28 சட்டமன்றத் தொகுதிகளில் மொத்தம் 2,488 வளைய சுற்றுத்தர அமைப்புக் கருவிகள் (RMU) ரூ.360.63 கோடிச் செலவில் நிறுவும் பணிகள் முடிவுற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்த வளைய சுற்றுத்தர கருவி அமைப்பதன் மூலம், மழைக்காலங்களில் ஏற்படும் மின்விபத்தினைத் தவிர்க்க முடியும். மேலும், ஒவ்வொரு வளைய சுற்றுத்தரக் கருவியும் குறைந்தபட்சம் இரு மின்வழிப் பாதைகளுடன் இணைக்கப்பட்டிருப்பதால், ஏதேனும் ஒரு மின்பாதையில் பழுது ஏற்பட்டாலும் மற்றொரு மின்வழிப் பாதையின் மூலம் உடனடியாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க முடியும். இதனால், பொதுமக்களுக்கு மின்தடையினால் ஏற்படும் அசௌகரியங்கள் வெகுவாகக் குறைக்கப்படும். இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள மின் வளைய சுற்றுத்தர அமைப்புக் கருவிகள் அனைத்தும் SCADA சிஸ்டம் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டிருப்பதால் தலைமையிடத்தில் இருந்தே இக்கருவிகளை இயக்க முடியும். இதனால், மின்சாரம் எடுத்துச் செல்லும் கேபிள்களில் ஏதேனும் பழுது ஏற்பட்டாலும் கூட அதனை உடனே கண்டறிந்து துரிதமாகச் சரி செய்யவும் முடியும். ●

"பசியோடு பள்ளிக்கு வரக்கூடிய பிள்ளைகள் பட்டினியாக வைத்து அவர்களுக்கு பாடம் சொல்லித் தரக் கூடாது என்று நினைத்தேன். அந்த வரிசையில், இன்றைய நாள் காலை உணவு வழங்கும் திட்டத்தைத் தொடங்கி இருக்கிறோம். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்படி நாள்தோறும் முதல்கட்டமாக 1 இலட்சத்து 14 ஆயிரம் குழந்தைகளுக்கு உணவு வழங்கப்பட இருக்கிறது. 1,545 பள்ளிகளைச் சேர்ந்த குழந்தைகள் முதல்கட்டமாகப் பயனடைய இருக்கிறார்கள்."



- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் (15.09.2022)



# வேளாண்மைத்துறையில் சிறப்பாகச் செயலாற்றும் விவசாயிகளுக்குப் பரிசு

பயிர்களின் உயர்மகசூல் பெறுவதற்கு, வேளாண்மையில் நவீன உத்திகளைப் புகுத்தி, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் நோக்கத்தில், தமிழ்நாடு அரசு பல்வேறு புதிய திட்டங்களை உள்ளடக்கி, 2021-2022ஆம் ஆண்டில் தனது முதலாவது வேளாண்மை நிதிநிலை அறிக்கையினைத் தமிழகச் சட்டமன்றத்தில் தாக்கல் செய்தது. இயற்கை வேளாண்மை, விளைபொருள் ஏற்றுமதி, வேளாண்மையில் புதிய உள்ளூர்க் கண்டுபிடிப்பு ஆகிய மூன்று இனங்களில் சிறந்து விளங்கும் விவசாயிகளை அரசு ஊக்குவித்துப் பாராட்டிப் பரிசளிக்கும் திட்டத்தினை 2021-2022ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தி, ரூ.6 இலட்சம் நிதியினை ஒப்பளித்தது, நடப்பாண்டிலும் இத்திட்டத்தினைச் செயல்படுத்தி, மேற்காணும் மூன்று இனங்களில் சிறந்து விளங்கும் விவசாயிகளைத் தொடர்ந்து ஊக்குவித்து, பாராட்டி பரிசளிக்கும் என மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள், 2022-2023ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## போட்டி மற்றும் பரிசுத் தொகை பற்றிய விபரம்

1. வேளாண்மைத்துறை மூலமாக, மாநில அளவில், உள்ளூர் புதிய விவசாயத் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடிப்பதில் சிறந்து விளங்கும் ஒரு விவசாயிக்கு ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப்பரிசும், வேளாண் பணிகளை எளிதாக்கும் வகையில், இயந்திரத்தைப் புதியதாகக் கண்டுபிடிக்கும் ஒரு விவசாயிக்கு ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப்பரிசும் வழங்கப்படும்.

2. தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை மூலமாக, மாநில அளவில் இயற்கை முறையில் தோட்டக்கலைப் பயிர்ச் சாகுபடி செய்வதில் சிறந்து விளங்கும் முதல் மூன்று விவசாயிகளுக்கு முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 60,000 ரூபாயும், மூன்றாம் பரிசாக 40,000 ரூபாயும், ரொக்கப் பரிசாக வழங்கப்படும்.

3. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலமாக, மாநில அளவில் விளைபொருள் ஏற்றுமதியில் சிறப்பாகச் செயலாற்றும் ஒரு விவசாயிக்கு, இரண்டு இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும்.

## சிறந்து விளங்கும் விவசாயிகளைத் தேர்ந்தெடுப்பது எவ்வாறு?

மேற்காணும் மூன்று இனங்களில் தகுதியான விவசாயிகளைத் தேர்வு செய்வதற்காக மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் தலைமையிலும், மாநில அளவில் வேளாண்மைத்துறை இயக்குநர், தோட்டக்கலைத்துறை இயக்குநர், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பாக, தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் தலைமைச் செயல்



அலுவலர் தலைமையிலும், தேர்வுக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### போட்டியில் கலந்துகொள்வதற்கு என்ன செய்ய வேண்டும்?

1. போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் விவசாயிகள், உழவன் செயலி மூலமாகத் தங்களது பெயர்களைப் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை முறையாகப் பூர்த்தி செய்து சமர்ப்பித்திட வேண்டும்.

2. குத்தகை முறையில் சாகுபடி செய்யும் விவசாயிகளும் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.

3. இப்போட்டிக்கான நுழைவுக் கட்டணமாக நூறு ரூபாயைச் சம்மந்தப்பட்ட வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் செலுத்தி படிவத்துடன் இணைத்திட வேண்டும்.

4. பதிவு செய்தபின், உங்கள் வட்டார வேளாண்மை உதவி இயக்குநரையோ அல்லது தோட்டக்கலை உதவி இயக்குநரையோ அல்லது வேளாண்மைப் பொறியியல் உதவி செயற்பொறியாளரையோ அல்லது வேளாண் வணிகத்துறையின் வேளாண்மை துணை இயக்குநரையோ தொடர்பு கொள்ளலாம்.

5. கடந்த ஆண்டில் இப்போட்டியில் கலந்துகொண்டு பரிசு பெறாத விவசாயிகள், தங்களது உள்ளூர் புதிய வேளாண் தொழில்நுட்பம் அல்லது புதிய இயந்திரம் ஆகியவற்றை மேம்படுத்தி நடப்பு ஆண்டிலும் பங்கேற்கலாம்.

எனவே, தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள இந்தப் போட்டியில் கலந்துகொள்வதன் மூலம், நவீனத் தொழில்நுட்பங்களைப் பின்பற்றி உயர்மகசூல் பெறுவதில் உங்களைப் போன்றே மற்ற விவசாயிகளுக்கும் ஆர்வம் அதிகம் ஏற்படும் என்பதால், வேளாண்மையில் சிறந்து விளங்கும் விவசாயிகள் இப்போட்டியில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



## தெரியுமா?

"விவசாயிகளுக்கு அவர்களுடைய விளைபொருட்களுக்கு இடைத்தரகர்களின் குறுக்கீடு இன்றி நியாயமான விலை கிடைக்க செய்வதற்காகவும் விளைபொருட்களின் வர்த்தகத்தை முறைப்படுத்துவதற்கும் 1987ஆம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் இயற்றப்பட்டு அதனை நடைமுறைப்படுத்துவதற்காக ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. 40 வேளாண் விளைபொருட்கள் ஒரே சீரான அறிவிக்கை செய்யப்பட்டு 1 சதவிகித சந்தைக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. முந்திரியைப் பொறுத்தவரையில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முந்திரிக்குச் சந்தைக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. அவ்வாறு கொண்டுவரப்படும் முந்திரி உருமாற்றம் செய்தோ அல்லது பக்குவப்படுத்தியோ தமிழ்நாட்டிலிருந்து விற்பனை செய்யும்பட்சத்தில் அந்த வர்த்தகம் சந்தைக் கட்டணம் செலுத்துவதற்கு உட்பட்டது. வேளாண் விளைபொருட்களை வேறு மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்கோ, ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கோ பரிவர்த்தனை செய்யப்படும்போது உரிய ஆவணங்கள் வைத்திருந்தால் எவ்வித கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. தக்க ஆவணங்கள் மற்றும் சந்தைக் கட்டண இரசீது வைத்திருப்போருக்கு அலுவலர்களால் இடையூறு ஏற்படின் அதன் மீதான புகார்களை 24 மணி நேரக் கைபேசி 7200818155 என்ற எண்ணில் தெரிவிக்கலாம்.

விவசாயிகள், வியாபாரிகள், பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் செயல்பட்டுவரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வணிகர்கள் ஒத்துழைப்பு நல்க கேட்டுக்கொள்ளப்படுகிறது."

# சென்னை மெட்ரோ இரயிலில் கடந்த 9 மாதங்களில் மட்டும் (01.01.2022 முதல் 30.09.2022 வரை) 4 கோடிக்கும் மேற்பட்ட பயணிகள் போக்குவரத்து வசதியைப் பயன்படுத்தியுள்ளார்கள்

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னையில் உள்ள மக்களுக்கும், மெட்ரோ இரயில் பயணிகளுக்கும் ஒரு நம்பகமான பாதுகாப்பான போக்குவரத்து வசதியை அளித்து வருகிறது.

## QR குறியீடு ஸ்கேன்

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் "இனி வரிசைகள் இல்லை, QR மட்டுமே" என்ற புத்தம் புதிய முறையை அறிமுகப்படுத்தியிருக்கிறது. பயணிகளின் வசதிகளை மேம்படுத்தும் வகையில், மெட்ரோ இரயிலில் பயணிக்க பயணிகள் மெட்ரோ இரயில் நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள QR குறியீட்டை மட்டும் ஸ்கேன் செய்தால் போதுமானது. இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் பயணிகள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பயணச்சீட்டு வழங்கும் பக்கத்திற்குச் செல்லலாம். இந்தப் பக்கத்தில், பயணிகள் செல்ல வேண்டிய மெட்ரோ இரயில் நிலையத்தையும், பணம் செலுத்தும் முறையையும் தேர்வு செய்யலாம்.

யுபிஐ, இணைய வங்கி, கடன், சேமிப்பு வங்கி போன்ற அனைத்து மின்னணு பரிவர்த்தனைகள் மூலம் பயணச்சீட்டுக் கட்டணத்தைச் செலுத்தலாம். ஆண்ட்ராய்டு கைப்பேசியில் யுபிஐ முறையைத் தேர்வு செய்தால், கைப்பேசியில் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள அனைத்து யுபிஐ செயலிகளும் வரிசைப்படுத்தப்படும். பயணிகள் இவற்றிலிருந்து ஏதேனும் ஒரு முறையைத் தேர்வு செய்து தொடர்வதற்குப் பாதுகாப்புக் கடவுச்சொல்லை மட்டும் உள்ளிட வேண்டும்.

QR டிக்கெட்டுகள் தானாகவே உருவாக்கப்பட்டுக் கைப்பேசி சாதனங்களில் பதிவிறக்கம் செய்யப்படும். தற்போது மொபைல் QR டிக்கெட்டில் 20 சதவிகிதம் கட்டண தள்ளுபடியும் வழங்கப்படுகிறது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மெட்ரோ பயணிகளுக்கு எப்போதும் சிறந்த, பாதுகாப்பான பயண அனுபவத்தை வழங்கி வருகிறது.

"இனி வரிசைகள் இல்லை, QR மட்டுமே" என்ற புத்தம் புதிய முறையை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான முதன்மைச் செயலாளர் அவர்கள் 03.08.2022 அன்று கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையத்தில் அறிமுகம் செய்து வைத்தார்.







## பயணிகளுக்குப் பரிசு

சென்னை மெட்ரோ இரயிலில் பயணிக்கும் பயணிகளுக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.1 இலட்சம் மதிப்பிலான பரிசு பொருள் வழங்கப்படும் என்று சென்னை மெட்ரோ இரயில் நிருவாகம், மார்க் மெட்ரோ நிறுவனம் ஆகியன அறிவித்திருந்தன.

அதன்படி, ஐந்தாவது மாதாந்திர அதிர்ஷ்டக் குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 30 பயணிகளுக்குச் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மார்க் மெட்ரோ உடன் இணைந்து பரிசுப் பொருள் வழங்கும் நிகழ்ச்சி கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையத்தில் 20.09.2022 அன்று நடைபெற்றது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் பரிசுகளை வழங்கினார்.

பயணிகளை ஊக்குவிக்கவும், பயனளிக்கவும் சென்னை மெட்ரோ இரயிலில் பயணிகள் தங்களது பயணத்தைத் தொடர்ந்து பயணிக்கவும், மாதாந்திர அதிர்ஷ்டக் குலுக்கல் தொடரும். இந்தப் பரிசு விவரங்களை மேலும் தெரிந்துகொள்ள அனைத்து மெட்ரோ இரயில் நிலையக் கட்டுப்பாட்டாளர்களை அணுகலாம். சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மார்க் மெட்ரோ உடன் இணைந்து இந்தப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**மாதாந்திர அதிர்ஷ்டக் குலுக்கல் – திட்ட விவரங்கள்:**

1. சென்னை மெட்ரோ இரயிலில் ஒரு மாதத்தில் அதிகபட்சமாகப் பயணம் செய்த முதல் 10 பயணிகள்.

2. மாதாந்திர அதிர்ஷ்டக் குலுக்கல் - மாதம் ஒரு பரிவர்த்தனைக்கு ரூ.1,500, அதற்குமேல் பணம் செலுத்திய 10 பயணிகள்.

3. மாதாந்திர அதிர்ஷ்டக் குலுக்கல் - சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பயண அட்டையை வாங்கி அதில் குறைந்தபட்சத் தொகையான ரூ.500க்கு டாப் அப் செய்த 10 பயணிகள்.

01.01.2022 முதல் 30.06.2022 வரை மொத்தம் 2,47,98,227 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர் 01.07.2022 முதல் 31.07.2022 வரை மொத்தம் 53,17,659 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

01.08.2022 முதல் 31.08.2022 வரை மொத்தம் 56,66,231 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

01.09.2022 முதல் 30.09.2022 வரை மொத்தம் 61,12,906 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

அதிகபட்சமாக 30.09.2022 அன்று 2,46,404 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர் மேலும், ஆகஸ்ட் மாதத்தைக் காட்டிலும் செப்டம்பர் மாதத்தில் 4,46,675 பயணிகள் அதிகமாகப் பயணித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2022 செப்டம்பர் மாதத்தில் மட்டும் க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 4,98,351 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர். மேலும், பயண அட்டைப் பயணச்சீட்டு (Travel Card Ticketing System) முறையைப் பயன்படுத்தி 38,23,810 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.




சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயில்களில் பயணிப்பவர்களுக்கு க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு, பயண அட்டைகளைப் (Travel Card) பயன்படுத்திப் பயணிக்கும் பயணிகளுக்கு 20 சதவிகிதம் கட்டணத் தள்ளுபடி வழங்கப்படுகிறது.

மெட்ரோ இரயில்கள், மெட்ரோ இரயில் நிலையங்களைப் பராமரிப்பதில் மிகுந்த ஒத்துழைப்பு நல்கிவரும் அனைத்துப் பயணிகளுக்கும் சென்னை மெட்ரோ இரயில் நிருவாகம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

***– சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்***

❖ ❖ ❖



## தெரிந்துகொள்வோம்

# "மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்"

அரசின் முதன்மைத் திட்டமான "மக்களைத் தேடி மருத்துவம்" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 05.08.2021 அன்று தொடங்கிவைக்கப்பட்டது. தொற்றா நோய்களினால் ஏற்படும் நோய்ப் பாதிப்பை எதிர்கொள்ளும் விதமாக "மக்களைத் தேடி மருத்துவம்" வடிவமைக்கப்பட்டுக் களப்பணியாளர்கள் மூலம் பயனாளிகளின் இல்லங்களிலேயே பின்வரும் சுகாதாரச் சேவைகள் வழங்கப்படுகிறது. 45 வயதும் அதற்கு மேற்பட்ட, இயலாமையில் உள்ள உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய்க்கான சிகிச்சையில் உள்ள நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகளை வழங்குதல்; நோய் ஆதரவுச் சேவைகள்; இயன்முறை மருத்துவச் சேவைகள்; சிறுநீரக நோயாளிகளைப் பராமரித்தல்; பெண்களைக் கருப்பைவாய், மார்பகப் புற்றுநோய்க் கண்டறிவதற்கான ஆய்வுக்குப் பரிந்துரைத்தல்.

இத்திட்டத்தின் கள அளவிலான குழுவில், பெண் சுகாதாரத் தன்னார்வலர்கள், நோய் ஆதரவுச் செவிலியர், இயன்முறை மருத்துவர்கள் ஆகியோர் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். அனைவருக்கும் நலவாழ்வு மையங்களில் பணியமர்த்தப்பட்ட 4,848 இடைநிலை சுகாதாரச் சேவையாளர்கள் மூலம் வழங்கப்படும் அனைத்துத் தொற்றா நோய்க்கான சேவைகளும் "மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்துடன்" ஒருங்கிணைக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

"மக்களைத் தேடி மருத்துவம்" திட்டம் முதற்கட்டமாக 50 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு, படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு அனைத்து அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள், நகர்ப்புற அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் சேவைகள் வழங்கப்படுகின்றன.

"மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தின் ஒவ்வொரு பயனாளியும் மக்கள் நலப்பதிவில் பதிவு செய்யப்பட்டுத் தொடர்ந்து கண்காணிக்கப்படுவர். 2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளி கிராமத்தில் தொடங்கப்பட்ட "மக்களைத் தேடி மருத்துவத் திட்டம்" 23.02.2022 அன்று 50 இலட்சமாவது பயனாளி என்ற இலக்கினை அடைந்துள்ளது.

இத்திட்டம் துவங்கப்பட்டு 28.08.2022 வரை மாநில அளவில் 86,43,778 பயனாளிகள் முதன்முறையாகச் சேவைகள் பெற்றுப் பயனடைந்துள்ளனர். இது தவிர 1,70,22,546 நபர்கள் இத்திட்டத்தின்கீழ்த் தொடர் சேவைகளைப் பெற்றுள்ளனர்.

**மக்களைத் தேடி மருத்துவத் திட்டப் பயனாளிகள் – 28.08.2022 வரை**

| பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட சேவைகள் | முதன்முறையாகச் சேவைகள் பெற்ற பயனாளிகள் | தொடர்ச் சேவைகள் பெற்றவர்கள் |
|---|---|---|
| உயர் இரத்த அழுத்த நோய் சிகிச்சைக்கான மருந்துகளைப் பெற்றவர்கள் | 34,23,518 | 68,30,788 |
| நீரிழிவு நோய் சிகிச்சைக்கான மருந்துகளைப் பெற்றவர்கள் | 23,86,369 | 48,93,884 |
| உயர் இரத்த அழுத்த மற்றும் நீரிழிவு நோய் சிகிச்சைக்கான மருந்துகளைப் பெற்றவர்கள் | 17,41,491 | 38,64,967 |
| நோய் ஆதரவு சிகிச்சைச் சேவைகள் பெற்றவர்கள் | 3,53,491 | 5,05,170 |
| இயன்முறை சிகிச்சைச் சேவைகள் பெற்றவர்கள் | 7,37,980 | 9,24,922 |
| சிறுநீரக நோய்க்கு சுய டயாலிசிஸ் செய்துகொள்வதற்குத் தேவையான பைகள் பெற்றவர்கள் | 929 | 2,815 |
| **மொத்தம் எண்ணிக்கை** | **86,43,778** | **1,70,22,546** |

# வலவன் ஏவா வான ஊர்தி



- முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்

விஞ்ஞானம் வளர்ந்ததாலே விண்ணூர்ந்து; இற்றைநாளில்
வியத்தகு புதுமைகளை விளைக்கின்றார் அறிவுடையார்! - முற்றிலும்

அஞ்ஞானம் நிறைந்த காலமல்ல பழங்காலம்;
அன்றைக்கும் வானத்துக் கோள்களை ஆராய்ந்து

காலமாறுதலைக் கணக்கிட்டு, கோள்களின் சுழற்சிக்
கோலமதைத் தீட்டிக்காட்டி; குமிழ் மின்னல் சிரிப்புக்

கொட்டுகின்ற விண்மீன்கள்; தாங்களிருக்குமிடம்
விட்டுப் பெயர்கின்ற நிலையறிந்து நாழிபார்த்துக் கூறி;

கதிரவனைச் சந்திரனைப் பூமியின் நிழல் சூழ்ந்து – நம்
கண்ணுக்கு ஒருநாள் மறைக்கின்ற 'கிரகணம்' வருகின்ற

நாளைக்கூட நமது முன்னோர் வானநூல் இயற்றித்தந்து
வேளைதவறாமல் விரித்துரைத்தார் எனல் வேடிக்கையல்ல!

ஒளிபெற்று வாழ்ந்த நாமோ; திடுமென இருட்டில் வீழ்ந்தோம்!
வெளிநாட்டு விஞ்ஞான வளமோ; விரிந்தது வான் முகட்டில்!

தேய்ந்து வளரும் திங்களை நாம் தெய்வமென்றோம்
தினம் வந்து கடமையாற்றும் சூரியனைத் தேவனென்றோம்

ஓய்ந்திருக்கும் வேளையிலே உப்பில்லாக் கற்பனையில்
சாய்ந்து சயனித்துக் கிடந்தோமன்றி - முன்னோர்

ஆய்ந்தறிந்து வகுத்திட்ட வானநூற் புதுமைகளை வறட்சியினால்
காய்ந்த பயிர் ஆக்கிவிட்டு மடமைக் கதைகளிலே மாய்ந்துபோனோம்!

இலக்கியத் தமிழ் இன்பம் பருகுதற்கு முற்பட்டு
இனிய சங்கப் பாடல் ஒன்றில் கண்புதைத்தபோது;

இதயத்தைப் பூரிப்பால் நனைக்கின்ற ஒரு செய்தி! அதனை
எடுத்தெழுதி உம்மையெலாம், "நான் பெற்ற இன்பம்;

பெறுக நீவிர்!" என உவகையுடன் அழைக்கின்றேன்.
பெருமை மிகு தமிழகத்தின் பழஞ்சிறப்புக் காண வாரீர்!

முடியுடைச் சோழன் நலங்கிள்ளியின் கீர்த்திபாடும்
முதுகண்ணன் சாத்தனார் எனும் உறையூர்ப்புலவர்;

வளர்தலும், தேய்தலும், பிறத்தலும், இறத்தலும்
வாடிக்கையாய்க் கொண்டதிவ் வுலகமென்றும்,

வருந்தி வந்தோர்க்கு வழங்கிடும் வள்ளலாய்
வாழ்வதே மண்ணாளும் அரசுக்கு மாண்பென்றும்,

போற்றுதற்கிடையே பொன்மொழி புகன்று
ஊற்றுப் பெருக்காய் உதவிடுக வறியோர்க்கென்றார்!

மற்றும்

வழிவழியாக இவ்வையகம் தனிலே
வாழ்ந்து மறைந்தோர்; எண்ணிலடங்கார்!

சேற்றில் முளைத்திடும் செந்தாமரையின்
செழிப்புறு இதழ்கள் பலவே ஆயினும்

வேற்றுமை காண இயலா அளவில்
விளங்கும் எழிலைக் காணுதல் எளிது!

சாற்றுவேன் ஒன்று, சரியெனத் தோன்றியதை; இந்த
செகத்தினில் உதித்தோர் பலரில் சிலரே - உண்மைப்

புலவர் பாடிடும் புகழுக்குரியோர் – மற்றும்
பலரோ தாமரையிலை எனப் பொலிவிழந்து போயினர்!

இதழின் அழகுக்கும் இலையின் பயனிலாத் தன்மைக்கும்
இப்படியோர் உவமையைப் பொருத்திய புலவர்;

பாவலர் ஏத்திடும் பாராட்டுக்குரிய மன்னர் – இந்தப்
பாரில் எய்திடும் புகழின் உயர்வைக் காட்டுவார்; கவிதையில்!

அதாவது,

வலவன் எனும் ஓட்டுபவன் இல்லாமலே
வானில் பறந்திடும் ஊர்தியில் செல்லும்

வாய்ப்பினை எய்திடும் வகை கிடைத்தோர்க்கு;
வாழ்வின் உயர்வு - அந்த வானின் உயர்வாம்!

வைரமென ஒளிபொழியும் இப்புறப்பாட்டில்;
"வலவன் ஏவா வான ஊர்தி" என வருதலாலே

வலவன் ஏவுகின்ற வான ஊர்தியும் அக்காலம்
வழக்கத்தில் இருந்ததெனக் கொள்ளலாம் அன்றோ?

ஆதியிலே அறிவியலில் அக்கறை காட்டியதால்; வான
வீதியிலே வலவரென்போர் ஊர்தியினைச் செலுத்தியிருக்கவும் கூடும்!

பாதியிலே படையெடுத்த பத்தாம்பசலி எண்ணத்தினால்
பகுத்தறிவுக்கு வேலையின்றிப் பாழ்பட்டுப் போனதம்மா இந்த நாடு!

பாவாணர் முதுகண்ணன் சாத்தனார்; சோழனைப்
பாராட்டி எடுத்து வைத்த அறிவுரையில் - என்

பார்வையினை இந்தச் செய்தி ஈர்த்ததினால் – நீவிரும்
படித்தாய்ந்து உரைத்திடுக எனப் படைத்திட்டேன்; பிழையெனில் திருத்திடுவீர்!

ஏற்றுக்கொள்வேன்!'

***********

"சேற்றுவளர் தாமரை பயந்த, ஒண் கேழ்,
நூற்றிதழ் அலரின் நிறைகண் டன்ன,
வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து,
வீற்றிருந் தோரை எண்ணுங் காலை,
உரையும் பாட்டும் உடையோர் சிலரே;

மரை இலை போல மாய்ந்திசினோர் பலரே;
புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி

எய்துப, என்ப, தம் செய்வினை முடித்து எனக்
கேட்பல்: எந்தை! சேட்சென்னி! நலங்கிள்ளி!
தேய்தல் உண்மையும், பெருகல் உண்மையும்,
மாய்தல் உண்மையும், பிறத்தல் உண்மையும்,
அறியா தோரையும், அறியக் காட்டித்,
திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து
வல்லார் ஆயினும், வல்லுநர் ஆயினும்,
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி,
அருள் வல்லை ஆகுமதி: அருளிலர்
கொடா அமை வல்லர் ஆகுக;
கெடாஅத் துப்பின்நின் பகைஎதிர்ந் தோரே."

*புறநானூறு: பாடல்: 27*
*பாடியவர்: உறையூர் முதுகண்ணன் சாத்தனார்)*

**பொருள் விளக்கம்:**

பயந்த = பூத்த. ஒண்கேழ் = ஒளிபொருந்திய நிறம்.
விழுத்திணை = உயர்குடி. மரை இலை = தாமரையிலை.
விசும்பு = ஆகாயம். வலவன் = செலுத்துபவன், ஓட்டுபவன்.
பாகன், திங்கள் புத்தேள் திரிதரும் உலகம் = திங்களெனும்
புதுமை இயங்குகின்ற உலகம்.

***– கலைஞரின் சங்கத்தமிழ் நூலிலிருந்து...***

நவம்பர் 8 : தமிழறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் பிறந்தநாள்

# தமிழுணர்வு ஊட்டிய வீரமாமுனிவர்

"சதுரகராதி" தந்த வீரமாமுனிவர். இவர் மதகுருவாகத்தான் தமிழகத்திற்கு வருகை புரிந்தார். தொடக்கத்திலே 1710 என்று எனக்கு நினைவு. அப்போது கோவாவிலே வந்து அவர் இறங்கினார். பின்னர் நெல்லை, திருச்சி, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் தங்கி கிறிஸ்துவ சமயத் தொண்டினை ஆற்றினார். அத்துடன் தமிழ் கற்று நூல் படைக்கும் திறனும் பெற்றார். தமிழ்த் துறவியைப்போல உடையிலும் நடையிலும் உணவிலும் ஒரு மாற்றத்தையே செய்து கொண்டார். முனிவர் வீரமா முனிவராக ஏற்றம் பெற்றார். அவர் அகரம் முதல் லகரம் வரை தமிழ் மொழியிலே உள்ள சொற்களை எல்லாம் தொகுத்து "சதுரகராதி" என்ற நூலை உருவாக்கினார்.

தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூல் வீரமாமுனிவரால் எழுதப்பட்டது. திருக்குறள் நூலின் அறத்துப் பாலையும் பொருட்பாலையும் லத்தீன் மொழியிலே மொழி பெயர்த்த பெருமை வீரமாமுனிவருக்குண்டு. இப்படித் தமிழகத்திலே மதப் பிரச்சாரத்திற்காக என்று வந்து அந்த உணர்வுகளை மாத்திரம் மக்களிடத்திலே எழுப்பாமல் அதோடு தமிழ் உணர்வையும் ஊட்டிய பெருமைக்குரியவர் வீரமாமுனிவர்.



- முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள் 14.07.1999 அன்று
மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்துவ ஆய்வு மையம்
தொடங்குவதற்கு நிதி வழங்கும் விழாவில் ஆற்றிய உரை.

## நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் பிறந்தநாள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 01.10.2022 அன்று நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 95ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, அடையாறு, சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் உள்ள சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

## நவம்பர் 23: கவிஞர் சுரதா அவர்களின் பிறந்தநாள்

# “என் செயல் தமிழே”



என்மொழி தமிழே அந்த
எழில்மொழி தேனின் தேக்கம்!
என்மொழி தமிழே அந்த
எழில்மொழி எனக்குத் தாய்ப்பால்!

என்மனம் என்றன் எண்ணம்
என்செயல் தமிழே என்பேன்.
என் குரல் என்றன் பாடல்
என்சுவை அதுவே என்பேன்.

சீரறிந்த நீதிகளில் நெஞ்சம் வைப்பேன்.
சித்திரத்தில் அன்றாடம் விழிகள் வைப்பேன்.
பாரறிந்த பைந்தமிழ் அழிக்க வேண்டிப்
படைவந்தே எதிர்த்தாலும் அஞ்ச மாட்டேன்.

**– உவமைக் கவிஞர் சுரதா**



## செப்டம்பர் 27: சி.பா. ஆதித்தனார் அவர்களின் பிறந்தநாள்

# "தமிழ் இதழியலின் முன்னோடி"

தமிழ் இதழியலின் முன்னோடியான
சி.பா.ஆதித்தனார் அவர்களது
118ஆவது பிறந்தநாள் இன்று!
உண்மையின் பக்கம் நின்று,
மனித சமூகம் முன்னேற்றம் அடைவதற்கான
முற்போக்குச் சிந்தனைகளைப்
பாமர மக்களிடமும் கொண்டு செல்லும்
இதழியல் பணிக்கு வேர் அவர்!
பொய்கள் சூழ் உலகில்
இதழியலுக்கு அறமே அச்சாணி!



— மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைத்தளப் பதிவு (27.09.2022)

tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in


படமும்/செய்தியும்

# தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் அவர்களின் 118ஆவது பிறந்தநாள்



தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் அவர்களின் 118ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், 27.09.2022 அன்று சென்னை, எழும்பூரில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, அருகில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் திருவுருவப்படத்திற்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர், அரசு உயர் அலுவலர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

**நவம்பர் 14: பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்தநாள்**



# ‘இந்திய ஞாலத்தின் தலைவர்’

மதம் கடவுள் நம்பிக்கை இவைகளிலே
அவர் கொள்கை தனி எனினும் பிறர்
மனம் புண்படாமல் நல்வழியில் ஆட்சி செய்தார்!
தன் மரணத்தின் பின்னாலே மதச் சடங்கு வேண்டாமெனத்
தக்க தருணத்தில் உயிலெழுதி உலகிற்கு ஒளி செய்தார்
நடுநிலைத் தன்மை நலமெனக் கொண்டு
நானிலம் போற்ற நமது பூங்குன்றனார் நவின்ற
“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற மொழிக்குத்
தோதாய்க் கொள்கை தொகுத்தே சொன்னார்.

காலத்தின் கோலம் காட்டுக்கு ராஜாவாய்க் கர்த்தபம் ஆகும்
ஏலத்தில் சில பேர் கோபுர உச்சியில் குந்திக்கொள்வர்! ‘இந்திய
ஞாலத்தின் தலைவராய்’ ஜவகர் ஆனது இவ்விதமல்ல! அவர்
சேலத்து மாம்பழம் - சென்னைக் கடற்கரை-
கொள்கை முத்து - கொள்ளேகால் பட்டு-
தஞ்சைக் கோயில் - தண்புனல் காவிரி-
தறியில் காஞ்சி - தடந்தோள் பாண்டியன் –

- சென்னையில் 14.11.1970 அன்று “நேரு கண்ட ஜனநாயகம்”
என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில்
முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்களின் தலைமைக் கவிதையிலிருந்து...

## பெரியவர் எம்.பக்தவத்சலம் அவர்களின் 125ஆவது பிறந்தநாள்

படமும் / செய்தியும்



பெரியவர் எம். பக்தவத்சலம் அவர்களின் 125ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், 09.10.2022 அன்று சென்னை, கிண்டி காந்தி மண்டபத்தில் அமைந்துள்ள, அன்னாரது திருவுருவச்சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சித் துணை மேயர், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.




செப்டம்பர் 16 : எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் அவர்களின் பிறந்தநாள்

# “விடுதலைப் போராட்ட வீரர்”

விடுதலைப் போராட்ட வீரராக நாட்டின் விடுதலைக்கும், பின்னாளில் அமைச்சராக மாநிலத்தின் வளர்ச்சிக்கும், சமூகநீதிக் களத்தில் வன்னியர் சமுதாயத்தின் முன்னேற்றத்துக்காகவும் பாடுபட்ட ஐயா எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் அவர்களின் பிறந்தநாளில் அவரது பங்களிப்புகளை நினைவுகூர்ந்து வணங்குகிறேன்.

— மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைத்தளப் பதிவு (16.09.2022)

tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

படமும்/செய்தியும்

# எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் அவர்களின் 105ஆவது பிறந்தநாள்




இராமசாமி படையாட்சியார் அவர்களின் 105ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், 16.09.2022 அன்று சென்னை, கிண்டி ஹால்டா அருகில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர், துணை மேயர், சட்டமன்ற உறுப்பினர், தமிழ்வளர்ச்சி, செய்தித்துறை அரசுச் செயலாளர் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

படமும் செய்தியும்

## முன்னாள் மேயர் சிவராஜ் அவர்களின் 131ஆவது பிறந்தநாள்





முன்னாள் மேயர் சிவராஜ் அவர்களின் 131ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், 29.09.2022 அன்று, சென்னை, தங்கசாலை சந்திப்பில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் திரு. மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

படமும்/செய்தியும்

## மகாகவி பாரதியார் அவர்களின் நினைவுநாள்





மகாகவி பாரதியாரின் நினைவு நாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் 11.09.2022 அன்று சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள மகாகவி பாரதியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர், துணை மேயர், சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர், அரசு உயர் அலுவலர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

# "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தால்" பசி தீர்ந்தது, உள்ளம் உற்சாகமானது



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மாணவர்கள் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார். நகரம், கிராமப்புரப் பகுதிகளில் பள்ளிக்குச் செல்லக்கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுவதாலும், குடும்பச் சூழல் காரணமாகவும் பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவதில்லை. இதனையறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அரசு பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்குக் காலை நேரத்தில் உணவு வழங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க "முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டத்தினை" அறிவித்து, 15.09.2022 அன்று மதுரை மாநகரில் உள்ள ஆதிமூலம் மாநகராட்சிப் பள்ளியில் தொடங்கி வைத்தார்கள்.

இதனைத் தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், துறையூர் ஊராட்சி ஒன்றியம், நடுவலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் 16.09.2022 அன்று 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்குக் காலை உணவினை வழங்கித் தொடங்கி வைத்தார்.

ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் பாதிக்கப்படாமலிருத்தல், ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல், பள்ளிகளில் மாணவர்களின் வருகையை அதிகரித்தல், வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையைக் குறைத்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருவதை நாம் அறிவோம்.

அதன்படி, பள்ளிகளில் காலை உணவு வழங்குவதால் மாணவர்கள் கற்றல் திறன் மேம்படுவதாகவும், மாணவர் வருகை அதிகரிப்பதாகவும், சம்பந்தப்பட்ட பள்ளிகளின் ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். பள்ளிகளில் வாரந்தோறும் திங்கட்கிழமை ரவா உப்புமாவுடன் காய்கறிச் சாம்பார், செவ்வாய்க்கிழமை சேமியா காய்கறி கிச்சடி, புதன்கிழமை வெண்

பொங்கலுடன் காய்கறிச் சாம்பார், வியாழக்கிழமை அரிசி உப்புமாவுடன் காய்கறிச் சாம்பார், வெள்ளிக்கிழமை ரவா கேசரியுடன் சேமியா காய்கறிக் கிச்சடி ஆகியவை மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படுகிறது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்த சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிருவாகத்துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், பள்ளிக் கல்வித்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் மற்றும் உணவு பாதுகாப்புத்துறை ஆகிய துறைகளின் அலுவலர்களைக் கொண்ட மாநில, மாவட்ட, பள்ளி அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு இத்திட்டத்தின் செயல்பாடு கண்காணிக்கப்படுகிறது.

**இத்திட்டம் குறித்துத் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.மா.பிரதீப் குமார், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாணவ, மாணவியர்களின் கல்வி வளர்ச்சிக்காக இல்லம் தேடிக் கல்வி, நான் முதல்வன், புதுமைப்பெண் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களையும் சிறப்புடன் செயல்படுத்தப் படுகிறது. தற்போது. மேலும், ஒரு சிறப்புத் திட்டமாக, இந்தியாவிற்கே முன்மாதிரியாக, அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்குக் காலையில் ஊட்டச்சத்து மிகுந்த உணவினை உண்டு கல்வி பயில்கின்ற வகையில் “முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்” செயல்படுத்தப்பட்டுள்ளதை மக்கள் பெரிதும் பாராட்டி வரவேற்கின்றனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், முதற்கட்டமாகத் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் 40 பள்ளிகளிலும் துறையூர் ஒன்றியத்தில் 41 பள்ளிகளிலும் என மொத்தம் 81 பள்ளிகளில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சிப் பகுதியில் 40 பள்ளிகளில் 2,928 மாணவ, மாணவியர்களுக்கும், துறையூர் ஒன்றியத்தில் உள்ள 41 பள்ளிகளில் 2,705 மாணவ, மாணவியர்களுக்கும் என 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 5,633 மாணவ, மாணவியர்களுக்குக் காலை உணவு வழங்கப்பட்டுப் பயன்பெற்று வருகின்றனர். திருச்சிராப்பள்ளி மாநகராட்சிப் பகுதியில் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு அரசு சையது முர்துசா மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ஒருங்கிணைந்த சமையல் கூடம் அமைக்கப்பட்டு வெளி ஆதாரமுறையில் (Outsourcing) காலை உணவு தயாரிக்கப்பட்டு 2,928 மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படுகிறது. துறையூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 41 தொடக்கப் பள்ளிகளில் அங்குள்ள சத்துணவு மையங்களில் பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவிக் குழுவினரால் காலை உணவு தயாரிக்கப்பட்டு 2,705 மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இத்திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்படும்போது கூடுதலாக 1,488 பள்ளிகளில் பயிலும் 1,96,733 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுவார்கள்.

**இத்திட்டத்தின்கீழ்ப் பயனடைந்த திருச்சி, பச்சமலைப் பகுதியில் படிக்கும் மாணவ, மாணவியின் பெற்றோர் செல்வி, பழனிமுருகன் தெரிவித்ததாவது:**



மாணவ, மாணவியின் பெற்றோர் செல்வி, பழனிமுருகன்

பழங்குடியின மக்களாகிய நாங்கள் துறையூர் ஊராட்சி ஒன்றியம், பச்சமலையில் உள்ள தோனூர் கிராமத்தில் கூலி வேலை செய்து வாழ்ந்து வருகிறோம். எங்களுக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். எங்களது மகன் தர்னிஷ்குமார் ஐந்தாம் வகுப்பும், மகள் ஜனனி முதல் வகுப்பும் கோவிந்தாபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் படித்து வருகின்றனர். உண்மையாகவே இந்தக் காலை உணவுத் திட்டமானது எங்களுடைய குழந்தைகளுக்கு மிகவும் உதவிகரமாக உள்ளது. குழந்தைகள் காலையில் பள்ளிக்குச் செல்லும்போது அவசர அவசரமாக ஏதேனும் இருப்பதை சாப்பிடக் கொடுத்துப் பள்ளிக்கு அனுப்பி வைப்போம். சில நேரங்களில் காலை உணவு சாப்பிடாமலே குழந்தைகள் பள்ளிக்குச் சென்று விடுவார்கள். ஆனால் இந்தத் திட்டத்தின் மூலம் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவினைக் கொடுப்பது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. மேலும், பாடங்களையும் நல்ல முறையில் கவனித்துப் படிக்கிறார்கள். எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்தச் சிறப்பான காலை உணவுத் திட்டத்தை வழங்கிய முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு எங்களது குடும்பத்தின் சார்பாகவும், பச்சமலைவாழ்ப் பழங்குடியின மக்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம் என உவகை பொங்கத் தெரிவித்தனர்.

**இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த திருச்சி புத்தூர் மாநகராட்சித் தொடக்கப் பள்ளியில் 5ஆம் வகுப்புப் படிக்கும் மாணவி முகிதா ஸ்ரீ வர்ஷா தெரிவித்ததாவது:**

எனது பெயர் முகிதா ஸ்ரீ வர்ஷா. நான் புத்தூர் மாநகராட்சித் தொடக்கப் பள்ளியில் 5ஆம் வகுப்பு படித்து வருகிறேன். எனது தங்கை முகில் யாழினி இதே பள்ளியில் முதல் வகுப்புப் படித்து வருகிறார். எனது தந்தை ஹோட்டலில் கூலி வேலை செய்து வருவதால் காலையிலேயே வேலைக்குச் சென்று விடுவார். எனது அம்மா கைக்குழந்தையான எனது தம்பியினைக் கவனித்துக் கொள்வதால் காலை உணவு சாப்பிட்டுப் பள்ளிக்கு வருவது கஷ்டமாக இருந்தது. சில நேரங்களில் சாப்பிடாமல் பள்ளிக்கு வருவதால் பாடத்தைக் கவனிப்பது சிரமமாக இருந்தது. தூக்க மயக்கமாகவும் இருக்கும். இப்போது முதலமைச்சர் அய்யா கொண்டு வந்த காலை உணவுத் திட்டத்தில் உணவு சாப்பிடுவதால் பசி தீர்ந்து உள்ளம் உற்சாகமாக இருக்கிறது. இதனால் நானும் என் தங்கையும் தற்போது படிப்பில் கவனம் செலுத்திப் படிக்க முடிகிறது. முதலமைச்சர் அய்யாவிற்கு நாங்க ரொம்ப நன்றி தெரிவிச்சிக்கிறோம் எனப் புன்முறுவலுடன் நன்றி தெரிவித்தார்.



மாணவி முகிதா ஸ்ரீ வர்ஷா

இதைப் போன்றே இப்பள்ளியில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களிடமும் உற்சாகத்தைக் காணமுடிந்தது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மாணவ, மாணவியர்களுக்குப் பசியைத் தீர்ப்பதுடன் அவர்கள் உற்சாகமாகக் கல்வி பயிலவும் நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த மாணவ, மாணவியர்களுடைய பெற்றோர் மட்டும் அல்லாது பொதுமக்களும் இத்திட்டத்தினை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பெரிதும் நன்றி தெரிவித்துப் பாராட்டுகின்றனர்.

தொகுப்பு
உதவி இயக்குநர்,
செய்திமக்கள் தொடர்பு அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

# மாணவிகள் உயர்ந்த கல்வியினைப் பெற்றுச் சமுதாயத்தில் சிறந்த நிலையை அடைந்திடும் வகையில் “புதுமைப்பெண்” திட்டத்தின்கீழ் 383 கல்லூரி மாணவிகள் பயனடைந்துள்ளனர்






**மா**நிலத்தின் அனைத்து வளர்ச்சியிலும் பெண்களுக்கு உரிய இடம் வழங்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை என்ற பெயரைச் “சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை” என மாற்றம் செய்துள்ளது. பெண்கள், குழந்தைகள், மூத்த குடிமக்கள், திருநங்கையர் போன்றவர்களின் நலனைக் காத்திடும் வகையில் அரசு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், பெண்கல்வியைப் போற்றும் விதமாகவும், உயர்கல்வியை உறுதி செய்து இன்றைய பெண் சமூகம் நாளைய தமிழகத்தைத் தாங்கும் அறிவியல் வல்லுநர்களாகவும், மருத்துவராகவும், பொறியாளராகவும், படைப்பியலாளராகவும், நல்ல குடிமக்களைப் பேணும் உயர்கல்வி கற்ற பெண்களாகவும், கல்வியறிவு, தொழில்நுட்பம் நிறைந்த உழைக்கும் சமூகத்தைச் சார்ந்தவராகவும், உருவாக அடித்தளமாகப் “புதுமைப் பெண்” என்னும் உன்னதத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு தில்லி முதலமைச்சர் திரு.அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள், மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் அவர்கள் ஆகியோர்

முன்னிலையில் 05.09.2022 அன்று சென்னை, பாரதி மகளிர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தின்கீழ், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வீதம் உதவித் தொகை வழங்கும் "புதுமைப் பெண்" திட்டத்தினைத் தொடங்கிவைத்தார்.

இத்திட்டத்தின் மூலம், பெண்களுக்கு உயர் கல்வி அளித்து, பாலினச் சமத்துவத்தை ஏற்படுத்துதல், குழந்தைத் திருமணத்தைத் தடுத்தல், குடும்பச் சூழ்நிலை மற்றும் வறுமை காரணமாக மேற்படிப்புப் படிக்க இயலாத மாணவிகளுக்குப் பொருளாதார ரீதியாக உதவுதல், பெண் குழந்தைகளின் இடைநிற்றல் விகிதத்தைக் குறைத்தல், பெண் குழந்தைகளின் விருப்பத் தேர்வுகளின்படி அவர்களின் மேற்படிப்பைத் தொடர ஊக்குவித்தல், உயர் கல்வியினால் பெண்களின் திறமையை ஊக்கப்படுத்தி அனைத்துத் துறைகளிலும் பங்கேற்கச் செய்தல், உயர்கல்வி உறுதித் திட்டத்தின் மூலம் பெண்களுக்கான தொழில் வாய்ப்புகளை அதிகரித்தல், பெண்களின் சமூக, பொருளாதாரப் பாதுகாப்பை உறுதி செய்தல் போன்றவற்றின் மூலம் அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்க வழிவகை செய்யப்படுகிறது.

**இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசுப் பள்ளிகளில் படித்து உயர்கல்வி படிக்கும் மாணவ, மாணவிகளுக்குப் புதுமைப்பெண் திட்டத்தினை உருவாக்கி செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டத்தின்கீழ்ப் பயன்பெறும் மாணவிகள் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்தும், தமிழ்நாட்டில் உயர்கல்வி பயில்பவராக இருத்தல் வேண்டும் அல்லது தனியார் பள்ளிகளில் கல்வி உரிமைத் திட்டத்தின்கீழ் 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயின்று 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்த மாணவியர்களாக இருத்தல் வேண்டும். மாணவிகள் 8ஆம் வகுப்பு அல்லது 10ஆம் வகுப்பு அல்லது 12ஆம் வகுப்புகளில் படித்துப் பின்னர், முதன்முறையாக உயர்கல்வி நிறுவனங்களில் (Higher Education Institutions) சேரும் படிப்புக்கு மட்டுமே இத்திட்டம் பொருந்தும்.

புதுமைப் பெண் திட்டத்தில், சான்றிதழ் படிப்பு (Certificate Course), பட்டயப் படிப்பு (Diploma/ ITI.,/D.TEd., Courses), இளங்கலைப் பட்டம் (Bachelor Degree - B.A., B.Sc., B.Com., B.B.A, B.C.A., and all Arts & Science, Fine Arts Courses), தொழில் சார்ந்த படிப்பு (B.E., B.Tech., M.B.B.S., B.D.S. B.Sc., (Agri.), B.V.Sc., B.Fsc., B.L., etc.,) மற்றும் பாரா மெடிக்கல் படிப்பு (Nursing, Pharmacy, Medical Lab Technology, Physiotherapy etc.,) போன்ற படிப்புகளைப் பயிலும் மாணவிகளுக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படும்.

மேலும், முதலாம் ஆண்டிலிருந்து இரண்டாம் ஆண்டு செல்லும் மாணவியரும், இரண்டாம் ஆண்டிலிருந்து மூன்றாம் ஆண்டு செல்லும் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவியர்களும், தொழிற்கல்வியைப் பொருத்தமட்டில், மூன்றாம் ஆண்டிலிருந்து நான்காம் ஆண்டிற்குச் செல்லும் மாணவிகளுக்கும், மருத்துவக் கல்வியைப் பொருத்தமட்டில், நான்காம் ஆண்டிலிருந்து ஐந்தாம் ஆண்டு செல்லும் மாணவியர்களும் இத்திட்டத்தின்கீழ்ப் பயனடைவர்.

அந்த வகையில், தூத்துக்குடி மாவட்டத்தில் முதற்கட்டமாகக் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 131 மாணவிகளும், சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 46 மாணவிகளும், விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 20 மாணவிகளும், ஆழ்வார்த் திருநகரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 17 மாணவிகளும், திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 69 மாணவிகளும், ஸ்ரீவைகுண்டம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 52 மாணவிகளும், தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட 48 மாணவிகள் என மொத்தம் 383 கல்லூரி மாணவிகள் பயன்பெறும் வகையில் வேலைவாய்ப்பு வழிகாட்டிப் புத்தகம், நிதிக்கல்வி புத்தகம் அடங்கிய "புதுமைப் பெண்" பெட்டகப்பை, வங்கி பற்று அட்டை (Debit Card) ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. மேலும், தொடர்ந்து இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதன் வாயிலாக மாணவிகள் உயர்ந்த கல்வியினைப் பெற்றுச் சமுதாயத்தில் சிறந்த நிலையை அடைந்திட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**இத்திட்டத்தில் பயன்பெற்ற எட்டயபுரம் அரசு பாலிடெக்னிக் கல்லூரியைச் சார்ந்த மூன்றாமாண்டு பயிலும் மாணவி எம்.மலர்விழி தெரிவித்ததாவது:**


மாணவி எம்.மலர்விழி

எனது தந்தை பெயர் மணிகண்டன். தாயார் பெயர் செண்பகவல்லி, ஒரு சகோதரனுடன் படர்ந்தபுளி பகுதியில் வசித்து வருகிறேன். எனது பெற்றோர் கூலி வேலை செய்து வருகிறார்கள். எனவே கூலி வேலையில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு எங்களைப் படிக்க வைக்க மிகவும் சிரமம் ஏற்பட்டதால் ஐ.டி.ஐ. முதலாமாண்டு படித்துக்கொண்டிருந்த எனது சகோதரன் படிப்பை இடையில் நிறுத்திவிட்டுக் குடும்பசூழல் காரணமாக பெட்ரோல் பங்கில் பணிபுரிந்து வருகிறார். அதில் கிடைக்கும் வருமானத்தில் எனது படிப்புச் செலவினை மேற்கொண்டு வருகிறார்கள். கஷ்டத்தின் மத்தியில் இரண்டு ஆண்டு படிப்பினை முடித்து மூன்றாமாண்டு படித்துக் கொண்டிருக்கிறேன். தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதுமைப்பெண் திட்டத்தை அறிவித்து இதன் வாயிலாக மாதம் ரூ.1,000 உதவித்தொகை வழங்குகிறார்கள். இந்த உதவித்தொகையானது என்னுடைய மூன்றாமாண்டு படிப்புக்கு மிகவும் பேருதவியாக இருக்கிறது. என் போன்ற ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவிகள் உயர்கல்வி பயில்வதற்கு இவ்வுதவித்தொகை ஊன்றுகோலாக இருக்கும். இத்திட்டத்தைத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இத்திட்டத்தில் பயன்பெற்ற கீழஈரால் டான் போஸ்கோ கல்லூரியைச் சார்ந்த இரண்டாமாண்டு பயிலும் மாணவி துர்காதேவி தெரிவித்ததாவது:**


மாணவி துர்காதேவி

நான் எனது தந்தை கந்தசாமி, தாயார் காளியம்மாள், அக்காவுடன் கே.குமரெட்டியாபுரத்தில் வசித்து வருகிறேன். எனது தந்தை விவசாயத் தொழில் செய்து வருகிறார். அக்கா கல்லூரி படித்து வருகிறார். நான் கீழஈரால் டான் போஸ்கோ கல்லூரியில் இரண்டாமாண்டு படித்து வருகிறேன். எனது ஊரில் இருந்து நான் படிக்கும் கல்லூரி 9 கி.மீ. தொலைவில் உள்ளது. தினந்தோறும் கல்லூரி வாகனத்தில் கல்லூரி சென்று வருகிறேன். வாகனக் கட்டணம் செலுத்துவதற்குச் சிரமமாக இருந்தது. தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதுமைப்பெண் திட்டத்தினை உருவாக்கி, என் போன்ற அரசு பள்ளிகளில் படித்து உயர் கல்வி பயிலும் மாணவியர்களுக்கு மாதந்தோறும் தலா ரூ.1,000 வழங்கியிருக்கிறார்கள். இத்தொகை எனது கல்லூரி வாகனக் கட்டணத்திற்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. எனவே, இத்திட்டத்தினை உருவாக்கி செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு விவசாயக் குடும்பத்தினர் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வி என்னும் நிரந்தரச் சொத்தினை பெண்கள் அனைவரும் பெற்றிட வேண்டும் என்ற பெண்ணுரிமைக் கொள்கையின் மறு உருவமாகவும், பெண் சமுதாயத்தின் வாழ்வில் ஒளியேற்றி வலிமையான பொருளாதாரத்தில் தன்னிறைவு அடையவும் இப்புதுமைப் பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தொகுப்பு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தூத்துக்குடி மாவட்டம்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 05.10.2022 அன்று சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற வள்ளலார் முப்பெரும் விழாவில், ‘‘தனிப்பெருங்கருணை நாளை’’ முன்னிட்டு ஆண்டு முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

# தமிழரசு

**Tamilarasu**

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

*Date of Publication : 2nd week of every month*
*Date of Posting : 27th - 30th of every month*



கொளத்தூர்



வால்டாக்ஸ் சாலை



பேசின் பாலம்

**மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின்
அவர்கள்,
சென்னையில்
பல்வேறு இடங்களில்
நடைபெற்றுவரும் மழைநீர்
வடிகால் அமைக்கும்
பணிகளை 08.10.2022
அன்று பார்வையிட்டு
ஆய்வு செய்தார்.**



நேதாஜி சுபாஷ்
சந்திரபோஸ் சாலை



புளியந்தோப்பு

Published by Dr.V.P. JEYASEELAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr.V.P. JEYASEELAN, I.A.S.,